# ஜவஹரின் பர்மா விஜயம்



1937.

அ 3·80
4644

# ஜவஹரின் பர்மா விஜயம்

Due date:
16.11.77

[redacted]

PRESENTED BY:
V. PR. PL. M.
RAMVISWANATHAN CHETTIAR
PAGANERI.

Y.M.C. ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

விலை ஐந்தணா

திருவள்ளுவர் நூல் நிலையம்

P.L.M.K. Valliappan Chettiar

4644



ஜவஹரின் செல்வி இந்திரா தேவி.



(7—5—37) ரங்கூன் துறைமுகத்தில் ஜவஹர் வரவேற்கப்படுதல்.

# ராஷ்டிரபதி ஜவஹர்

## "இளந் தமிழன்"

அஞ்சா நெஞ்சமும் ஆர்வமும் வீரமும்
எண்டிசை புகழும் பண்டித திலகம்
காங்கிரஸ் தலைவர் "கமலா" தோழர்
இந்தியர் போற்றும் ராஷ்டிர பதியாம்
ஜவஹர் லால்தம தருமைத் திருமகள்
இந்திரா நேரு வுடனிவ் ரங்கூன்
மாநகர் தன்னில் மேமதி யேழில்
வந்ததோர் காலை மழையது கண்ட
வான்பயி ரென்ன மக்களெல் லோரும்
மகிழ்ந்தனர் வணங்கினர் மாமதி கொண்டனர்,
நாட்பதின் மூன்றில் நந்தலை வர்பல
பகுதியுஞ் சென்று பரப்பினர் உணர்வு,
"இம்மியும் ஓய்வு யான்பெறின் தொழிலோர்
உயர்வு குறித்தே ஊக்கம் கொள்வேன்;
உம்மால் ஏதும் உதவ முடிந்தால்
ஏழைய நக்கே யீவீர்! ஈவீர்!
தொழிலா ளர்துயர் தொலைந்திடி னன்றி
இந்த்யா விடுதலை யெய்துவ தில்லை;
ஆதலின் அவரை ஆதரம் செய்வீர்;
புதுப்புதுப் பொருளைப் பெரற்புற இயந்திர
உதவியைக் கொண்டு சதமுறக் குவிப்பீர்,

துவித்தவப் பொருளைக் கொள்வது யாரெனச்
சற்றும் எண்ணீர் சகோதரர் நீரே;
மேவும் பொருள்கள் மிக்க மலிந்தும்
வாங்குந் தன்மை நீங்கிய தென்ன?
பொருளா தாரம் புதைந்தது மென்ன?
என்றினி யாயினும் எண்ணுக வென்று
அரசியற் புரட்டும் பொருளியற் பிரிவும்
வறுமையும் ஏழ்மையும் வந்தகா ரணமும்
பண்டிதர் புகழவும் பாமரர் உணரவும்
சொற்பெருக் காற்றிய தற்புத மென்று
போற்றினர் ஏத்தினர் புகழ்ந்தனர் மகிழ்ந்தனர்.
உலகம் புகழும் உயரிய நேருவைப்
பர்மிய சோதரர் பாங்குடன் போற்றுநர்,
செல்லும் இடமெலாம் சீரும் சிறப்பும்
வென்றியும் மேவுநர் தலைவர்
என்றும் வாழ்க இந்நில மீதே.

இரங்கூன் 18-6-37

# ஜவஹர் விஜயம்

1937-ஆம் வருடம் மே மாதம் ஏழாம் தேதியானது, அரசியலில் பிரிக்கப்பட்ட பர்மாவின் சரித்திரத்திலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். "சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை" அதைப் பெறுவது எங்கள் கடமை. அஃதின்றேல் நாட்டிற்கு விமோசனமில்லை" என்ற வீர கர்ச்சனையோடு, நமது காங்கிரஸ் மகா சபையானது கடந்த ஐம்பதாண்டுகளுக்கு மேலாக இராஜீயப் போராட்டத்தை நடத்திக் கொண்டு வருகிறது. இந்திய மக்களின் விடுதலைக்காகப் பாடுபட்டு வருகிற மாபெரும் சபையின் தலைவரான ஜவஹர்—தியாகியான நேரு, தமது செல்வக் குமாரி இந்திரா தேவியோடு, பொன் மய ஸ்தூபியுடன் திகழும் பௌத்தாலயங்கள் நிறைந்த இந்தப் பர்மிய நாட்டின் மண்ணிலே காலடி எடுத்து வைத்தது இந்த நன்னாளிலேதான். அந்தச் சிறந்த நாளைத் தேசியத் திருநாளாக ஒவ்வொரு இந்தியரும் கொண்டாடினார்களென்று சொன்னால் அது மிகையாகுமோ? தலைவரே வருக, வருக. வீர சிங்கமே—வருக, வருக. எங்கள் பாரதமணியே வருக, வருக என்று அழைப்பதுபோல் இந்தியர் இல்லங்களிலெல்லாம் தேசீயக் கொடிகள் நெகிழ்ந்து நெகிழ்ந்து அசைந்து அசைந்து காற்றிலே பறந்து கொண்டிருந்தன. செல்வத்திலே திளைத்து நிற்கும் மொகல் தெருவின் தனிச் சிறப்பைக் கூறாது விடுவதற்கில்லை. சுருக்கமாய்க் கூறப்புகின் எப்பக்கம் திரும்பினாலும் தேசீயக் கொடி மயமாகவே இருந்தது. தலைவர் வரவேற்பில் மொகல் தெருவுக்கு மட்டும் தனிப் பெருமை யுண்டு என்பதைக் குறிப்பிடாமலிருக்க

முடியாது. வெள்ளிக்கிழமை. கிழக்குத் திசையிலிருந்து அருணன் எட்டி எட்டிப் பார்க்கிறான். ஆம். பாரதத்தாயின் வீரப் புதல்வன்—இந்தியத் தலைவன் ஜவஹரைக் காண்பதற்காகத்தான். காலை நேரம் மணி 7 அடித்தது.

ஜவஹரை வரவேற்க மக்கள் உற்சாகத்துடன் துறைமுகத்தை நோக்கிப் பல்லாயிரக்கணக்காய்ச் சென்று கூடினர். எங்கும் ஒரே கதர் மயம்; குல்லா மயம். ஊர்வலம் செல்லும் வழிகளிலெல்லாம் ஒரே கூட்டம். அன்றைய காட்சியை வர்ணிப்பதென்றால், அவன் ஒரு கவிஞனாயிருத்தல் வேண்டுமல்லவா? இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னிருந்தே பர்மியருக்கும் இந்தியருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. மதத்தையும் கலையையும் நாகரீகத்தையும் அளித்தது இந்தியா. அரசியலில் இப்பொழுது பர்மா பிரிக்கப்பட்டாகி விட்டது. இதனால் தொன்று தொட்டு இவ்விரு நாடுகளுக்கும் இருந்து வருகிற ஆன்மீகத் தொடர்பும் பிரிக்கப்பட்டுப் போகுமோ? பிரிக்க முடியாதென்பதைப் பர்மியர்கள் காட்டிவிட்டார்கள். ஜவஹர் எதை முன்னிட்டு வந்தாரோ அதைப் பெற்றுக் கொண்டு விட்டார். ஜவஹர் சென்றவிடமெல்லாம் சிறந்த வரவேற்பு. பர்மிய ஆசிரியர்களும் அரசியல் கட்சியினரும் ஜவஹரைக் கண்டு பல சிக்கலான கேள்விகளைக் கேட்டார்கள். அவர், அவற்றிற்குச் சரியான பதிலளித்துள்ளார். ஜவஹர் பிரசங்கத்தைப் பர்மியப் பத்திரிகைகளெல்லாம் வாழ்த்துகின்றன. ஜவஹர் தமது கொள்கையை விளக்கி அகில பர்மா மாணவர் மகா நாட்டிலும் லேட்பட்டான் டோபமா மகாநாட்டிலும் பிரசங்கங்கள் செய்து அவர்களிடையே ஓர் புதிய உணர்ச்சியை உண்டுபண்ணிவிட்டார். ஜவஹர் செய்த பிரசங்கங்களிலே இந்தியரும்

பர்மியரும் நடந்துகொள்ள வேண்டிய மார்க்கங்களைப் பற்றி மிகத் தெளிவாய்க் குறிப்பிட்டுள்ளார். ஜவஹர் பர்மியரிடமிருந்து அவர்களுடைய நல்லெண்ணத்தையும் சிறந்த உபசரிப்பையும் பெற்றுக்கொண்டு விட்டார். ஜவஹர் தமது பாரபட்சமற்ற அபிப்பிராயத்தைப் பர்மிய மக்களிடம் தாராளமாகச் சொல்லிக் கொண்டார். ஜவஹரின் வருகையால் உத்சாகமும் எழுச்சியும், ஊக்கமும் பர்மிய இந்திய ஐக்கியமும், பர்மிய சமுதாயத்திடை விழிப்பும், வாலிபரிடை உணர்ச்சியும், தொழிலாளரிடை மகிழ்ச்சியும் அதிகரித்து வருவதை நாம் காண்கிறோம். இந்தியர்-பர்மியர் உறவைப் பர்மியரின் நல்லெண்ணமென்னும் கயிற்றில் பிணைத்துவிட்டார் ஜவஹர். தேச முன்னேற்றமே தன்னேற்றமெனக் கொண்டு தேசத்திற்காகப் பொருளையும் தம்மையும் தமது குடும்பத்தாரையும் தியாகம் செய்து கொண்டுள்ள ஜவஹரின்—காங்கிரஸ் தலைவரின் பிரசங்கங்களையும் முக்கிய நிகழ்ச்சிகளையும் தமிழர்கள் படித்துப் பயன் பெறுவது அவர்களுடைய கடமையாகும். எனவே, இச் சிறு புத்தகத்தை தமிழர்களாகிய உங்களிடத்தில் சமர்ப்பிக்கின்றேன்.

"பர்மியத் தேனீ'

# ரங்கூன் நகரசபையின் உபசாரம்

## ஜவஹரின் பதில்

7-5-37உ மாலை 4-30 மணிக்கு ஜவஹர் ரங்கூன் நகர சபையின் உபசாரத்தைப்பெற்றுக் கொள்ளும் பொருட்டு, தமது குமாரி இந்திரா நேருவுடனும் பாரிஸ்டர் ஊச்சோமியின்ட்டுடனும் நகர மண்டபத்தை யடைந்தார். கார்ப்பரேஷன் மேயர் டாக்டர் மர்ரே ஆங்கிலத்தில் வரவேற்புப் பத்திரத்தை வாசித்து, அதனை வெள்ளிப் பேழையில் வைத்து ஜவஹரிடம் அளித்தார். அதற்கு ஜவஹர் அளித்த பதிலாவது:—

ரங்கூன் வாசிகளின் சார்பாக என்னை இவ்விதம் வரவேற் றுபசரித்ததற்காக ரங்கூன் நகர சபையாருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவும் பர்மாவும் பிரிக்கப்பட்டு விட்டாலும் கூட உண்மையில் அவ்விரு நாடுகளுக்கிருந்து வருகிற ஆன்மீகத் தொடர்பு மட்டும் அறுக்கப்பட்டுவிட மாட்டாது. உலகம் எப்படி நிலைத்திருக்கிறதோ அதைப் போலவே அதுவும் இருக்கும். என்னை உலக வழக்கத்தை யனுசரித்து இவ்விதம் உபசரித்ததானது, நான் சேர்ந்து வேலை செய்கிற மாபெரும் சபையினிடம் நல்லெண்ணத்தைக் காண்பிப்பதாக ஏற்படுகிறது.

இந்தியா பர்மா பிரிவினையான தருணத்திலே நான் இவ்விதம் பர்மாவிற்கு வந்திருப்பதானது, இந்திய மக்கள் பர்மிய மக்கள் மீது கொண்டுள்ள நல்லெண்ணத்தைக் காண்பிக்கும் அறிகுறியே யாகும் என்பதாக உபசாரப் பத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நானும் எனது இந்திய நாட்டு மக்களும் பர்மிய மக்கள்

மீது சதாகாலமும் நல்லெண்ணம் கொண்டவர்களா யிருந்து வருகிறோம். சுமார் பத்து வருடங்களுக்கு முன்னே மகாத்மா காந்திஜீயுங் கூட ஆதே வித எண்ணத்துடன் பர்மாவிற்கு விஜயம் செய்திருந்தார். நான் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருக்குங் காலத்திலேயே பர்மாவைப்பற்றிய பல புத்தகங்களை வாசித்திருக்கிறேன். பர்மாவிற்குச் சென்று சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டுமென்ற ஆசையானது எனக்கு அப்பொழுது அதிகமுண்டு. சந்தர்ப்பம் வாய்க்காததால்தான் இதுவரை வரக்கூடவில்லை. இப்பொழுதுதான் வர முடிந்தது. சுதந்திரப் போராட்டத்திற்கு நான் தலைமை வகித்து நடத்துவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தியாவின் விடுதலைக்காக நான் எனது சக்தியைக் கொடுப்பேன். நான் இறந்து போகு முன்பே, இந்தியாவானது சுதந்தரத்தை அடைந்துவிடக் கூடுமென்று பெரிதும் நம்பிக்கை கொண்டுள்ளேன். சக்தி பலம் குறைந்த வகுப்பாரை மற்றொரு வகுப்பார் அடக்கியாளுவதையும் வலிமை குன்றிய நாட்டை மற்றொரு நாட்டார் கொடுமைப்படுத்தி ஆளுவதையும் மிக இழிந்த செயலெனக் கண்டிக்கப்பட்டும் தர்ம மாகமாட்டாதெனக் கூறப்பட்டுமிருக்கிறது. இந்தியா சுதந்திரம் பெற்ற நாடானவுடன் சமீபமாயுள்ள அடிமை நாடுகளின் அந்தஸ்தை உயர்த்துவதில் அது ஒத்தாசை புரியும். என்னை இவ்விதம் உபசரித்ததற்காக நான் எனது நன்றியறிதலைத் திரும்பவும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.

# இராணி தோட்டத்தில்

## ரங்கூன் வாசிகளின் பொதுக்கூட்டம்

## இந்தியர்களுக்கு உபதேசம்

[4-மணிக்கெல்லாம் ரங்கூன் வாசிகள் இராணி தோட்டத்தில் கூட ஆரம்பித்து விட்டனர். சுமார் முப்பதினாயிரம் பேர்களிருக்கலாம். மூன்று புறங்களில் ஒலி பரப்புக் கருவிகள் அமைக்கப்பட்டிருந்தன. எதிர் பாராத விதத்தில் ஒலி பரப்புக் கருவியில் கோளாறு ஏற்பட்டு விட்டதால் முக்கால் மணி நேரம் வியர்த்த மாயிற்று. பொதுஜனங்கள் மிக அமைதியுடன் தலைவர் பிரசங்கத்தைக் கேட்பதற்குக் காத்திருந்தனர். கருவி பழுது பார்க்கப்பட்டு முடிந்தவுடன் வரவேற்புக் கமிட்டித் தலைவர், வரவேற்புப் பத்திரத்தை வாசிக்கலானார்.]

### ஜவஹரின் பிரசங்கம்

பர்மா இந்தியாவிலிருந்து பிரிவினையாகி விட்டது. சென்ற இரண்டாயிர வருட காலமாக பர்மாவுக்கும் இந்தியாவுக்கும் நேசபாவத் தொடர்பு இருந்து வருகின்றது. மதம், கலை, வர்த்தகம் இவ்விதப் பல சம்பந்தங்கள் இவ்விரு நாடுகளுக்கும் இருந்து வருகின்றன. இத் தொடர்பை எவர் தான் கெடுக்க முடியும்? பர்மா இந்தியாவிலிருந்து பிரிவினை செய்யப்பட்டது போல் இந்தியாவும் பிரிட்டிஷ் சாம்பிராஜ்யத்திலிருந்து பிரிந்துவிடக் கூடும். இந்தியாவில் சுதந்தரப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இப் போராட்டத்தின் பயனாய் இந்தியாவும்

பர்மாவும் சுயேச்சை பெறலாம். அத்துடன் ஏகாதிபத்தியக் கொள்கையும் தொலையும். பர்மா அரசியலைப்பற்றிய விஷயங்கள் எனக்கு அதிகமாகத் தெரியாது. ஆனால், இந்தியாவில் அரசியலில் எத்தகைய மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றன வென்பதிலேயே, நீங்கள் உங்களுடைய கவனத்தைச் செலுத்துதல் வேண்டும். இந்திய மக்கள் உலகின் பல பாகங்களிலும் குடியேறி வசித்து வருகிறார்கள். எந்த நாடாயினும் சரியே, அந்த நாட்டில் அவர்கள் சுகமே வாழ்ந்து வர வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன். இந்தியர்களுக்குத் தங்கள் சொந்த நாட்டில் சுதந்தர மிருந்தால் தான் இதர நாடுகளில் அவர்களுக்கு மரியாதை கிடைக்கும். ஆனதால் முதலில் தாய் நாட்டில் சுதந்தரம் உதயமாக வேண்டும். அப்பொழுது தான் ஆப்பிரிக்கா, ஜான்ஸிபார் முதலியநாடுகளில் குடியேறியுள்ள இந்தியர்களின் தொல்லைகள் தொலைந்துபோகக்கூடும். இந்தியர்கள்வெளி நாடுகளுக்குச் சென்று வருவது எதற்காக? ஐரோப்பியர்களைப்போல் சுரண்டுவதற்கன்று. இந்த நாடு சம்பந்தப்பட்ட வரையில் இந்தியர்கள் பர்மியரிடத்தில் நல்லெண்ணத்துடன் நடந்து கொண்டால் க்ஷேமமாக வாழலாம். பர்மியருக்குத் தீமைகள் விளைவித்து வாழ வேண்டுமென்ற எண்ணம் இந்தியரிடம் உதிக்குமாகில் அது தவறான எண்ணமாகும் என நான் சொல்வேன். பிரிவினையால் பர்மாவின் செல்வாக்குக் குறைந்து விடுமென்பதில் சந்தேகமில்லை. பர்மா பிரிவினைப் பிரச்னையில் ஒரு முடிவுக்கு வருவது பர்மியர் தாமெனவும் அதில் இந்தியர்கள் தலையிடக் கூடாதெனவும் காங்கிரஸ் ஏற்கனவே தெரிவித்து விட்டது. பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து பர்மாவை எதற்காகப் பிரிக்கத் தொடங்கினர்? இந்தியர்கள் தங்கள் நாட்டில் வலிமை பெற்று வருவது முதற் காரணம். இரண்டாவது பர்மாவை வெகு காலம் வரை அடிமைவாழ்க்கையிலிருத்தி

வைக்க எண்ணம் கொண்டிருப்பதாகும். இந் நாட்டில் மண்ணெண்ணெயும் பெட்ரோலும் ஏராளமாகக் கிடைக் கின்றன.

## தக்கின் கோஷ்டியார்களின் உபசரிப்பு

டோபமா சங்கத்தின் அழைப்பின் பேரில், அதன் தலைமைக் காரியாலயத்திற்கு ஜவஹர் இரவு 7 மணிக் குச் சென்றார். அப்பொழுது அச்சங்கத்தின் அங்கத் தினர்கள் வழக்கப்படி "டோபமா" வெனச் சொல்லிக் கொண்டு தங்கள் கைகளை மும்முறை உயர்த்தி ஜவ ஹரை வரவேற்று மரியாதை செய்தனர். பாஸிஸ்டு கட்சி கொள்கையைப் பின்பற்றி கைகள் உயர்த்தப் படுகிறதாவென ஜவஹர் புன்முருவலுடன் விசாரித் தார். "டோபமா" என்றால் அதன் கருத்தென்ன என்பதையும் அறிய விரும்பினார். டோபமா சங்கத் தலைவர்கள் அவற்றை விளக்கிக் கூறினர். அதன்பேரில் அயர்லாந்தில் ஸின்பெய்ன் கட்சியாரைப் பின்பற்று கிறீர்களாக்கும் எனச் சிரித்துக்கொண்டு உரையாடி னார். ஜவஹருக்கு பர்மிய முறையில் தயாரிக்கப்பட் டிருந்த வெல்லம், பவ்பவ்ஸொவ், நனுவின் மக்கீன் தின் பண்டங்களுடன் காப்பியும் தரப்பட்டன. ஜவஹர் மிகக்குஷியாய் உட்கொண்டார். பின்னர் அவர்களுக் குள் நடந்த சம்பாஷணையின் முக்கிய விஷயங்களைச் சுருக்கமாய் இதன் கீழ் தரப்பட்டிருக்கிறது.

## கேள்வியும் பதிலும்

கேள்வி :- **தங்களுக்கு அபேதவாதக் கொள்கை யில் நம்பிக்கை அதிகமுண்டு என்பதை நாங்கள் அறிந் திருக்கிறோம். அக்கொள்கையை சரியானபடி நாங் கள் பர்மாவில் வியாபிக்க வேலை செய்யும் பட்சத்தில் தாங்கள் உதவி செய்வீர்களா?**

பதில் :- கொள்கையில் வித்தியாசமின்றி ஒத்திருக்குமாயின், மக்கள் வேறு, நாடு வேறு என்று பாகுபடுத்தத் தேவையில்லை. அந்த நோக்கத்துடனேயே வேலை செய்துகொண்டு வருகிறேன். ஸ்பெயின் அரசாங்கத்தாருக்குப் பண உதவி செய்து வருகிறேன். மேலும், எனது நண்பர்கள் ஸ்பெயின் அரசாங்கத் தரப்பிலிருந்துகொண்டு போராடி வருகின்றனர்.

கேள்வி :- ஒருக்கால் அந்த அபேதவாதக் கொள்கையைக் கடைப்பிடித்து பர்மாவிலுள்ள சில பர்மியத் தலைவர்கள் வேலை செய்யும் பட்சத்தில், பர்மாவில் வசிக்கிற பணக்கார இந்தியர்கள் விஷயத்தில் தாங்கள் எத்தகைய அபிப்பிராயம் கொண்டிருக்கிறீர்கள்?

பதில் :- இதைப்பற்றி விசேஷமாகச் சொல்வதற்கில்லை. இந்தியாவிலுங்கூட இந்தியப் பணக்காரர்கள் பெருவாரியாயிருக்கின்றனர். அவர்கள் மீது கொண்டுள்ள அபிப்பிராயம் எதுவோ அதுவே பர்மாவிலிருக்கிற இந்தியப் பணக்காரர்கள் விஷயத்திலுமாகும்.

கேள்வி :- தாங்கள் பர்மாவுக்கு விஜயம் செய்திருப்பதின் நோக்கம், இந்தியர்களின் உரிமையைப் பாதுகாப்பதற்காகவென சில நண்பர்கள் சொல்லுகிறார்கள். அது வாஸ்தவமாகுமா?

பதில் :- சில அமிசங்கள் உண்மைதானென்று கூறவேண்டியவனாயிருக்கிறேன். இப்பொழுது பர்மா இந்தியாவிலிருந்து பிரிவினை செய்யப்பட்டாய்விட்டது. எங்களுடைய காங்கிரஸ் மகாசபையின் கிளை ஸ்தாபனம் பர்மாவுக்கு அவசியமா அல்லவா வென்பதைக் குறித்தும் ஒரு சமயம் பர்மா மாகாண காங்கிரஸ் கமிட்டி கலைக்கப்பட்டால் பர்மாவிலுள்ள இந்தியர்

களுக்கும் காங்கிரஸ் மகாசபைக்கும் எதிர்காலத்தில் எவ்விதத்தில் தொடர்பு இருக்கச் செய்வதென்பதைக் குறித்தும் விசாரிக்கவேண்டியதேற்படும். நான் பர்மாவுக்கு வந்திருக்கும் நோக்கத்தின் சில அம்சங்கள் உண்மைதான். முன்னே எங்களுடைய காங்கிரஸ் மகாசபையின் கிளை ஸ்தாபனங்கள் லண்டன், நியூயார்க், டோக்கியோ, காபூல் முதலிய ஊர்களில் இருந்து வந்தன. அவற்றால் யாதும் பயனில்லை. எனவே அவை எடுக்கப்பட்டுவிட்டன. பர்மா சம்பந்தப்பட்ட விஷயத்தில் எத்தகைய முறையை அனுஷ்டிக்கவேண்டும் என்பதை விசாரிக்கும் பொருட்டு இந்த நாட்டிற்கு வந்திருக்கிறேன். ஒருக்கால் புதிதாக ஸ்தாபனமொன்றை ஏற்படுத்துவதா யிருக்கும் பக்ஷத்தில் அதற்கு பர்மியர்களின் நல்லெண்ணத்தைக் காட்டுகிற ஸ்தாபனங்களையே விரும்புகிறேன் வெளி நாடுகளிலுள்ள இந்தியர்களுடன் எப்படிக் கூட்டுறவு வைத்துக் கொள்வது என்பதைப் பற்றிய தீர்மானமொன்று, சென்ற காங்கிரஸ் மகாசபைக்கூட்டத்தில் நிறைவேறி யிருக்கிறது. அத்தீர்மானத்தை யனுசரித்தே நான் இந்நாட்டிற்கு வந்திருக்கிறேன். இந்தியாவை யடைந்ததும் காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு ரிப்போர்ட்டு ஒன்றைச் சமர்ப்பிப்பேன். எந்தக் காலத்திலும் பர்மியருக்கு விரோதமாகக் காங்கிரஸ் மகாசபையானது நடந்து கொள்ளச் சிறிதும் எண்ணியதில்லை.

கேள்வி :- பர்மாவில் அபேதவாதக் கொள்கையை நிலை நாட்டுவதற்கு எத்தகைய முறையில் வேலை செய்தால் நன்மையா யிருக்க முடியும்?

பதில் :- சுதந்தரம் பெறாத நாடுகள் அனைத்தும் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருப்பவர்களுடன் எப்பொழுதும் சேர்ந்து வேலை செய்ய வேண்டியவைகளே. அவர்களோடு எதிர்ப்புச் செய்து கொண்டிருந்

தால் வேலைத் திட்டத்தில் வெற்றி பெறுவது கடின மாகும். சுதந்தரப் போராட்டத்தில் சேர்ந்து வேலை செய்வதற்காக தொழிலாளிகளுக்கும் விவசாயிகளுக் கும் வழிகாட்டவேண்டும். விடுதலை பெருத நாட்டில் அபேதவாதக் கொள்கையில் பூரண வெற்றி ஏற்படச் செய்வது கஷ்டமாயிருக்கும். ஒரு சாராரான விவ சாயிகள் பிரச்சினையில் சக்தி உள்ளவரை கஷ்டப்பட்டு வேலை செய்யவேண்டும். அபேதவாதக் கொள்கையில் நம்பிக்கை யுடையவர்கள், முதலாவது தங்கள் கொள் கையை எவ்வளவுக்குச் சாத்தியப் படுகிறதோ அவ்வள வுக்குப் பரப்புவதற்கான முறையில் பிரசாரம் செய்ய வேண்டியவர்க ளாவார்கள். இரண்டாவது செவ்விய முறையில் சங்கங்கள் காணவேண்டும். மூன்ருவதாக விடுதலைக்காகப் போராடவேண்டும். என்ருலுங்கூட எனக்கு பர்மாவின் உண்மையான அரசியல் நிலைமை என்னவென்பது தெளிவாய்த் தெரியாது. அதனுல் அபேதவாதக் கொள்கையை பர்மாவில் எவ்விதம் நிலை நாட்டலாம் என்பதைப்பற்றி நான் திட்டமான ஆலோ சனைகள் எதுவுங் கூற முடியாது.

கேள்வி :- இப்பொழுது பர்மாவும் இந்தியாவும் பிரிக்கப்பட்டாய்விட்டது. பர்மாவிலுள்ள இந்தியர் கள் தங்கள் சொந்த நன்மையைக் கருதி பிரிந்து தனி யாய் வேலை செய்யும் பட்சத்தில் பர்மாவின் அரசியல் முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை ஏற்படாதா ?

பதில் :- இந்தியர்கள் பர்மியர்களுடன் முன்னுக் குப் பின் முரணுய் நடந்துகொண்டால் அதனுல் அர சியல் முன்னேற்றத்திற்குத் தடை யுண்டாகத்தான் செய்யும். இந்தியாவிலும்கூட பணக்கார ஆங்கிலேயர் கள் ஆதிக்கம்தான் வலுத்திருக்கிறது, பர்மாவின் நிலைமையை நன்ருய் விசாரித்தறிந்த பின்

னரே, ஆலோசனை கூற முடியும், இப்போதைய நிலைமையில் பர்மாவைப்பற்றி ஒன்றும் தெரியக்கூடா மலிருக்கிறேன். இருந்தாலும் கூட பர்மாவிலுள்ள இந்தியர்களுக்கு நல்லதோ கெட்டதோ எதுவானாலும் சரியே அவர்கள் பர்மியர்களுடன் சேர்ந்து வேலை செய்வார்களென்று நம்புகிறேன். பணக்காரர்களா யிருப்பவர்கள் ஏழை மக்களோடு சேர்ந்துகொள்ள மாட்டார்கள். இந்தியாவிலும் கூட பணக்காரர்கள் ஏழை இந்தியர்களோடு சேர்ந்துகொள்ள முடியாது. அவர்கள் ஜாதி மத பேதமின்றி பணக்காரர்களா யிருப்பவர்களுடன் சேர்ந்து கொள்கிறார்கள். பர்மா சம்பந்தப்பட்ட வரையில் சொல்வதானால் "ஸோஷிய லிஸம்" என்ற அபேதவாதக் கொள்கையை மெது வாய்ப் பரவச் செய்ய வேண்டி நேரும் என்பதாய் அபிப்பிராயப்படுகிறேன். ஏகாதிபத்திய நாடு பிடிக்கும் பேராசைத் திட்டத்தையும் முதலாளித்வ கொள்கை களையும் சதா காலமும் தகர்த்துக்கொண்டு வரும் பட் சத்தில் இறுதியில் அபேதவாதக் கொள்கை யுடைய வர்கள் முன்னணிக்கு வந்துவிடலாம். மற்ற கொள்கை யுடையவர்கள் செடிகொடிகளின் இலைகள் உதிர்ந்து போவதுபோல் நாளடைவில் மறைந்தொழிவார்கள். இருப்பினும் கூட, நான் ஒன்று கூற விரும்புகிறேன். "அபேதவாதம்" "அபேதவாதம்" என்பது இலேசில் விளங்கிக் கொள்ளக் கூடியதல்ல. ஆகையினால், முதலிலே கொள்கையை யெங்கும் பரப்புங்கள். இரண் டாவதாக சங்கங்கள் நிறுவுங்கள். மூன்றாவதாக ஏகாதிபத்திய விஸ்தரிப்புத் திட்டத்தைத் தகர்த்தெறி வதற்குரிய சக்தி பரவுதற்கு வேலை செய்யுங்கள். இவை யே இதனுடைய அடிப்படையான அம்சங்களாகும்.

**கேள்வி :- இந்தியாவிலுள்ள சுதேச மன்னர் களின் ராஜ்யம் சம்பந்தமாயும் மகாராஜாக்களின்**

சம்பந்தமாயும் தலைவராகிய நீங்கள் எவ்வித கருத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

பதில் :- அவர்களோடு சதா காலமும் தொடர்பு வைத்துக் கொள்வதை விரும்புகிறேன். மேலும் சுதேச மன்னர்களின் ஆட்சியில் இருந்துவருகிற இந்தியர்கள், மகாராஜாக்களுடன் போராடிக்கொள்வதை நான் விரும்பவில்லை. ஆயினும் மேற்கண்ட சுதேச மன்னர்களின் ராஜ்யங்களில் இந்திய மக்கள் பிற்போக்கடைந்து வருவதைக் காணச் சகிக்க முடியாததாயிருக்கிறது. காங்கிரஸ் மகாசபையின் வேலைத் திட்டத்தால் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு ஏற்படுகிற நன்மைகளைப் போன்று சுதேச மன்னர்களின் ராஜ்யங்களுக்கும் ஓரளவு நன்மை உண்டாகலாமென்று அபிப்பிராயப்படுகிறேன்.

## காங்கிரஸ் மகா சபை

இந்தியாவில் காங்கிரஸ் மகாசபை யொன்றுக்குத் தான் அதிக செல்வாக்குண்டென்பதை எவரும் மறுக்க முடியாது. வேறு தொழிலாளிகள் சங்கங்கள் பல உண்டு. இருந்தாலும் காங்கிரஸ் மகா சபைக்குள்ள செல்வாக்கு, எந்த ஸ்தாபனத்திற்கும் கிடையாது. காங்கிரஸ் பணக்காரர்கள் ஆதிக்கம் பெற்றதாயிருப்பதாக அடிக்கடி சொல்லப்படுவதுண்டு. அவ்விதம் குறை கூறப்படினும் கூட உயர்தர வகுப்பைச் சேர்ந்த பணக்காரர்களும் விவசாயிகளும் காங்கிரஸில் இடம் பெற்றிருப்பதால், காங்கிரஸின் வலிமை குறைவதாகச் சொல்வதற்கில்லை. காங்கிரஸைப்பற்றிக் குறை கூறி வருகிற சங்கங்களின் செல்வாக்கு நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருவதைக் காண்கிறேன். பொறுமைக் குணம் படைத்தவர்கள் சிற்சில சமயங்களில் மகாத்மா

காந்திஜீயை ஏமாற்றுப் பேர்வழியென்றும் மோசக்கார ரென்றும் நெறி தவறியவரென்றும் குறை சொல்லி வந்தார்கள். அச்சமயங்களில் காந்திஜியவர்கள் பிர சங்க மேடையிலிருந்து ஓட்டம் பிடிக்க வேண்டிய நிலை மைக்கும் கூட ஆளாகியிருக்கிறார்.

சென்ற சட்டசபைத் தேர்தலில் தொழிலாளிகள் சார்பில் சட்டசபைக்கு நின்ற அபேட்சகர்கள் காங்கி ரஸ்காரர்களுடன் போட்டி போட்டுக்கொண்டு நின்றார் கள். அதில் அவர்கள் பூரணத் தோல்வியுற்றதைப் பார்த்தேன்.

# உயர்ந்த உபதேசம்

## பர்மியப் பத்திரிகையின் அபிப்பிராயம்

(7-5-37) வெள்ளிக்கிழமை மாலை ரங்கூன் கார்ப்பரேஷனிலும் இராணி தோட்டத்திலும் காங்கிரஸ் தலைவருக்குத் தனித்தனியே வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன. அவற்றிற்குப் பண்டித ஜவஹர்லால் மிக விரிவாகப் பதிலளித்தார். அவர் செய்த பிரசங்கத்தைப் பற்றி, "நியூ லைட் ஆப் பர்மா" பத்திரிகை, அதன் தலையங்கத்தில் கீழ் வரும் அபிப்பிராயத்தை எழுதியிருந்தது:—

"பிற நாட்டு விடுதலைக்காக இந்தியர்கள் அந்த நாட்டு மக்களுடன் சேர்ந்து போராடலாம். அடிமைப்படுத்தும் விஷயங்களில் இந்திய மக்கள் கலந்து கொள்வதை யான் விரும்பவில்லை. ஒருவரையொருவர் சுரண்டுவதை—உறிஞ்சுவதைக் காண இஷ்டமில்லை. இந்தியர்கள் சுபிட்சமாயிருப்பதை விரும்புகிறேன். ஆனல் அவர்கள் வசித்துவரும் நாட்டைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்படக் கூடாது. சுரண்டும் செயல் இருந்தால் உண்மையில் ஒற்றுமைக் குறைவு இருக்கத்தான் செய்யும்.' என இந்தியாவின் மாபெரும் சபையின் தலைவரும் இந்திய மக்களின் பிரதிநிதியுமான பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ரங்கூன் நகர சபையின் வரவேற்புக்குப் பதிலளித்த சமயம் குறிப்பிட்டுள்ளார். அவருடைய உபதேசம் மிக உயர்ந்த கருத்து நிறைந்தது. அதற்கொப்ப இந்தியர்கள் இனிமேல் நடப்பார்களென்று நாம் எதிர் பார்க்கின்றேம்.

தமது தேசத்துக்காக பண்டித ஜவஹர்லால் தனது செல்வத்தைப் பல தடவைகளில் தாராளமாய் கொடுத்து உதவியிருப்பதையும் பன்முறை சிறைத் தண்டனைக்காளாகி யிருப்பதையும் அரசியலில் காந்தி ஜீயைவிட ஒருபடி தாண்டிச் செல்வதையும் அவரு டைய புத்தி நுட்பமும் காந்திஜீயின் செல்வாக்கும் இந்தியாவை மட்டுமின்றி உலகத்தையே கவர்ந்து விடக் கூடியதா யிருப்பதையும் காந்திஜீயைப்போல் சீர்திருத்தம் நாளடைவில் வந்து கொண்டிருப்பதைப் பொறுத்துக் கொண்டிருக்க விருப்பமில்லாமல் உடனே சீர்திருத்தம் வந்தாகுக வேண்டுமென்ற பிடிவாதத் துடன் சேவை செய்யக் கூடியவராயிருப்பதையும் நாம் நன்கறிவோமாதலால் அவரை அளவு கடந்து பாராட்டுகின்றோம்.

பர்மாவில் பணக்காரராயிருப்போர், ஆங்கிலேய ரும் இந்தியரும்தான். அந்த முதலாளி வர்க்கத்தினர் ஏழை பர்மிய மக்களின் நன்மையைப் பொருட்படுத் தாது தங்கள் சொந்த நன்மைக்காகவே பல வழிகளி லும் வருமானத்தைப் பெருக்கக் கூடியவர்களாயும் இந்தியாவிலும் உலகின் மற்ற பாகங்களிலும் இருந்து வருவதைப் போன்று ஏழை மக்களை முதலாளி வர்க் கத்தினர் சதாகாலமும் அசுசுறுத்திக்கொண்டு போதிய உணவை யளிக்காது அவர்களுடைய உரி மைகளைப் பறித்துக் கொண்டிருப்பவர்களாயும் நாட் டின் விடுதலைப் போராட்டத்தையும் தேச மக்கள் ஒற்றுமைப்படுவதையும் கண்டு இகழ்பவர்களாயும் இருந்து வருகின்றனர். பர்மா மாகாணக் காங்கிரஸ் கமிட்டி பணக்காரர்களின் ஆதிக்கத்திலிருப்பதால் காங்கிரஸின் வேலைத் திட்டத்திற்கு விரோதமாக வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்துக்காகவும் நாட்டின் நன்மையைவிட இந்திய மக்களின் நன்மைக்காகவும்



(7—5—37) மாலையில் ரங்கூனில் நடைபெற்ற பொதுக்கூட்ட மேடையில் ஜவஹர் காணப்படுதல்.



(8—5—37) காலையில் ஷாவேதகான் பொற் கோவிலில் ஜவஹர் காணப்படுதல்.

தான் அது வேலை செய்து வருகிறது. அதைக் கண்டு நாங்கள் மனமுடைந்தவர்களா யிருந்த சமயத்தில், பண்டித நேரு அவர்கள் பர்மாவுக்கு விஜயம் செய்துள்ளார். பர்மியரின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்காகவும் பர்மியரின் விடுதலைக்காகவும் பர்மியரின் செல்வ நிலை உயர்வுக்காகவும் சேர்ந்து வேலை செய்ய வேண்டுமென்று பண்டித ஜவஹர்லால் இந்திய மக்களிடை வற்புறுத்தியுள்ளார். அதற்காக நாம் சந்தோஷப்படுகிறோம். இதற்கு முன்னே விஜயம் செய்த பல இந்தியத் தலைவர்களின் உபதேசத்தைப் பர்மா இந்தியர்கள் பின்பற்றி நடக்காமல் அலட்சியம் செய்துவிட்டனர். இப்போதாவது இந்தியர்கள் தங்கள் தலைவருடைய உபதேசத்தை அலட்சியம் செய்துவிடாமலிருக்க வேண்டுமென்பதற்காக நாம் கடவுளைப் பிரார்த்தித்துக் கொள்கின்றோம். அரசியலில் ஒருவரை யொருவர் அடக்கியாள்வதையும் பொருளியலில் ஒருவர் மற்றொருவரால் சுரண்டப்படுவதையும் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் வெறுப்பதைத் தமது பிரசங்கத்தில் பட்டவர்த்தனமாகக் காட்டிவிட்டார். வெளி நாட்டிலுள்ள இந்தியர்கள் ஐரோப்பியர்களைப் போல் பிறருடைய செல்வத்தைச் சுரண்டுவதைத் தாம் பார்க்க விரும்பவில்லை யென்பதாயும் ஐரோப்பியரைப் பின்பற்றக் கூடாதென்பதாயும் உலகமெங்கும் இந்தியர் குடியேறுவதைக் காண்பதற்கு அபேட்சிப்பதாயும் பர்மியர்கள் அனுமதியின் பேரிலே பர்மாவில் இந்தியர்கள் வசித்து வருவதாயும் அன்றைய இராணி தோட்டப் பிரசங்கத்தில் காங்கிரஸ் தலைவர் எடுத்துக் கூறினர். மேலும் அவர் பேசியதில், முதலாவது பர்மாவின் விடுதலைக்காகவும் இரண்டாவது இந்தியாவின் விடுதலைக்காகவும் ஒத்தாசை புரியுமாறு இந்தியர்களைத் தூண்டினர். அவருடைய பிரசங்கம் மதிக்கத் தகுந்தது. அரசியலில் எப்பொழுதும் அடக்கி

வைத்துக் கொண்டிருக்க விரும்புபவர்களும் பொரு ளியலில் ஏழை மக்களுக்குப் போதிய கூலி கொடுக் காமல் தங்களின் வருமானத்தைப் பெருக்கிக்கொள்வதி லேயே கண்ணுங் கருத்துமா யிருந்துவருபவர்களுமான முதலாளி வர்க்கத்தவர்கள், முன்னே பின்பற்றி நடக்கத் தவறிய காரணத்தால் மக்களிடையே நேர்மைக் குறை வுண்டாகி யிருக்கிறது. ஆளுவோரும் ஆளப்படு வோரும் முதலாளிகளும் தொழிலாளிகளும் நெடுங் காலமாகப் போராடிக் கொண்டிருக்கின்றனர். பர்மா விலே வசிப்பவர்கள் பர்மிய பாஷையைக் கற்க விரும் பாமல் தங்களின் 300 ரக பாஷைகளை மட்டும் படித்துக் கொண்டு இந்து, முஸ்லீம், தமிழர், மலேயாளி, வங்காளி, நாடார் என்பதாக வகுப்புகளைப் பிரித்துக் கொண்டு பாடசாலைகளையும் சங்கங்களையும் அமைத்து வருகின்றனர். சுதேச பாஷைக்குப் பதிலாக ஆங்கில பாஷை தான் பொதுப் பாஷையாய் இருக்கத் தகுந்தது எனப் பிதற்றுபவர்களும் இந்தியர்களின் விசேஷப் பாதுகாப்புக்காகவும் தனி ஸ்தானங்களுக்காகவும் பெருங் கூச்சல் போடுபவர்களும் இருந்து வருகின்ற னர். வருங்காலத்தை முன்னிட்டும் வரப்போகும் ஆபத்தை முற்கூட்டி அறிவதைக் கொண்டும் பொரு ளாதாரம், அரசியல், கல்வி முதலிய துறைகளில் பர்மியரோடு அவர்களும் சேர்ந்து கொள்வது அவசிய மாகும். பொருளாதாரம், அரசியல் விஷயங்களில் சிறுபான்மையினரின் நன்மையை விட நாட்டின் நன்மையைக் கருதி வேலை செய்ய விரும்புவர்களுடன் பர்மியர்கள் சதா காலமும் சிநேகபாவம் வைத்துக் கொள்வார்கள். காங்கிரஸுக்கும் இந்திய சர்க்கா ருக்கும் நடந்துகொண்டிருக்கிற அரசியல் போராட் டத்தில் காங்கிரஸுக்குத் துணையாக எக்காலத்திலும் பர்மியப் பொது ஜனங்கள் ஆதரவளித்து வரக் கூடு மென்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## ஊபாடுன் தம்பதிகளும் ஜவஹரும்

இரவு 8 மணிக்கு, பர்மா பிரதிநிதி சபையின் காரியதரிசி ஊபாடுனும் அவருடைய மனைவியாரும் தங்களுடைய இல்லத்தில் ஜவஹரை சிறந்த முறையில் வரவேற்று உபசரித்தார்கள். சிற்றுண்டி விருந்தில், பர்மிய முறையில் தயாரிக்கப்பட்ட நனுவின் மக்கின், ஹல்வா, டுயின்யோ, சவ்ச்சோ, மலாய்ன்மொவ்ன், மொவ்ன்ஸெய்ன்பாவ்ன், டான்தீமொவ்ன், ஹ்நெப்பியோதீமொவ்ன், லப்பெஜீன்த்தொவ்,மொவ்ன்ஹீன்கா, பூதி ஙப்பவ்ன்ஜோ, மொவ்ன்லெக்கவ், "பிளெய்ன்டீ" வெறும் தேத்தண்ணீர் இவைகள் அளிக்கப்பட்டன. இவ்விருந்தில், ஜவஹர், இந்திரா தேவி, பர்மா பப்ளிக் சர்விஸ் கமிஷன் மெம்பர் ஊத்தெய்ன்மாங், வர்த்தக மந்திரி டாக்டர் தெய்ன்மாங், பெகு கமிஷனர் மிஸ்டர் ஸ்வித்தின்பாங், முனிசிபல் கமிஷனர் ஊஸ்ஸெ, ரிசர்வ் பேங்க் டைரக்டரும் ஷ்வேதகான் பயாக் கோவில் டிரஸ்டியுமாகிய ஊப்போபியோ, பர்மா பிரதிநிதி சபையின் உபதலைவர் ஊஹ்லாப்பே, ஊச்சின் ஐ. சி. எஸ், தேசீயப் பச்சை நிறத் தொண்டர் படைத் தலைவர் பாரிஸ்டர் ஊட்டுன்டின், ஊயே எம். எச். ஆர்., நேஷனல் ஸ்கூல் இன்ஸ்பெக்டர் ஊப்போச்சா, பாரிஸ்டர் ஊச்சோமியின், பர்மா மாகாணக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சர்தார் கங்கா சிங், ஜில்லா மாஜிஸ்திரேட் ஊப்போஸா, அஸிஸ்டெண்ட் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் ஊத்தைன் முதலானோரும் கலந்துகொண்டனர். சிற்றுண்டி விருந்தின் மத்தியில் பர்மிய நாட்டியமும் அத்துடன் பிரம்புப் பந்து விளையாட்டில் மிகவும் பெயர் போன ஊலோப்போவின் ஆட்டமும் நடைபெற்றன.

## இராப் போஜன விருந்து

காலம் சென்ற டாக்டர் பி. ஜே. மேத்தா இல்லத்தில் நடந்த விருந்திற்கு உள்ளூர்ப் பிரமுகர்கள் பலர் அழைக்கப்பட்டிருந்தனர்,

## ஷ்வேதகான் பொற்கோவில் தரிசனம்

8-5-37ந் தேதி காலை சுமார் 6-30 மணிக்கு ஜவஹர், தமது குமாரி இந்திரா நேருவுடன் உலகின் அதிசயங்களில் ஒன்ருன ஷ்வேதகான் பொற்கோவிலுக்கு சுவாமி தரிசனத்துக்காகச் சென்ருர். அப்பொழுது கோவில் டிரஸ்டிகள் அவரை எதிர்கொண்டழைத்துச் சென்று, கோவிலின் பல பாகங்களையும் வலம் சுற்றிக் காண்பித்தனர்.

## தேசீயக் கொடி வணக்கம்

அப்பால் 9 மணிக்குக் கிழக்கு இரங்கூன் டபரின் தோட்டத்தில் சத்திசிவானந்த சபையினுதரவில் நடைபெற்ற தேசீயக் கொடி வணக்கக் கூட்டத்திற்கு ஜவஹர் விஜயம் செய்திருந்தார். கொடியைப் பறக்கவிட்டு சிறிதுநேரம் வரை பிரசங்கம் செய்தார்.

## இராமகிருஷ்ண மிஷின் ஆஸ்பத்திரி, கதர் பந்தர் விஜயம்

பின்னர், ஜவஹர், இராமகிருஷ்ண மிஷின் ஆஸ்பத்திரிக்கும், அப்பால் பர்மா மாகாண காங்கிரஸ் கதர் பந்தருக்கும் விஜயம் செய்தார்.

## வர்த்தக மந்திரி டாக்டர் தெய்ன்மாங் இல்லத்தில் பகற்போஜனம்

வர்த்தக மந்திரி டாக்டர் தெய்ன் மாங் இல்லத்தில் பர்மிய முறையில் தயாரிக்கப்பட்ட பகற்போஜன விருந்திற்கு ஜவஹர் அழைக்கப் பட்டிருந்தார். அவ்விருந்

தில் காட்டிலாகா மந்திரி ஹானரபிள் ஊப்பு, பார்-அட்லா.; திரு விர்ஜிபாய் தாயா, சர்தார் கங்காசிங் ஆகியோர் பிரசன்னமா யிருந்தனர். ஜவஹர் மிக ப்ரீதியுடன் பர்மிய உணவை உட்கொண்டார்.

# ஜவஹர் மாந்தலே பிரயாணம்

## ஊர்கள்தோறும் வரவேற்பு

ஜவஹர், தமது செல்வி இந்திரா நேருவுடன், லேக்கூ, பெகு, சவ்டகா, பெய்ன்ஸலொவ், பியூ, ஸேயாவாடி முதலிய ஊர்களின் வழியாய் டாங்கோவை யடைந்தார். ஊர்கள்தோறும் அவருக்குச் சிறந்த வரவேற்புகள் நடைபெற்றன.

## டாங்கோவில் வரவேற்பு

ஜவஹர் வருகையை முன்னிட்டு உள்ளூர்வாசிகள் அவரைச் சிறந்த முறையில் வரவேற்பதற்காக மிகத் துரிதமாய் ஆவன செய்து கொண்டிடிருந்தனர். ஒவ்வொரு இந்தியருடைய வீடும் பல நிறமுள்ள கொடிகளால் அழகு செய்யப்பட்டிருந்தன. மெர்ச்சண்டு வீதி மட்டும் மின்சார விளக்குகளினுல் அலங்கரிக்கப் பட்டிருந்தது. தமகா ஹாலில் வரவேற்பு அளிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டிருந்தன. ஜவஹரின் வருகையில் சிறிது தாமதமேற்பட்டது. அச்சமயத்தில் பொங்கி யொருவர் பர்மியத் தலைவர்களைக் கண்டித்தும் ஜவஹரைப் புகழ்ந்தும் பேசினுர்.

இரவு 8 மணி சுமாருக்கு ஜவஹர் மோட்டார் வாகனத்தில் ஹாலை நோக்கி வந்து கொண்டிருந்தார். தலைவரைத் தெரிசிக்க ஆவலாய்க் கூடியிருந்த இந்தியரும் பர்மியரும் இடி இடிப்பதைப்போல் ஒரே ஆர

வாரம் செய்து வரவேற்றனர். பின்னர் பர்மிய மாண விகளால் பூச்செண்டுகள் அளிக்கப்பட்டன. அப்பால் உள்ளூர் நகரசபையின் சார்பாக அதன் தலைவராலும் பொது ஜனங்களின் சார்பாக ஊப்போலூ என்பவ ராலும் தனித்தனியாய்ப் பத்திரங்கள் வாசித்தளிக்கப் பட்டன. அதன்பேரில் ஜவஹர் சுமார் 20 நிமிஷ நேரம் வரை அரசியலைப்பற்றிக் கீழ்க்கண்ட விதமாய்ப் பேசினார்:-

## ஜவஹர் பேச்சு

இந்தியர்களையும் பர்மியர்களையும் இவ்விதம் சந் திக்க முடிந்ததற்காக நான் அதிக சந்தோஷமடை கிறேன். அரசியலைப் பற்றிச் சிறிதளவு கூற விரும்பு கிறேன். பர்மா இந்தியா பிரிவினையா, அல்லது கூட் டுறவா என்ற பிரச்னை ஒருவாறு தீர்ந்து விட்டது. பர் மாவை இந்தியாவிலிருந்து பிரித்ததற்கு மூலகாரணம் இல்லாமலில்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்தார், தங்க ளுக்கு அனுகூலமில்லாவிட்டால் பிரிவினை செய்திருக்க மாட்டார்கள். இந்தியாவைச் சேர்ந்த மக்களும் பர்மா வைச் சேர்ந்த மக்களும் ஒத்த அடிமைகளாவர். அடி மைகளாயிருப்பவர்கள், தங்களுக்குள் ஐக்கியப் பட் டிருப்பார்களாயின், வலிமை யுடையவர்களாகிவிட முடியும். அடிமைகளைச் சேர்த்து வைக்காமல் பிரித்து வைக்கும் பக்ஷத்தில்வலிமை குறைந்துபோய்விடும். ஒரு நாடு, மற்றொருநாட்டுடன் சேர்ந்திருப்பதைவிடபிரிக்கப் பட்டுவிட்டால், அதைக்கொண்டு ஏற்றுமதி இறக்குமதி சாமான்கள்பேரில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அதிகப்படி யானசுங்கத் தீர்வைகளைப் பெற முடியும். சரக்குகளின் பேரில் அதிகப்படியான தீர்வைகளை விதிப்பதன் மூலம் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அனுகூலமடையலாம். அடிமையா யிருக்கும் பலனைத் தவிர, உங்களுக்கும்

நமக்கும் வேறு எவ்வித நன்மையும் ஏற்பட்டு விட மாட்டாது. இந்தியா, பர்மா இவ்விரு நாடுகளும் தனித்தனியாய்ப் பிரிக்கப் பட்டுவிட்டாலும்கூட, அவ்விரு தேசத்து மக்களும் ஒரே அடிமை வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்தான். தங்களின், விடுதலைக்காக அவ்விரு தேசத்தாரும் ஒன்றுபட்டு ஐக்கியத்துடன் வேலை செய்வதை விரும்புகிறேன்'' என ஜவஹர் தமது பிரசங்கத்தை முடித்துக்கொண்டு. மெயில் வண்டியில் மாந்தலேய்க்குப் பயணமானார்.

# மாந்தலேயில்

# மகத்தான வரவேற்பு

## அகில பர்மா மாணவர்கள் மகாநாட்டில்

## ஜவஹர் பிரசங்கம்

(9-5-37) ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் ஜவஹர் தமது சகாக்களுடன் மாந்தலேயை யடைந்தார். அப்பொழுது இந்தியரும் பர்மியருமாகச்சேர்ந்து அவருக்கு மகத்தான வரவேற்பளித்தார்கள். ரயில்வே நிலையத்திலும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட தெருக்களிலும் ஜவஹருக்குப் பூமாலைகள் போட்ட வண்ணமா யிருந்தனர். ஜவஹர் அமர்ந்திருந்த மோட்டார் வாகனத்தைப் பின் தொடர்ந்து சென்ற ஜனங்களின் தொகை சுமார் ஐந்தாயிரமிருக்கலாம். இப் பெரிய ஊர்வலத்தால் சிறிது நேரம் வரை வண்டிப் போக்குவரத்தில் தடை யேற்பட்டு விட்டது.

## தேசீயப் பாடசாலைக்கு ஜவஹர் விஜயம்

தேசீய மத்திய உயர்தரப் பாடசாலைக்கு நேரடியாய் ஜவஹர் விஜயம் செய்தார். பின்னர், அங்கு நடைபெற்ற அகில பர்மா மாணவர்கள் மகாநாட்டுக் கூட்டத்தை யாரம்பித்து வைத்தார். ஜவஹர் வருகையை யொட்டி தூசு படிந்த தெருக்களுக்கு ஜலம் தெளிக்குமாறு உள்ளூர் நகரசபைத் தலைவர் மிஸ்டர் ஆச்சூன் என்பார் சிரத்தை யெடுத்துக் கொண்டார். ஜலம் தெளிக்கும் மோட்டார் வண்டி யொன்றில் அவர்

அமர்ந்து கொண்டு மேற்பார்வையிட்டது குறிப்பிடத் தகுந்தது.

## ஜவஹரின் பேச்சு

ஷை மகாநாட்டுக் கூட்டத்தை யாரம்பித்து வைத்து அவர் பேசியது வருமாறு:—

இப்பொழுது இக்கூட்டத்திற்கு வந்ததால் மாணவிகளையும் மாணவர்களையும் பார்க்க முடிந்தது. இதனால் கண்யமும் பெருமையும் ஏற்படுகிறது.

நான் பர்மாவை யடைந்ததும் பர்மியருடைய முகத்தைப் பார்த்த மாத்திரத்தில், என்றைக்காவது ஒரு நாளில் பர்மியர்கள் சமர்த்துள்ள வகுப்பினராய் வந்துவிடக் கூடுமென்று அனுமானித்ததுண்டு. பர்மியரோடு சிநேக பாவம் வைத்துக் கொள்வதற்காகவும் பர்மியருடைய நிலைமையைக் கண்டறிவதற்காகவுமே பர்மாவுக்கு வந்திருக்கிறேன். நான் இந்த நாட்டிற்கு வந்து உங்களோடு சேர்ந்து கொண்டு வேலை செய்வதா யிருந்தால், நாம் கோருகிற லட்சியத்தைச்சீக்கிரத்தில் அடைந்து விடலாம்.

## அரசியலில் பர்மா பிற்போக்குத் தான்

அரசியலில் பர்மா இன்னும் பிற்போக்குடையதாகவே காணப்படுகிறது. அதற்குக் காரணம், அரசியல் துறையில் காலம் கடந்து பர்மா விழிப்புற்றிருப்பது தான். உதாரணம் ஒன்று கூறுகிறேன். குழந்தைப் பருவத்தின்போது குழந்தைக்குரிய சொக்காய் தான் பொருத்தமாயிருக்கும். மனிதப் பருவத்தை யடைந்து வரும்போது, குழந்தையின் சொக்காய் பொருத்தமாயிருக்க மாட்டாது. மேலும் குழந்தையின் சொக்காயை

யணியச் செய்யும் பட்சத்தில் அதனால் சங்கடங்கள் ஏற்படலாம்.

## விசேஷ அதிகாரமுடையவர்கள்

தற்சமயம் இந்தியாவைப் பார்க்கும் பொழுது வைசிராயிடத்திலும் கவர்னர்களிடத்திலும் அதிகப்படியான விசேஷ அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. காங்கிரஸிற்கு இப்பொழுது செல்வாக்கு அதிகரித்து வருகிறது. இந்தியாவிலே இரண்டு வித அதிகாரங்களிருக்கின்றன. அரசாங்கத்தாரிடமுள்ள அதிகாரத்தில் போலீஸ், இராணுவம் ஆயுதங்கள் அடங்கியிருக்கின்றன. மற்றொரு வித அதிகாரத்தில் பொதுஜனங்களின் செல்வாக்கும் வலிமையும் அடங்கியிருக்கின்றன. ஜப்பான், சீனம், அமெரிக்கா முதலிய நாடுகள் சொந்தத்தில் ஆயுத பலத்தை வைத்துக் கொண்டிருக்கின்றன. பர்மாவுக்கும் இந்தியாவுக்கும் அத்தகைய ஆயுத பலம் கிடையா.

## ஆயுதப் பரிகரணம்

இங்கிலாந்து, ஜர்மனி, பிரான்சு முதலிய வல்லரசுகளும் இதர நாடுகளும் ஆயுத பலத்தைக் குறைப்பதைப்பற்றி எவ்வளவோ சொல்லிக்கொண்டு வருகின்றன. ஆனால் அந்த நாடுகள் ஒவ்வொன்றும் தத்தம் நாட்டில் செய்யப்படுகிற ஆயுதங்களை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு அனுப்பி வியாபாரம் செய்துவரும் பட்சத்தில் அவற்றினுடைய ஆயுத பலம் பாதிக்கப்படலாம்.

## சுதந்திரம்

முன்னே காங்கிரஸ் மிகுந்த பலமுடையதாயிருக்கவில்லை. இப்பொழுது பொது ஜனங்களின்விடாமுயற்சி

யின் பயனைப் காங்கிரஸானது இன்று அதிக செல்வாக்குடன் இருந்து வருகிறது. நாட்டின் விடுதலையானது மாணவர்களின் கையிலே தானிருக்கிறது. இதை மாணவர்கள் உணரவேண்டும். இக்கூட்டத்திற்கு விஜயம் செய்துள்ள மாணவர்கள் அனைவரும் தேசியத்துறையி லிறங்கி வேலைசெய்வதாயிருந்தால், நாட்டின்முன்னேற்றம் இதைவிடப் பன்மடங்கு அதிகரித்துவரக் கூடும்.

பர்மாவில் உள்ள ட்ரெய்னிங் ஸ்கூல்கள் சர்வ கலாசாலைகள் முதலியவற்றில் அளிக்கப்படுகிற கல்வி முறையானது மிகவும் பிற்போக்கான தென்றும் திருப்திகரமானதல்ல வென்றும் உங்களால் சொல்லப் பட்டது. ஆனால், என்னுடைய நோக்கமும் கொள்கையும், அந்தச் சீர்திருத்தத்தோடு திருப்தியடைந்து விடுவதால் மட்டும் நிறைவேறியதாக மாட்டாது. பர்மா, இந்தியா, அப்புறம் ஆசியா கண்டம், அப்பால் உலகம் பூராவும் சுயேச்சை பெறுவதுவே எனது நோக்கமாகும். அவ்வித நோக்கத்துடன் வேலை செய்வதால் உங்களுக்கும் எனக்கும் அதிக வித்தியாசமிருக்கிறது.

நான் எப்பொழுதாவது அசிரத்தையா யிருந்தவனல்ல. முதலில் உள்நாட்டு விஷயம். அப்புறம் வெளிநாட்டு விஷயம். இயன்றவரை உலக மக்களின் நன்மைக்காக சேவை செய்வதற்கான மார்க்கத்தைத் தேட வேண்டிதா யிருக்கிறது. ஒரு நாடு மற்றொரு நாட்டையும் ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பாரையும் அடக்கியாளக்கூடிய கொள்கைகளைப் பார்க்கும் காலத்தில் பேராசையானது மிகப் பெரிய சத்துருவா யிருப்பதைக் காணலாம்.

எதிர்காலத்தில் கலகமும் யுத்தமும் வரத்தான் போகிறது. வாலிபர்களும் பெண்களுமாகிய நீங்கள்

காலேஜைப் பற்றியும் சர்வ கலாசாலைகளைப் பற்றியும் மட்டிலுமே பேசிக்கொண்டிருப்பதால், எனது நோக்கத்தையும் கொள்கையையும் விளக்கிச் சொல்லுகிறேன். கல்வி, பொருளியல், அரசியல் இத்துறைகளில் அபிவிருத்தி ஏற்படுமாறு வாலிபர்கள் வேலை செய்வதோடு, உலக சமாதானத்துக்காகவும் பாடுபட வேண்டும். என் மனதில் இருப்பதை இங்கே உங்களுக்கு விவரித்துச் சொல்லுகிறேன். வெளியிடங்களில் இவ்விதம் நான் சொல்லிக்கொள்ள மாட்டேன். நாட்டின் விடுதலையை யளிக்கக் கூடியது அபேதவாதக் கொள்கையே யாகும். பர்மா இந்தியா இவ்விருநாடுகளின் முன்னேற்றத்துக்காகவும் அக்கொள்கையின்படி வேலை செய்து வந்ததால் அது எவ்வளவுதூரம் பலனை யளித்திருக்கிற தென்பதை அறிவீர்கள். அபேதவாதக் கொள்கையின்படி வேலை யாரம்பிக்கும் பொழுது மிகப் பெரிய பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்குரிய உறுதியான எண்ணமும் உயர்ந்த நோக்கமும் அவசியமாகிறது. தீர்க்கமாய் ஆலோசித்து வேலை செய்ய வேண்டிய தேற்படும். மக்களின் எண்ணங்கள் பல திறப்பட்டவைகளா யிருக்கின்றன. அவர்களுடைய எண்ணத்தையும் நோக்கத்தையும் அனுசரித்து வேலை செய்ய வேண்டிய தேற்படும். முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் அளிக்கக் கூடியது அபேதவாதம். உலகில் சோஷியலிஸம், பாஸிஸம், கம்யூனிஸம் என்பதாகப் பல வகைப்பட்ட கொள்கைகள் இருந்து வருகின்றன. கடந்த இரண்டாயிர வருட காலமாக பர்மா, இந்தியா, சீனா முதலிய நாடுகளில் மக்கள் சுயேச்சையுடனும் நாகரிகத்துடனும் வசித்து வந்திருக்கின்றனர். அரசியலிலாகட்டும், பொருளியலிலாகட்டும் பண்டைக் காலத்துக்கும் இக்காலத்துக்கும் அதிக வித்தியாசமுண்டு. அரசியலிலும் பொருளியலிலும் மிக விசித்திரமுடையனவா யிருப்பதையே நாம் அதிக

மாய்ப் பார்க்கின்றோம். அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பாஸிஸம், கம்யூனிஸம் முதலிய கொள்கைகள் எங்கும் வியாபகமாயிருப்பினுங் கூட அபேதவாதக் கொள்கையினால் அதிக நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தக் கொள்கையால் நன்மைகள் உண்டென்பதைப் பொது ஜனங்கள் அறிவார்களாதலால், இன்று பல நாடுகளிலும் அது வியாபித்துக் கொண்டு வருகிறது. எதுவானாலென்ன. செய்தால் முடியத்தான் வேண்டும். மின்சார சக்தியைத் தடைப்படுத்த யாராலும் முடியுமோ? அதைப் போன்றதே இதுவும். உலகத்தில் சமத்வமும் நன்மையும் ஏற்படச் செய்வதற்குப் பிரயாசிக்க வேண்டும். அபேதவாதமென்றும் பொது உடமைக் கொள்கை யென்றும் பல திறப்பட்ட கொள்கைகள் இருந்து வருகின்றன. அவை யாவும் உண்மையில் மக்களை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டு வரக் கூடியனவாயிருப்பதால் அக் கொள்கைகளைப் பின்பற்றி நடப்பது நலமாகும்.

திட்டம், ஒழுங்கு, சட்டம் என்பதெல்லாம் உத்திரவே. சட்டத்தைக் கொண்டு வாழ்பவர்கள் நியாயவாதிகளென்று கூறப்படுகின்றனர். மனிதனுக்கு ஆபத்தை விளைப்பது அந்தச்சட்டம்தான். விவசாயிகள், நாட்டுப்புற வாசிகள் இவர்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருப்பது தான் சட்டமாகும். நியாயமானதெனச் சொல்லப்படும் சட்டத்திலுங் கூட தவறுகளிருக்கின்றன. இப்பொழுது இந்தியாவில் ஒழுங்கைப் பற்றிப் பிரமாதமாகப் பேசப்படுகிறது. திட்டமும் சட்டமும் வேறு. நீங்கள் செல்வர்களாயில்லாவிட்டால் அந்தச் சட்டத்தைக் கொண்டாவது, திட்டத்தைக் கொண்டாவது உங்கள் தலையிலே அரசாங்கத்தார் செருப்புக் காலைக் கொண்டு மிதிக்கவும் செய்யலாம். தங்களுக்குள்ளே ஸ்திரமும் வலிமையும் பொருந்திய

எண்ணங்களை வளர்த்துக்கொண்டு பொருளாதாரத் துறையிலும் அரசியலிலும் விருத்தியடைந்து வருவதற்கான சங்கங்கள் அமைக்க வேண்டும். அவ்விதம் அமைத்துக்கொண்ட பின்னர், பொருளியல், அரசியல், கூட்டுறவு முதலியவற்றை நாளுக்கு நாள் பலப்படுத்திக் கொள்ளல்வேண்டும். இவ்விதக் கட்டுப்பாட்டை அடைந்துகொண்ட பின்னால், ஏகோபித்து பலாத்காரமின்றி கொள்கையைப் புகுத்தலாம். முதலாளித்துவத்திற்கும், அபேதவாதத்திற்கும் அதிக வித்தியாசங்களிருப்பதன் காரணமாகவே கலகம் உண்டாகிறது. அயோக்கியத்தனமான பணக்காரர்களிடத்திலிருந்து ஏழை மக்கள் இன்று போராடிப் பறித்துக் கொள்கின்றனர். கம்யூனிஸம், பாஸிஸம் இவை ஒன்றையொன்று கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டிருக்கின்றன. மின்சார சக்தியைத் தடை செய்ய முடியாது. இயற்கையாய் உண்டாகிற பூகம்பத்தையும் வேண்டாமெனத் தடை செய்ய முடியாது. அதைப்போலவே அவைகளும் போராடாமலிருக்கப் போவதில்லை. முந்திய ஏகாதிபத்திய பணக்காரர்கள் ஆளுகையை யொத்தது பாஸிஸம். டிமோக்ரெஸி என்பது இந்தியா பர்மாவில் கையாளப்பட்டு வருகிற இப்போதைய அரசாங்க முறையாகும். அதற்கும் பாஸிஸத்துக்கும் வித்தியாசம் கிடையாது.

இந்தியாவிலிருந்து பர்மாவானது பிரிக்கப்பட்டு விட்டபடியால் அரசியல் சம்பந்தமான முன்னேற்றங்கள் உண்டாவதற்குரிய காரணங்கள் அறவே கிடையாது. இந்தியாவிலிருந்து பர்மாவைப் பிரித்தாகிவிட்டது. யார் அரசாங்கம் நடத்தி வருவது எனக்கேட்டால், நீங்கள் பிரிட்டிஷார் என்பதாகச் சொல்வீர்கள். அது தவறானது என்று நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் உண்மையில் பர்மாவை அரசு புரிவது மண்ணெண்ணெயாகும்.

குடியேற்ற நாட்டந்தஸ்து கிடைக்கப்பெறின் அதனால் தங்களுக்கு விடுதலை கிடைத்துவிட்டதாக வேண்டுமானால் நீங்கள்தான் சொல்லிக்கொள்ளலாம். அது விடுதலையாகமாட்டாது. பிரத்தியேக நாடா யிருப்பினுங்கூட விடுதலை பெற்றிருக்க முடியாது. மண்ணெண்ணெய்த் தொழிலை அவர்கள் கைவிட்டுவிடமாட்டார்கள். அந்தத் தொழிலை யார் செய்கிறார்கள். பி. ஓ. ஸி. கம்பெனியாரே. அந்தத் தொழிலைக் கூட்டுறவைக்கொண்டு நடத்தினால்தான் அதிக நன்மை யிருக்க முடியும்.

## மேமியோ விஜயம்

மே பத்தாம் தேதி முற்பகல் 11 மணிக்கெல்லாம் மேமியோ வாசிகள் ஜவஹரின் வருகையை மிக ஆவலுடன் எதிர்பார்த்தவர்களாய், லாஷியோ ரஸ்தாவில் திரள் திரளாகக் கூட ஆரம்பித்துவிட்டனர். சுமார் பதினாயிரம் பேர்களிருக்கலாம். பகல் 1 மணிக்கு ஜவஹர் வந்து சேர்ந்தார். வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஊமியா ஊவுக்கு ஜவஹர் தமது வணக்கத்தைச் செலுத்திக் கொண்டார். அப்பால் இந்திய ஸ்திரீகளாலும் ஐந்து வயதுப் பர்மியப் பெண் குழந்தையாலும் ஜவஹருக்கும் அவருடைய செல்வி இந்திரா நேருவுக்கும் மலர் மாலைகள் அணிவிக்கப் பெற்றன. மேலும் பர்மியச் சிறுமி யொருத்தியைப் பெற்றோர்களிடம் அனுமதி பெற்றுக்கொண்டு அன்று முழுதும் தன் வசத்தில் இந்திரா நேரு வைத்துக் கொண்டிருந்தார். பர்மிய இந்தியத் தொண்டர் படை கோஷ்டியார் புடை சூழ ஜவஹர் எம்பையர் சினிமாப் படமண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். நகர சபையின் சார்பாகவும் பொதுஜனங்களின் சார்பாகவும் வாசித்தளிக்கப்பட்ட பத்திரங்கள் வெள்ளிப் பேழை



(8—5—37) வர்த்தக மந்திரி டாக்டர் தெய்ன்மாங் இல்லத்தில் ஜவஹருக்கு
பகற் போஜன மளிக்கப்படுதல்.



(9—5—37) மாந்தலேயில் நடைபெற்ற அகில பர்மா
மாணவர்கள் மகாநாட்டில் ஜவஹர் பிரசங்கம் செய்தல்.



(9—5—37) அகில பர்மா மாணவர்கள் மகாநாட்டிற்கு விஜயம் செய்த மாணவ, மாணவிகள்



(11—5—37) லேப்படானில் திரு, மு. லெட்சுமணத் தேவர் எனும் ஊப்போனுவால் ஜவஹர் உபசரிக்கப்பட்டார். இடது புறத்தில் நிற்பவரே ஸ்ரீமான் தேவர் ஆகும்.

யில் வைத்து ஜவஹரிடம் கொடுக்கப் பட்டன. அவற்றிற்குப் பதிலளிக்கையில், "இப்போதைய அரசியல் திட்டத்தைக் கண்ணை மூடிக்கொண்டு பர்மா ஏற்றுக்கொண்டிருப்பதற்குக் காரணம், தகுதியான தலைவர்கள் இல்லாத குறைதான் எனச் சொல்லிக்கொள்ள வேண்டியதாக விருக்கிறது." என்று ஜவஹர் குறிப்பிட்டார். மண்டபத்தில் இடமின்றித் தவித்துக் கொண்டிருந்த பொதுஜனங்களுக்காக ஜவஹர் வெளியே வந்து சிறியதோர் பிரசங்கம் செய்தார். பிற்பகல் 2-45 மணிக்கு ஜவஹர் தமது செல்வக் குமாரியுடன் மூன்றாவது பர்மிய இளவரசி அஷின்டெய்ஸாமியா பயாவின் ஜாகைக்குச் சென்று சிறிது நேரம் வரை அவரோடு சம்பாஷித்துக் கொண்டிருந்தார். அங்கு தேநீர் விருந்துபசாரம் அளிக்கப்பட்டது. இந்திரா நேரு, தன்னுடனிருந்த பர்மியச் சிறுமியுடன் புகைப்பட மொன்றை யெடுத்துக் கொண்டார். பின்னர் மாந்தலேய்க்குத் திரும்பும் சமயத்தில் அந்த பர்மியச் சிறுமியைப் பெற்றோர்களிடத்தில் ஒப்புக் கொடுத்து விட்டு விடைபெற்றுக் கொண்டார்.

# பிரிவினையும் ஜவஹரும்

## "ஸன்" பத்திரிகையின் தலையங்கம்

சென்ற சனிக்கிழமையன்று ஜவஹர் டாங்கோவிற்குச் சென்றிருந்தார். அச்சமயத்தில் அங்கு ஏராளமாய்க் கூடியிருந்த பொது ஜனங்களின் மத்தியில், பர்மாவைப் பிரிப்பதில் ஆங்கில அரசாங்கத்தார் கொண்டிருந்த மனப்பான்மையைப்பற்றி ஜவஹர் கீழ்க்கண்ட விதமாய்ப் பேசியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

"ஆங்கில அரசாங்கத்தார் தங்களுடைய சொந்த நன்மையைக் கருதாமல் பர்மாவை இந்தியாவிலிருந்து பிரிவினை செய்யவில்லை. அடிமைகளை ஒன்றுய் வைக்காமல் வேறுபடுத்தி வைப்பது அவர்களுடைய சக்தி பலத்தைக் குறைப்பதாய் ஏற்படுகிறது. பிரிவினையால் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு அனுப்பப்படுகிற சரக்குகளின் மீது அதிகப்படியான தீர்வைகளை விதிப்பதின் மூலம் ஆங்கில அரசாங்கத்தாரின் வருமானம் அதிகரிப்பதற் கிடமுண்டு."

சர்வதேச மக்களால், பாராட்டப்படுகிற ஒரு பெரியாரின் அபிப்பிராயத்தைப் பற்றியாவது ஆங்கில அரசாங்கத்தார் மீது அவர் சொல்லியுள்ள தவறுகளைப் பற்றியாவது நாம் கண்டனம் செய்ய விரும்புகிறோமில்லை. அவர் சொன்னதை உண்மையென்றே வைத்துக் கொள்வோம். நடந்துபோன விஷயத்தைப் பற்றித் திரும்பவும் ஆராய்ச்சி செய்வதன் மூலம் பலன் உண்டாகுமென்று நாம் நினைப்பதற்கில்லை. ஆங்கில அரசாங்கத்தாருக்கு ஜவஹர் சொல்லியதுபோல்

அவ்வித சுயநலம் இருக்கும் பட்சத்தில், அடிமைக ளாகிய நாம் நமக்குள்ளே கலந்தாலோசித்து அதிகார வர்க்கத்தின் எண்ணம் நிறைவேறக் கூடாதபடி அதற்கான மார்க்கங்களைத் தேடுவதுதான் உசித மென்று அபிப்பிராயப்படுகிறோம்.

ஆங்கில அரசாங்கத்தார் அரசியலைப் பற்றிய வரையில்தான் பர்மாவை இந்தியாவிலிருந்து பிரிவினை செய்யச் சம்மதித்தார்கள். அரசியலில் இவ்விரண்டு நாடுகள் வேறுபடுத்தப் பட்டிருப்பதைவிட, இரண்டு நாடுகளும் மனவேற்றுமை கொண்டுவிடாமல் பார்த்துக் கொள்வதுதான் மிக அவசியமாகுமென எண்ணு கிறோம். பர்மாவில் வசிக்கும் இந்தியர்கள், அரசிய லிலும் உள்நாட்டுப் பிரச்னைகளிலும் ஸ்தல ஸ்தாபன விஷயங்களிலும் பர்மியருக்கு விரோதமாகப் பெரும் பாலும் நடந்துகொண்டு வருகின்றனர். அவர்கள் தங் களைப்போன்று அடிமைகளாயுள்ள பர்மியரிடத்தில் கூட்டுறவு வைத்துக் கொள்வதற்குப் பதிலாக அவர் கள் ஆங்கிலேயர்களுடன் சேர்ந்துகொண்டு வோட்டுக் கொடுக்கிறார்கள்.

நல்லதோ கெட்டதோ எதுவானாலுஞ் சரியேயென நினைத்து அவர்கள் நடந்து கொள்ளவில்லை. ஆளுவோ ரின் நட்பைப்பெறுவதைமட்டும்அவர்கள் அபேட்சித்து அவ்விதம் நடந்து கொள்கின்றனர். இம் முறையைப் பின்பற்றி பர்மா இந்தியர்கள் எதிர்காலத்தில் நடந்து கொள்வதாயிருந்தால் பர்மாப்பிரிவினையால் இவ்விருநாடு களுக்கும் இருந்துவருகிற நல்லெண்ணம் கெடக்கூடு மென்பதைக் கவனிக்கக் கோருகிறோம். அத்தகைய நிலைமை யேற்பட்டு விட்டால், அது வீட்டிற்கு எஜ மானராயுள்ளவர்களின் கடமை இன்னதென்பதை நன் குணர்ந்துள்ள பர்மிய மக்களின் தவறாக மாட்டாது.

விருந்தாளியின் கடமையில் தவறிய இந்திய மக்கள் தான் அதற்குக் காரணமாவார்களென்று நாம் கூற வேண்டியவர்களாவோம்.

எனவே, அனுபவம் மிகுந்த ஜவஹர் அறிந்து கொண்டதாகச் சொல்லப்படுகிற ஆளுவோரின் கொள் கையை, நிலை கொள்ளாமற் செய்யப் பரமியர்கள் முய லும்போது அவர்களுக்கு விரோதமாக இந்தியர்கள் நடந்து கொள்ளாமலிருக்க உபதேசம் செய்ய வேண்டு மென அவரைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

# ஜவஹரின் ரங்கூன் பிரயாணம்

(10-5-37)-ந் தேதி இரவு மெயிலில் ஜவஹர் ரங்கூனுக்குப் பயணமானார். மறுநாட் காலையில் ரங்கூனை அடைந்தார்.

## லேட்படான் டோபமா மகாநாடு

# மோட்டாரில் ஜவஹர் விஜயம்

### வழி நெடுக உபசாரம்

ரங்கூனுக்கும் லேட்படானுக்கும் போக வர மொத்தம் 200 மைல்களிருக்கலாம். இப் பிரயாணத்தை ஜவஹர் மோட்டாரில் சென்று ஒரே நாளில் முடித்துக் கொண்டார்.

### பிரயாண விபரம்

காலை 9-மணி சுமாருக்கு ஜவஹர் லேட்படானை நோக்கிப் பயணமானார். அவரோடு இந்திரா நேரு, ஊச்சோமியின்ட் முதலானோர் பிரயாணம் செய்தனர். லேட்படானுக்கு மத்தியில் 5 இடங்களில் ஜவஹர் தாமதித்துச் சென்றார். மோபிக்கடுத்த அவ்கானில் பேபியன் கட்சிக் காரியஸ்தர் ஊபாக்கையினால் ஜவஹர் வரவேற்புப் பந்தலுக்கு எதிர் கொண்டழைத்துச் செல்லப்பட்டார். அங்கு பர்மியச் சிறுமிகளால் மாலைகளணிவிக்கப்பட்டது. பின்னர் அக்கட்சியின் சார்பாக உபசாரப் பத்திரமொன்று வாசித்தளிக்கப்பட்டது. அதில் ஜவஹர் பர்மாவுக்கு விஜயம் செய்திருப்பதால் தங்கள் கட்சியார் மகிழ்ச்சியுடன் அவரை வரவேற்பதாகவும்

ஒரு காலத்தில் பர்மாவானது செல்வத்தில் இளைத்து இருந்ததாகவும் சென்ற 100 ஆண்டுகளாக பர்மா சுரண்டப்பட்டு வருவதாகவும் அதனால் இப்பொழுது லட்சக்கணக்கான பர்மியர்கள் ஏழ்மைத்தனத்தை யடைந்து கொண்டிருப்பதாகவும் ஜவஹர் இந்தியா வுக்கு மட்டும் தலைவராக மாட்டாரெனவும் உலகத்தி லுள்ள ஏழை மக்களுக்காகப் பாடுபடுகிற ஒரு சிறந்த வீர புருஷராவாரெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் அப்பத்திரத்தில், சொல்லப்பட்டிருந்தது வரு மாறு:—பர்மிய கட்சித் தலைவர்களைப் பற்றியும் பர்மா வின் அரசியலைப்பற்றியும் மனம் உடையத்தக்க சமாச் சாரங்களைத் தாங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். தன்ன லம் கருதாமலும் பொருளை மதியாமலும் காங்கிரஸின் வேலைத் திட்டத்தைப் பின்பற்றி இந்நாட்டில் தொண்டு செய்து வருகிற இரண்டொரு கட்சிகள் இருந்து வரு வதையும் தங்கள் ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறோம். அக்கட்சியைச் சேர்ந்தவர்கள், தங்களுடைய வருகை யால் அதிக சந்தோஷம் கொண்டிருக்கின்றனர். பர்மா வும் இந்தியாவும் பிரிக்கப்பட்டிருப்பினும் தாங்கள் கூறுவதுபோல் உலகிலுள்ள எந்த நாட்டையும் பிரிப்ப தென்றால் அது சாத்தியப்பட மாட்டாது தான். பர்மா வும் இந்தியாவும் பிரிந்து கொள்ளவில்லை. அவ் விரு நாட்டினரும் நெருங்கிய நட்புடன் பழகி வருகின்றனர். இந்தியாவும் பர்மாவும் அடிமை என்னும் பந்தத்திலி ருந்து விடுதலைபெற வேண்டியவைகளாயிருப்பதால் அவ் விரு நாடுகளுக்கும் இருந்து வருகிற சிநேக பாவம் அசைக்கப்பட முடியாதது. கடந்த சில வருடங்களுக் குள் பர்மியருக்கும் இந்தியருக்கும் ஒற்றுமைக் குறைவு ஏற்பட்டு வருவதைத் தங்களுக்குச் சுருக்கமாய்க் கூற விரும்புகிறோம். அயோக்கியப் பேர்வழிகளான சிலரால் கிளப்பப்பட்டவதந்தியினால்தான் இந்திய பர்மியருடைய ஒற்றுமையில் சிறிது பங்கமேற்பட்டது. எனினும்

லேவாதேவித் தொழில் செய்யும் பணக்கார இந்தியர்கள், பர்மிய விவசாயிகளையும் நேர்மையுள்ள நிலச்சுவான்தாரர்களையும் தந்திரமாய் ஏமாற்றி அதிக வட்டிக்குக் கடன் கொடுத்து வந்தார்கள். அந்தக்காரணத்தால் பர்மியர்கள் இன்று நிலமற்றவர்களாகி விட்டனர். மக்களை அடிமைப்படுத்தியும் பொருளாதாரத் துறையில் அபிவிருத்தி செய்யாமலும் அடக்கி ஆளப்படுகிற நாடுகளிலே வசிப்பவர்கள் அனைவரும் இவ்விதம் சுரண்டப்பட்டு வருகிறார்கள் என்பதை நாங்கள் நன்கறிந்திருக்கிறோம். இருநாட்டினுடைய உறவைப் பலப்படுத்துவதில் நல்லெண்ணத்தைப் பெறுவதற்காக தாங்கள் இங்கு விஜயம் செய்திருப்பதாக நம்புகிறோம்.

## ஜவஹரின் பதில்

அகில பர்மா பேபியன் கட்சியார் (Fabian Party) என்னை வரவேற்றுபசரித்ததற்காக சந்தோஷப்படுகிறேன். இங்கிலாந்தி லிருந்தபோது எனக்கு பேபியன் கொள்கையைப்பற்றி நன்றாகத்தெரியும். அக்கட்சியின் அங்கத்தினர்கள் கீர்த்தி வாய்ந்த பெரியார்கள். அவர்கள் அபேதவாதக் கொள்கையைப் பரப்புவதில் விசேஷ பங்கெடுத்துக் கொண்டவர்கள். ஐரோப்பாவிலே இக்கொள்கை அவ்வளவு பிரமாதமாய்ப் பரவவில்லை. எதிர் காலத்தில் இக்கட்சியால் பர்மாவுக்குப் பயன் உண்டாகுமா உண்டாகாதா என்பதைப்பற்றி நான் ஒன்றும் சொல்ல முடியாதவனாயிருக்கிறேன்.

## எதற்காக பர்மா பிரிக்கப்பட்டது?

பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தங்களுடைய இஷ்டப்படி பர்மாவை இந்தியாவிலிருந்து பிரித்தார்கள். பர்மியர் பிரிவினையை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்

கூட, அரசாங்கத்தார் பர்மாவைப் பிரிப்பது நிச்சயம் தான். பர்மா பிரிக்கப்பட்டிருப்பது அவர்களுடைய நன்மைக்காகவே. இதனால் பர்மியரின் செல்வாக்கு அதிகரித்து வருமென்று எண்ணிவிடக்கூடாது. இத னால் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கும் பிரிட்டிஷ் முத லாளிகளுக்கும்தான் செல்வாக்கு அதிகரித்து வரும். நிபந்தனையின்றி அவர்களுடைய கை வசத்தில் அதி காரங்களை வைத்துக் கொண்டிருக்கின்றனர். பர்மா இந்தியா பிரிவினையானது, ஒரு கூட்டில் அடைத்து வைப்பதற்குப் பதிலாக இரண்டு கூடுகளில் அடைத்து வைத்திருப்பதையொக்க விருக்கிறது.

நான் இந்தியர்களைப் பாதுகாப்பதற்காக மட்டும் பர்மாவுக்கு வந்திருப்பதாய் நீங்கள் என்பேரில் சந்தே கப் படுவதாக அறிகிறேன். நான் அதை வாஸ்தவம் தானென ஒத்துக் கொள்கிறேன். இந்தியர்களின் நலனைக் காங்கிரஸ் பாதுகாக்காவிட்டால் பின் யார்தான் பாதுகாப்பது? இது காங்கிரஸின்முக்கியகடமையாகும். பர்மாவி லிருக்கப்பட்ட இந்தியர் விஷயத்திலாகட்டும், பராகுவே, ஷாங்காய், ஆஸ்திரேலியா முதலிய நாடு களில் குடியேறியுள்ள இந்தியர்கள் விஷயத்திலாகட் டும் பாதுகாப்பது காங்கிரஸின் கடமையாகும். பர்மி யருங்கூட தங்கள் வகுப்பாரைப் பாதுகாக்கக் கடமைப் பட்டிருக்கின்றனர். இந்தியா சுயேச்சை பெற்ற நாடாகிவிடும்பொழுது, உலகின் பல பாகங்களில் குடி யேறியுள்ள இந்தியர்கள் உரிமைக்குத் தகுந்தாற்போல போதிய பலனை யனுபவிப்பதற்காக பாதுகாக்கப்பட வேண்டியவர்க ளாவார்கள், தனிப்பட்ட வகுப்பாரின் நன்மையை மட்டும் பார்க்கக்கூடாது. உலகத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்பது அவசியமாகும். இப்பொழுது உலகத்தில் தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக் கும் சச்சரவுகள் உண்டாகிக் கொண்டு வருகின்றன.

வகுப்புப் பேதம் பார்க்காமல் இப்பிரச்னையைக் கவனித்து வருவது அவசியமாகும். தேசியக் கொள்கையும் அபேதவாதக் கொள்கையும் ஒன்றாகிவிட முடியாது. மேற்போக்கான முறையைக்கொண்டு ஒழுகாமல் திட்டவட்டமாய் அபேதவாதக் கொள்கையைப் பின்பற்றி வருவது அவசியமாகும். பேபியன் கட்சியாரின் உபசாரத்துக்காக நான் எனது வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தொவ்ன்வேஸவாசிகளின் உபசாரம்

பின்னர், தொவ்ன்ஸேய்க்கு ஜவஹர் பயணமானார். அவ்வூரிலும் ஜவகருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. அப்பால் தாராவாடியை நோக்கிப் புறப்பட்டார். தாராவாடியிலிருந்து சிறிது நேரத்திற்குள் லேட்படானே யடைந்தார். இந்த நெடும் பிரயாணத்தின் மத்தியில் இந்தியர், பர்மியர் ஆண் பெண் அடங்கலும் ஜவஹர் செல்லும் பாதையின் இரு மருங்கிலும் திரள் திரளாய்க் கூடி நின்றுகொண்டு தங்களுடைய சந்தோஷத்தைக் காட்டிக் கொண்டார்கள்.

## லேட்படானில் வரவேற்பு

அலங்கரிக்கப்பட்ட மோட்டாரில் ஜவஹர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். அவருடைய சிரசிற்கு மேல் பர்மிய இராஜ குடும்பத்தாருக்குப் பிடிக்கப்படுகிற பொன் நிறக் குடைகள் பர்மியரால் பிடிக்கப்பட்டன. காங்கிரஸ் தலைவரின் வரவேற்புக்கெனத் தயாரிக்கப்பட்ட பர்மிய கீதங்கள் இனிய வாத்தியங்களுக் கிடையே ஒலித்தன. இந்திய பர்மியத் தொண்டர்கள், தத்தம் நாட்டின்

தேசியக் கொடிகளைப் பிடித்துக்கொண்டும் மற்றொரு சார்பார் சிவப்புநிற அட்டைகளைத் தாங்கிக்கொண்டும் தங்களின் அபேதவாதக் கொள்கையையும் விவசாயிகள் பிரச்னையையும் குறித்த ஸ்லோகங்களை அறிவித்துக் கொண்டும் ஜவஹரை அழைத்துச் சென்றனர். தாராவாடி ஜில்லா டோபமா மகாநாட்டு விசேஷப் பந்தலை யடைந்தவுடன், ஜவஹருக்கு டோபமா கான்பரஸ் சார்பிலும் லேட்படான் நகர சபையின் சார்பிலும் தாராவாடி ஜில்லா வாசிகளின் சார்பிலும் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன.

## ஜவஹரின் உருக்கமான பதில்

இந்தியாவிலிருப்பதைப் போன்று இன்று இந்தக் கூட்டத்திலும் பிரதானமாய் என்னைச் சூழ விவசாயிகள் மயமாயிருப்பதை நான் பார்க்கின்றேன். பர்மாவின் முக்கிய பிரச்னையானது, விவசாயிகளைப் பற்றியதாகும். இந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் தேடாதவரை அமைதி நிலவப்போவதில்லை. பொது ஜனங்கள் பிறரால் சுரண்டப்படுவதிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும். ஏழ்மையைப் போக்க வேண்டும். இதுவே உண்மையான பிரச்னையாகும். பர்மாவில் கலகம் உண்டானதற்குக் காரணங்கள் என்ன வென்பதற்குச் சில ஆதாரங்களைக் கண்டேன். விவசாயிகளின் ஏழ்மைதான் அதற்கு முக்கியமான முதற் காரணமாகும். பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்ட அந்த கலகத்தைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அடக்கிவிட்டது. பர்மியர்களின் பிரதிநிதித்வம் வாய்ந்த தனி ஸ்தாபனமொன்றை அமைப்பதற்கு பர்மாவின் இப்போதைய நிலைமை மிகவும் தகுதியுடையதாயிருக்கிறது. இந்தியாவானது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழ் வெகு காலம் வரை நீடித்திருக்கப் போவ

தில்லை யென்பதைப் பிரிட்டிஷார் நன்கு அறிந்து கொண்டிருப்பதால் தான், பர்மாவை இந்தியாவிலிருந்து பிரிவினை செய்து கொண்டு விட்டார்கள். பிரிவினை யானது மிகவும் ஆழ்ந்து யோசிக்கத் தக்கது. மூலப் பொருள்கள் நிறைந்தது பர்மா. அதனுடைய மண் ணெண்ணெயும் மூலப் பொருள்களுமே பர்மாவைப் பிரிட்டிஷார் பிரிக்கும்படி செய்து விட்டன. தேசீயத் தையும் அபேதவாதக் கொள்கையையும் ஏக காலத்தில் பொது ஜனங்கள் ஏற்றுக்கொண்டு வேலை செய்ய வேண்டும்.

ஜவஹர், திரு. மு. லெட்சுமணத் தேவர் என் னும் ஊப்போனு அவர்களுடைய வீட்டின் மேன் மாடியில் தங்கி யிருந்தார். உள்ளூர் நகரத்தார்களால் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட அறுசுவை உண்டி ஜவஹருக் களிக்கப்பட்டது. டோபமா மகாநாட்டில் வாசித்தளிக்கப்பட்ட பத்திரம் சிவப்பு மையில் அச்சி டப்பட்டிருந்தது. அது "நியூ பர்மா"வில் வெளியிடப் பட்டது. அவ்விதம் வெளியான எல்லாப் பிரதி களையும் பர்மா அரசாங்கத்தார் பறிமுதல் செய்துவிட் டார்களெனப் பின்னல் தெரியவந்தது.

# தெய்ன்ப்பியூ மைதானத்தில் ஜவஹர்

## சுதந்தரத்துக்காகப் போராடுங்கள் தென்னிந்திய சங்கங்களின் உபசாரம்

(11-5-37)ந் தேதி இரவு சுமார் 8 மணிக்கு, ரங்கூன் தெய்ன்ப்பியூ மைதானத்தில், உள்ளூர்வாசிகளின் பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது. மழையோ வருஷித்துக் கொண்டிருந்தது. ஆயினும் ஜனங்கள் அமைதியுடனிருந்து பிரசங்கத்தைக் கேட்டனர். அக் கூட்டத்தில், தாம் பர்மாவிற்கு வந்து நாட்கள் ஐந்து தான் ஆகின்றனவென்றும் இந்நாட்களுக்கிடையில் தாம் பார்த்தவைகள் யாவும் தம்மைக் கவர்ந்துவிட்டன வென்றும் ஜவஹர் கூறிக்கொண்டு, தமது பிரசங்கத்தை யாரம்பித்தார்.

இந்தியாவின் ஓர் பாகமாக இருந்திருப்பதால், பர்மா தேசம் எனக்குப் புதிதாகத் தோற்றவில்லை. பர்மா பிரிவினையால் பர்மாவுக்குப் புதிதாக அத்தியாயம் துவக்கப் பட்டிருப்பதாய்ச் சிலர் கூறினார்கள். ஆனால், பர்மாவானது இன்னும் பிறருடைய ஆளுகைக்குட்பட்ட தாகவே இருந்து வருகிறது. கடந்த இருபது வருடங்களில் இந்தியாவில் தேசீய உணர்ச்சி அதிகரித்துக் கொண்டு வருகிறது. அதன் காரணமாக அந்நாட்டில் பிரிட்டிஷாரின் ஆளுகையைக் கண்டனம் செய்வதற்குரிய சக்தி நாளடைவில் பெருகிக்கொண்டு வருகிறது. படித்தவர்கள் கூட்டத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் பரவி வருகிறது. ஆயிரக் கணக்கானவர்கள்

தொழிலில்லா திருக்கின்றனர். அவர்களுடையவும் விவசாயிகளுடையவும் நிலைமை ஒரே விதமாயிருக்கிறது. சிலரைத் தவிர, அரசாங்கத்தாரால் லண்டன் வட்டமேஜை மகாநாட்டிற்கு நிலச்சுவான்தார்கள் ஜமீந்தார்கள் இராஜாக்கள் நவாப்புகள் இவர்களே அழைக்கப் பட்டிருந்தார்கள். இந்த நவாப்புகளும், ஜமீந்தார்களும் பொதுஜனங்களால் தெரிந்தெடுக்கப் பட்டவர்களன்று. ஆனால், அரசாங்கத்தாரால் நியமனம் செய்யப்பட்டவர்கள்! அவர்கள் ஒரு முடிவுக்கு வர முடியாமற் போனதற்கு அதுதான் காரணமாகும். அவர்களால் பல பிரச்னைகள் கிளப்பி விடப்பட்டன. ஆனால் அவைகள் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்படவில்லை! எப்படியோ பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அரசியல் திட்டமொன்றைத் தயாரித்தனர். இந்தியர்களுக்கு அந்த அரசியல் திட்டத்தின் மூலம் அதிகப்படியான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சிலர் எண்ணினார்கள். இதைப்பற்றிச் சொல்வதாயிருந்தால் தங்களுடைய நன்மையை முன்னிட்டு மேற்கொண்டு பல அதிகாரங்களை யடைந்து கொள்வதற்காக பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இதன் மூலம் முயற்சி எடுத்துக் கொண்டதாகவே நான் கூறுவேன். பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட ரீதியான பிரதிநிதிகளடங்கிய சபையால் தயாரிக்கப்படுகிற அரசியல் திட்டத்தையே இந்தியா கோருகிறது. லண்டனில் உட்கார்ந்துகொண்டு வெளியாட்களால் தயாரிக்கப்படுகிற அரசியல் திட்டம் வேண்டியதில்லை. இந்தியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் காங்கிரஸிற்கு வெற்றி கிடைத்தது. ஆறு மாகாணங்களில் காங்கிரஸ் மெஜாரிட்டியுடனிருந்து வருகிறது. மாகாண கவர்னர்கள் வாக்குறுதியளிக்க மறுத்துவிட்டதால் காங்கிரஸும் பதவி ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்

பாலான அங்கத்தினர்களின் ஆதரவின்றி அரசாங்கத்தார் தங்களிஷ்டப்படி மந்திரிகளை நியமித்திருக்கின்றனர். அந்த மாகாணங்களில் சட்ட சபைகள் இன்னும் கூட்டப்படவில்லை. சட்ட சபையைக் கூட்டி வைப்பதற்குச் சரியான காலம் இதுவல்ல என அரசாங்கத்தாரால் காரணம் கூறப்படுகிறது. சட்டசபைகளைக் கூட்டி வைக்கும் பட்சத்தில் இந்த நியமன மந்திரிகள் பதவியினின்றும் தள்ளப்படுவார்களென்பது தான் அதற்குக் காரணமாகும். இந்தியாவில் சுதந்தரப் போராட்டம் நடந்து கொண்டே வருகிறது. ஆனால் சத்தியாக்கிரகமாவது அது போன்ற இதர இயக்கங்களாவது கைக்கொள்ளப்படவில்லை. விசாரணையின்றி வங்காளத்தில் நூற்றுக் கணக்கான யுவர்களும் யுவதிகளும் இன்னும் சிறையில் வைக்கப்பட்டிருக்கின்றனர். இவ்விதமிருக்கும் பட்சத்தில் புதிய அரசியலினால் என்ன நன்மையுண்டென்று கேட்கிறேன். பல பாதுகாப்புகளைக் கொண்டிருப்பது புதிய அரசியல். பொதுவாக பிரிட்டிஷ் வர்த்தகத்தைப் பாதிக்கக் கூடிய எந்தக் காரியத்தையும் செய்யக்கூடாதென்பதே அந்தப் பாதுகாப்புகளின் அமிசமாகும். இந்த லட்சணத்தில் இந்திய வர்த்தகம் எப்படி உருப்பட்டு வருவது ? நாட்டிலே உண்ண உணவின்றியும் வேலையில்லாமலும் தவிக்கின்றனர். சுயராஜ்யமடைவதைக் கொண்டே அவற்றிற்குப் பரிகாரம் தேட முடியும். பர்மாவின் நிலைமையும் அதைப்போலவே தானிருக்கிறது. பட்டினியும் வேலையில்லாத் திண்டாட்டமும் இந் நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. இருந்தாலும் இந்தியாவைப்போல் அவ்வளவு மோசமாயில்லை. எண்ணெய், பெட்ரோல், தேக்கு, சுரங்கக் கனிகள் முதலியவற்றால் பர்மா நிறைந்த செல்வத்தைப் பெற்றிருந்தது. ஆனால், வெளிநாட்டார் அவைகளினால் நலனடைந்தார்கள். பர்மா பிரிக்கப்பட்டிருப்பதற்கும் அது

வே தான் காரணமாகும். வரப்போகும் யுத்தத்திற்கு எண்ணெய் மிக அவசியமானதாகும். போதிய எண்ணெய் இல்லாமல் எந்த ஒருநாடும் யுத்தத்தில் எதிர்த்து நிற்க முடியாது. பிரிவினைக்கு அதுவும் ஓர் காரணமாகும். ஸ்பெய்ன் தேசத்தில் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. பாஸிஸக் கொள்கைக்கும் தேசீயக் கொள்கைக்கும் நடைபெறுகிற போராட்டம் தான் அது. அந்த யுத்தத்தின் முடிவைக் கொண்டே ஐரோப்பாவின் எதிர் காலம் எத்தகைத்தாயிருக்குமென நிர்ணயிக்க முடியும். எவ்விதமிருப்பினும் அது நம்மையும் பாதிக்கவே செய்யும். பாஸீஸக் கொள்கை வெற்றிபெற்றால் அதனால் ஏகாதிபத்தியக்கொள்கை வெற்றியடைந்ததற்கு ஒப்பாகவிருக்கும். இதனாலேயே இந்தியர்கள் அனுதாபம் கொண்டு இப்போதைய ஸ்பெய்ன் அரசாங்கத்தாருக்கு யுத்தத்தில் உதவி செய்து வருகிறார்கள். ஸ்பெயின் ரணக்களத்தில் இப்போது சுமார் நூற்றுக்கு மேலான இந்தியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்களென்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். காயம் பட்டவர்களின் சிகித்சைக்காக இந்தியர்கள் பணம் அனுப்பியிருக்கின்றனர். பர்மாவில் பர்மியர்களுடைய சுதந்தரப் போராட்டத்தில் பர்மியர்களுடன் சேர்ந்து கொண்டு உதவி புரிய வேண்டும் என பர்மாவிலுள்ள எனது இந்திய சகோதரர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஜவஹர் தமது பிரசங்கத்தை முடித்துக்கொண்ட பின்னர், பம்பாய் கிளப், ரங்கூன் தென்னிந்தியர் சங்கங்களாலும் சிந்தி வர்த்தக சங்கத்தாலும் இன்னும் இதர வாலிபர் சங்கங்களாலும் அளிக்கப்பட்ட பத்திரங்களை யேற்றுக் கொண்டார். மழை பெய்து கொண்டிருந்தும் கூட ஏராளமான ஜனங்கள் வந்திருந்தனர். இரவு 10 மணிக்குக் கூட்டம் கலைந்தது.

# பர்மா
# இந்திய வர்த்தக சங்கத்தார் உபசரிப்பு

(12-5-37) பிற்பகல் 4-மணிக்கு, ஜூபிலி ஹாலில், பர்மா இந்திய வர்த்தக சங்கத்தாரால் ஜவஹருக்குத் தேநீர் விருந்துபசாரம் அளிக்கப்பட்டது. விருந்தில் மூவாயிரம் பேர்கள் வரை காணப்பட்டனர். சங்கத் தலைவர் திரு. எஸ். என். ஹாஜி, உப-தலைவர் திரு. விர்ஜீபாய் தாயா, காரியதரிசி, திரு கே. எம். தேசாய், திரு. அ. மு. மு. வெள்ளையன் செட்டியார், எம். எச். ஆர்., ஜனப் எஸ். ஏ. எஸ். டயாப்ஜீ ஆகியோர் வரவேற்பில் கலந்து கொண்டனர். 4-30 மணிக்கெல்லாம் ஜவஹர் தமது குமாரி இந்திரா நேரு, பர்மா மாகாணக் காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசி, திரு. ராமேஷ்ணுத் கௌதம், தலைவர் சர்தார் கங்கா சிங், பாரிஸ்டர் ஊச் சோமியின்ட் முதலானோருடன் ஜூபிலி ஹாலையடைந்தார். அப்பொழுது ஜனங்கள் ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

திரு. எஸ். என். ஹாஜீயவர்கள், பர்மா இந்தியர் வர்த்தக சங்கத்தின் சார்பாக ஜவஹருக்கு வரவேற்புப் பத்திரத்தை வாசித்துப் பூமாலையை அணிவித்தார்.

## ஜவஹரின் பதில்

பர்மா இந்திய வர்த்தக சங்கத்தார் இவ்விதம் என்னை உபசரித்ததற்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சில வருடங்களுக்கு முன்னே இந்தியருக்கும் பர்மியருக்கும் ஏற்பட்ட



(12—5—37) சேவா நெல் நிர்ணய மசோதாவின் கர்த்தா., ஊஸ்ஸோவின் தேநீர் விருந்துபசாரம்.



(13—5—37) பாசீனில் பர்மிய இந்தியப் பெண் தொண்டர்களால் வரவேற்கப்படுதல்.

கருத்து வேற்றுமையின் காரணமாக கலகம் தோன்றியதைப்பற்றி இந்தியாவில் கேள்வியுற்றிருக்கிறேன். அது மிகவும் விசனிக்கத் தகுந்த சம்பவமாகும். நல்லதோ கெட்டதோ இரண்டையும் நெடுங் காலமாக இந்தியாவும் பர்மாவும் சேர்ந்து அனுபவித்து வந்தன. பொருளாதாரத்திலும் வர்த்தகத்திலும் இந்தியாவும் பர்மாவும் நசுக்கப்பட்டு வந்தன. இந்தியா, பர்மா இவ்விரண்டு நாடுகளுக்கும் வழங்கப்பட்டுள்ள புதிய அரசியல் சட்டங்களில் பிரிட்டிஷாருக்குப் பாதுகாப்பளிக்கக் கூடிய ஷரத்துக்கள் அடங்கியிருக்கின்றன. இதனால் வியாபாரத் துறையில் நாம் சதா காலமும் நசுக்கப்பட்டு வருகிறோம். இப்போதைய இந்திய அரசியல் நிலைமையைப்பற்றிச் சிலர், (Constitutional-Dead-lock) அரசியல் முட்டுக்கட்டை என நினைக்கின்றனர். உண்மையில் அதுவல்ல. ஏகாதிபத்திய விஸ்தரிப்புக் கொள்கைக்கும் தேசீயக் கொள்கைக்கும் நடைபெறுகிற போராட்டம்தான் அது. (இடையில் ஜவஹர் அதற்கு ஆதாரமாக உலக சரித்திரங்களை விரிவாக எடுத்துச் சொன்னார்.) பர்மியருடைய நலனை முதலில் கவனிப்பதாக உங்களால் அளிக்கப்பட்ட உபசாரப் பத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காக நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். இந்தியாவில் இந்தியர்களுடைய நலன்கள் கவனிக்கப்படுவதுபோல் பர்மாவில் பர்மியர்களுடைய நன்மையை முதலாவது கவனிப்பது அவசியமாகும். சுயாட்சி பெறுவதில் இந்தியாவும் பர்மாவும் ஒன்றையொன்று பின்னிக் கொண்டிருக்கின்றன.

## ஏகாதிபத்திய தபால் கட்டணம்

ஏகாதிபத்திய தபால் கட்டண உயர்வுக்குரிய மூல காரணம் எதுவென்பது எனக்குத் தெரியவில்லை. ஒரு

தலைப் பட்சமான எண்ணத்துடன் கட்டணத்தை உயர்த்தியிருப்பதாக மட்டும் தெரிகிறது. கல்கத்தாவுக்குக் கடிதம் போடுவதாயிருந்தால் அதற்குக் கட்டணம் அதிகமாக விருக்கிறது. எதிர் காலத்தில் பர்மா இந்தியா இவ்விரண்டு நாடுகளும் ஒத்து ஒரு படகில் லட்சியத்தை யடையும் பொருட்டு பிரயாணம்செய்யவேண்டியவைகளா யிருந்து வருவதைக் கவனிப்பார்களென்று நான் எதிர்பார்க்கின்றேன்.

# உவாக்கமாவில் ஜவஹர்

## ராஜோபசாரமான வரவேற்பு

மாலை 6-30 மணிக்கு, ஜவஹர், குமாரி இந்திரா நேரு, பாரிஸ்டர் ஊச்சோமியின்ட் முதலானோருடன் உவாக்கமாவுக்குப் பெருத்த ஆரவாரத்திற்கிடையே "க்ரோட்டோ" எனும் தனி ஸ்டீம் லாஞ்சில் ரங்கூன் துறைமுகத்தை விட்டுப் பிரயாணமானார். தேசியக் கொடிகளாலும் மணம் நிறைந்த பூக்களாலும் ஸ்டீம் லாஞ்ச் அலங்கரிக்கப் பட்டிருந்தது. ஜவஹரை அழைத்துச் செல்வதற்காகவென உவாக்கமாவிலிருந்து ரெங்கூனுக்கு பர்மிய மாதர் சங்கத்தின் தலைவி டோச்சின் மேயும், தனவைசிய இளைஞர்களில் பலரும் வந்திருந்தனர். ஸ்பெஷல் லாஞ்சில் உள்ளூர் வெளியூர் அன்பர்களுமாகச் சுமார் எண்பது பேர்கள் வரை காணப்பட்டனர். இரா முழுதும் இடைவிடாமல் கப்பல் உவாக்கமாவை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. பொழுது புலர்ந்தது. காலை நேரம். சுமார் 6-30 மணி. ஜவஹரை வரவேற்க ஆவலுடன் உவாக்கமாவாசிகள் துறைமுகத்திலே கூடினர். ஸ்பெஷல் லாஞ்ச் வரும் வழியைப் பார்த்த வண்ணமா யிருந்தனர். ஜவஹரைக் காணவும் பிரசங்கத்தைக் கேட்கவும் பாசின், மியாங்மியா, சூமங்கை, மோல்மீன்ஜான், அய்மென் முதலிய ஊர்களிலிருந்து பர்மியரும் இந்தியரும் உவாக்கமாவிற்கு வந்திருந்தார்கள். ஸ்பெஷல் லாஞ்ச் பாலத்தை அண்மியது. அப்பொழுது உள்ளூர் நெருப்பணைக்கும் படையைச் சேர்ந்த கோஷ்டியாரும் பயாக் கோவில் தர்ம கர்த்தாக்களும் நகரசபை அங்கத்தினர்களும் ஜவஹரை வரவேற்பதற்காக ஆயத்தமாயிருந்தனர். ஜவஹர், குமாரி இந்திராநேருவுடன் ஸ்பெஷல்

லாஞ்சிலிருந்து இறங்கினார். நகர சபையாரால் துறை முகத்தருகில் போடப்பட்டிருந்த தனிப் பந்தலுக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டார். அப்பால் நகர சபைக் காரியதரிசியால் ஆங்கிலத்திலும் பர்மிய பாஷையிலும் உபசாரப் பத்திரங்கள் வாசித் தளிக்கப் பட்டன. பின்னர், அலங்கரிக்கப்பட்ட மோட்டாரில் ஜவஹர் பயாஜீக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவ்விடத்தில் பொது ஜனங்களாலும் டோபமா சங்கத்தாராலும் மோல்மீன்ஜான், அய்மென் முதலிய ஊர் வாசிகளின் சார்பாகவும் ஜவஹருக்குப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன. ஜவஹரும் அவருடைய செல்வியும் புன்னகை பூத்த மலர்ந்த முகங்களுடன் உபசாரப் பத்திரங்கள் படிக்கப் படுவதைக் கேட்டுக் கொண்டிருந்தனர். தமக்கு வாசித்தளித்த உபசாரப் பத்திரங்களுக்குக் கீழ்க்கண்ட விதமாய் ஜவஹர் பதிலளித்தார்:—

## ஜவஹரின் பதில்

என்பொருட்டு பத்திரங்கள் வாசித் தளிக்கப் பட்டதற்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாசிக்கப்பட்ட பத்திரங்களில் என்னைப் பலவிதமாய்ச் சிறப்பித்தும் புகழ்ந்தும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நீங்கள் என்னைப் போற்றி அவ்விதம் எழுதியிருப்பதால் அவை உண்மையாயிருக்கமுடியுமா? எனச் சந்தேகப் படும்படி என்னைச் செய்து விட்டது. நான் பல் வித கஷ்டங்களுக்கு ஆளாகியிருப்பதாகப் பாராட்டுகிறீர்கள். பலரால் கஷ்டமென்று நினைக்கப் படுவது எதுவோ அதை விடுதலைப் போராட்டப்பிரியர்களாகிய நாங்கள் அபேட்சிப்பதில் சந்தோஷமடைகிறோம்.

## விடுதலைப் போர்

சுதந்திர வேட்கையுள்ள ஒரு நாடு அதனுடைய

லட்சியத்தை யடைவதில் எவ்வளவு தூரம் முன்னேறி யிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டு மானால், அந்த நாடு எவ்வளவு தூரம் வரை கொடுமைப் படுத்தப்பட்டு வருகிறது? என்பதைக் கவனிக்க வேண்டும். ஒரு நாடு எவ்வளவுக் கெவ்வளவு இம்சிக் கப்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு அந்த நாட்டின் விடுதலை சமீபித்து விட்டதாகக் கொள்ளல் வேண் டும். விடுதலைப் போரில் அந்த நாடு அவ்வளவு தூரம் முன்னேறி வந்து விட்டதால் அரசாங்கத்தார் திகி லடைந்தவர்களாகி அவ்விதம் கொடுமைப்படுத்துகிறார் கள் என நாம் அபிப்பிராயப்பட வேண்டியவர்களா வோம். நம்மிடத்தில் ஆயுதங்கள் கிடையா. நாம் ஆத்ம சக்தியால் போராட வேண்டியவர்களாவோம்.

நமது எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் யாரும் அடக்கிவிட முடியாது. ஆத்மப் போரில் அபேட்சை யென்ற அளவோடு காரியசித்தி ஏற்பட்டு விட மாட் டாது. நமது லட்சியத்தை அடையும் வரையில் நாம் சரிவர வேலை செய்ய வேண்டியவர்களா யிருக்கிறோம். அவ்வித ஆத்மீகப் போராட்டத்தைக் கொண்டு வெற்றி பெறுவதற்கு நம்மில் களங்கமில்லாத நல்லெண்ணம் இருக்க வேண்டும். இருந்தால் தான் ஜெயமடையலாம்.

## சமீபத்தில் விடுதலையாகும்

இந்தியாவிற்கு இப்பொழுது வழங்கப்பட்டுள்ள அரசியலானது ஒப்புக் கொள்வதற்குக் கொஞ்சமும் தகுதியற்றது. இருப்பினும், விடுதலைப்போரில் நமக் குப் பெரிய தடையாக அது இருக்கவில்லை. ஆனால் விடுதலையை நோக்கிச் செல்லும் பாதையை முட்கள் அடைத்துக் கொண்டிருப்பதையொக்க புதிய அரசியல் அமைக்கப்பட்டிருக்கிறது. முட்களை அகற்றுவதில்

நமக்கு அதிக கஷ்டமிருப்பதாக நான் எண்ணவில்லை. இந்தியாவில் ஆறு மாகாணங்களில் காங்கிரஸார் வெற்றி கொண்டிருப்பதால் அரசாங்கத்தார் பாடு வெகு திண்டாட்டமா யிருக்கிறது. சமீபத்தில் இந்தியா விடுதலையடையப் போகிறதென்று நாம் நினைப்பதற்கான ஆதாரங்கள் பல காணப்படுகின்றன. அரசாங்கத்தாரிடமிருந்து சுயேச்சை பெறுவதற்கு, பணக்காரர்களால் எதிர்க்கப்படுகிற அபேதவாதக் கொள்கையால் மட்டுந்தான் சாத்தியப்படும். எந்த நாடாயினும் சரியே, அந்த நாட்டில் பணக்காரர்கள் தங்களுடைய ஆதரவை அளிப்பதால் தான் அரசாங்கம் நிலைத்திருக்க முடிகிறது. அரசாங்கத்தாருடைய உதவியாலும் பாராட்டுதலாலும் பணக்காரர்கள் அசைக்க முடியாதவர்களா யிருக்கின்றனர். உடலும் உயிரும் போன்று பணக்காரர்களும் அரசாங்கத்தாரும் ஒருவருக்கொருவர் ஆதரவாயிருந்து வருகிறார்கள். எனவே, நாம் பணக்காரர்களுடன் போராடிக் கொண்டு அபேதவாதக் கொள்கையின்படி வேலை செய்ய வேண்டியவர்களா யிருந்து வருகிறோம்.

## பர்மாவின் லட்சியத்தைக் காணோம்

பர்மாவின் கொள்கை என்ன வென்றறிவதற்கு அதன் லட்சியத்தைக் காண முடியவில்லை. மறைந்து விட்டது. பர்மாவின் தலைவர்களைப் பார்க்க முடியவில்லை. அதற்காக வருந்துகிறேன். படிப்படியாய் அரசியல் திட்டத்தைப் பெறுவதும் பின்னால் அதிலுள்ள குறைகளைப் படிப்படியாய் திருத்திக் கொண்டு அரசியலை நடத்துவதும் என்ற கொள்கையை நான் விரும்பவில்லை. எதிரியின் கோட்டையைச் சமீபித்து விடுவதால் மட்டும் யுத்தத்தில் ஜெயித்து விட்டதாக எண்ணி விடக்கூடாது. எதிரியின் கோட்டையை அப்படியே முற்றுகையிட்டுக்

கொண்டாலொழிய, எதிரியைத் தாங்கள் மடக்கி விட்டதாக நினைப்பது சரியல்ல. காகிதத்தின் பேரில் பர்மா பிரிக்கப்பட்டு விட்டதாக எழுதப்பட்டிருப்பதைக் கொண்டு, நாமும் இந்தியா பர்மா பிரிவினை செய்யப்பட்டு விட்டதாகச் சொல்லிக் கொள்வது உசிதமல்ல. இந்தியரும் பர்மியரும் ஒருவர் மீதொருவர் நல்லெண்ணத்தை வளர்த்துக் கொண்டு வருவார்களாயின், அவ்விரு சமுகத்தாரை யாரும் பிரித்துவிட முடியாது. இந்தியா, பர்மா இவ்விரு நாடுகளும் பிரிக்கப்பட்டு விட்டதால் அவை சுதந்தரம் பெற்ற நாடுகளாகிவிட மாட்டா. அவ்விரண்டு நாடுகளும் ஒத்த அடிமைகளே. சென்ற 50 வருடங்களாக காங்கிரஸ் மகாசபையானது சுயேச்சைக்காகப் போராடிக் கொண்டு வருகிறது. அதனுடைய வேலைத் திட்டத்தின் நல்ல அமிசங்களை ஆதாரமாகக் கொண்டு பர்மாவில் வேலை செய்து வருவதாயிருந்தால் உசிதமாயிருக்கும்.

9-30 மணிக்கு ஜவஹர், நகரத்தார் கோவிலுக்குச் சென்றார். பின்னர், நகரத்தார்களாலும் பர்மியர்களாலும் தயாரிக்கப்பட்ட அறுசுவை உண்டிக்குப் பின் ஜவஹர், பாசீனுக்கு ஸீப்ளேனில் பிரயாணமானார்.

# பாசீனில் ஜவஹர்

## இந்திய, பர்மிய ஸ்திரீகள் உத்சாகம்

பர்மாவின் துறைமுகப் பட்டணங்களுள் பாசீனும் ஒன்று. இயற்கையிலும் செயற்கையிலும் செழிப்புற்றோங்குவது. அகன்ற வீதிகளையும் அவற்றிற்கேற்ற கட்டிடங்களையும் கொண்டது. காலத்துக்கேற்ப, நில, நீர், ஆகாயப் போக்குவரத்து வசதிகளைப் பெற்றிருப்பது. பல்வேறு வகுப்பினர்களின் தாயகமாய் திகழ்வது. இன்னோரன்ன பலசீருஞ் சிறப்புகளைக் கொண்டுள்ள பாசீனுக்கு, நமது தலைவர் ஜவஹர் ஆகாயக் கப்பலில் வந்திறங்கினார். அச் சுப செய்தியைப் பீரங்கி வெடி தீர்ப்பதன் மூலம் நகரவாசிகளுக்கும் சுற்றுப்புற வாசிகளுக்கும் அறிவிக்கப்பட்டது. உபசரணைக் கமிட்டித் தலைவராலும், அங்கத்தினர்களாலும் ஜவஹர் வரவேற்கப்பட்டார். அப்பால் நகரின் முக்கிய தெருக்களின் வழியாக ஜவஹர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். ஊர்வலச் சிறப்பைப்பற்றி என்னென்று வர்ணிப்பது? தொண்டர்கள் யாவரும் பெண்கள் மயம். பர்மிய இந்தியப் பெண்கள் மட்டும் அல்ல. அவர்களோடு சீன்காரப் பெண்களும் சேர்ந்திருந்தனர். பர்மிய ஊதா நிறத் தொண்டர் படைக் கோஷ்டியார் அணிவகுத்துச் சென்றனர். இது ஒரு புறமிருக்க, பச்சை, வெள்ளை, ஆரஞ்சு முதலிய நிறங்களில் பெண் தொண்டர்கள் தத்தம் சுதேச உடைகளுடன் ஊர்வலத்தில் தேசீயக் கொடிகளைப் பிடித்துக்கொண்டு அன்ன நடையில் சென்ற நங்கையரின் காட்சி ஜனங்களின் கண்கொள்ளாக் காட்சியாயிருந்ததெனலாம். சமுத்திரம் போன்றதொரு கூட்

டம் ஊர்வலத்தில் காணப்பட்டது. ஊர்வலம் ஏறக் குறைய அரை மைல் தூரமிருக்கலாம். இந்து மத சம்பிரதாயட் என்ற வழக்கு நம்மில் இன்றளவும் உண் டல்லவா? அதை இந்திய சகோதரிகள் விட்டுவிடுவார் களா. ஜவஹரை எதிர்கொண்டு வரவேற்ற சமயத் தில் இந்து மத சம்பிரதாயப்படி இந்திய சகோதரி யொருவரால் ஜவஹருக்கு ஆரார்த்தி யெடுக்கப்பட்டு, அவரது நெற்றிக்குத் திலகமும் இடப்பட்டது. இச் சிறந்த-இவ்வுயர்ந்த மரியாதையை ஜவஹர் பாரீனிலே தான் முதலாவதாகப் பெற்ருர். அலங்கரித்திருந்த மோட்டாரில் ஜவஹர் அழைத்துச் செல்லப்பட்டார்.

## உபசாரப் பத்திரங்கள்

ஷூவேமுடோ பயாக் கோவில் பிரகாரத்திலே, உள்ளூர் வாசிகளாலும் சுற்றுப்புற வாசிகளாலும் சேர்ந்தளிக்கப்பட்ட உபசாரப் பத்திரத்திற்கு ஜவஹர் தகுந்த விதத்தில் பதிலளித்தார். உபசரணைக் கமிட்டி யாருக்கும் முனிசிபல் கமிட்டியாருக்கும் ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தால், நகரசபையின் சார்பிலே அளிக்கப்பட விருந்த உபசாரப் பத்திரம் ஜவஹருக்கு வாசித்தளிக்காமலே கை விடப்பட்டது. ஜவஹர், தங்கியிருந்தது சில மணி நேரங்கள் வரை தான். இதற் கிடையில் அவர், நகரத்தார் கோவிலுக்கும் சீனர்கள் பள்ளிக்கூடத்துக்கும் விஜயம் செய்தார். பிற்பகலில் ஜவஹர் தமது சகாக்களுடன் ரங்கூனுக்கு ஸீப்ளேணில் பயணமானர். செல்லும் வழியில் மௌபினில் இறங்கி, இந்தியர்களுடைய சார்பாகவும் நகரசபையினுடைய சார்பாகவும் வாசித்தளிக்கப்பட்ட உபசாரப் பத்திரங் களைப் பெற்றுக் கொண்டார்.

# டப்பரின் தோட்டத்தில்

## தொழிலாளர்களுக்கு உபதேசம்

இரவு 9-மணி. விளக்குகளின் பிரகாசம் ரங்கூன் டப்பரின் தோட்டத்தில் எங்கும் நிறைந்திருந்தது. ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் ஒலி பரப்புக் கருவிகள் அமைக்கப்பட்டிருந்தன. விரிந்து பரந்த கடலைப் போன்று தொழிலாளர்கள் ஆயிரக் கணக்காய்க் கூடியிருந்தனர். பெருத்த கரகோஷத்துக் கிடையே ஜவஹார் வரவேற்கப்பட்டார். அவருக்கு நூற்றுக்கு மேலான மாலைகள் போடப்பட்டன.

பின்னர், ரங்கூன் தொழிலாளர்களின் சார்பில் திரு. ஏ. நாராயண ராவ், எம். ஏ., யால் உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது.

## இந்தியில் ஜவஹார் பதில்

பர்மாவுக்கு நான் வந்து சில நாட்கள் தானுகின்றன. இச் சில நாட்களில் பல இடங்களில் பேசும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. பர்மாவைப்பற்றியும் இந்தியாவைப்பற்றியும் நான் தெரிந்து கொண்டிருப்பவற்றை உங்களிடம் சொல்லிவிட்டேன். பர்மா பிரிக்கப்பட்டுப்போனாலும் கூட இவ்விரு நாட்டு மக்களும் ஒருவர் மீதொருவர் நல்லெண்ணம் கொண்டவர்களாகவே இருந்து வருகின்றனர். ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் செழிப்புக்கும் காரணபூதர்களாயிருப்பவர்கள் தொழிலாளர்கள் தான். பர்மாவிலுள்ள தொழிலாளர்களுடைய நிலைமையை அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் பர்மா அரசாங்கத்தாருடன் இந்திய அரசாங்கத்தார் பேசி முடிக்கும்படியான ஏற்பாட்டைக் காங்கிரஸ் மகா சபை மேற்கொள்ளும்படி நான் காங்கிரஸைக் கேட்க வேண்டுமெனப் பத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் மகா சபை அவ்விதம் நடந்துகொள்ள மாட்

டாது. "நாடு எங்களுடைய நாடாயிருப்பதால் எங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுத்துவிட்டுச் செல்லுங்கள்" என காங்கிரஸ் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும். இந்தியாவில் பெரும்பாலான மக்கள் பட்டினியாலும் வறுமையாலும் தொழிலில்லாமலும் திண்டாடுகின்றனர். இந்தியாவுக்குச் சுதந்தரம் கிடைத்த மேல்த்தான் இத்தகைய பிரச்னைகளைத் தீர்க்க முடியும். பர்மாவிலே தொழிலாளர்கள் யாவரும் ஐக்கியப்பட்டு தங்களின் நிலைமையைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்திய—பர்மியத் தொழிலாளர்களுக்கு மத்தியிலே ஒற்றுமை நிலவ வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். பர்மாவிலுள்ள தொழிலாளர்களனைவரையும் ஒன்றுபடுத்தக்கூடிய விதத்தில் லேபர் யூனியன் சபையை அமைக்கும்படியாக பர்மிய சகோதரத் தொழிலாளர்களை வேண்டுகிறேன். இந்த முறையைக் கொண்டுதான் தொழிலாளர்களால் தங்களுடைய செல்வாக்கை அதிகரித்துக்கொள்ள சாத்தியப்படும். இந்திய கப்பல் வர்த்தகர்களும் தொழிலாளிகளின் முதலாளிகளும் தொழிலாளர்களின் நன்மைக்கான விஷயங்களில் சிரத்தையெடுத்துக்கொள்ளாமலிருந்து வருகிறார்களென்ற செய்தியைக் கேட்டு நான் மிகவும் விசனிக்கின்றேன். தொழிலாளிகளிடம் சுரண்டுவதிலும் அவர்களுடைய உழைப்பால் அதிக ஊதியத்தை அடைவதிலும் தான் ஆவலுடையவர்களாயிருக்கின்றனர். மேஸ்திரி திட்டம் ஒழிக்கப்பட வேண்டும். வருமானத்தில் பாதியை மேஸ்திரிகள் எப்பம் போட்டு விடுகிறார்கள். தொழிலாளர்கள் வாசஸ்தல நிலைமை மிகவும் கவலைக்கிடமானதாயிருக்கிறது. ஒரு வீட்டில் 30, 40 பேர்களிருப்பதைக் கேட்டு ஆச்சர்யப்பட்டேன். பர்மாவை விட்டுச் செல்லுமுன், நான் தொழிலாளர்கள் வதியும் அத்தகைய இடங்களைப் பார்வையிட எண்ணியுள்ளேன்.

# புரோமில் ஜவஹர்

(14-5-37)ந்தேதி காலை 8-30 மணிக்கு, ஜவஹர் இந்திரா நேரு, ஊச்சோமியின்ட் ஆகியோருடன் ஸீப் ளேனில் வந்திறங்கினர். டோபமா சங்கத்தாரின் உபசரிப்பை அங்கீகரிக்க உபசரணைக் கமிட்டியார் தயங்கினர்கள். இவ்வித அசம்பாவிதம் ஏற்படாதிருந்தால் ஜவஹர் இன்னும் சிறந்த முறையில் வரவேற்கப் பட்டிருப்பார். உபசரணைக் கமிட்டித் தலைவர் ஊபாஊவாலும் காரியதரிசி டாக்டர் பிரகஸ்பதியாலும் அங்கத்தினர்களாலும் ஜவஹர் வரவேற்கப்பட்டு முக்கிய தெருக்களின் வழியாய் மோட்டாரில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். தெருக்களில் அழகிய பந்தல்கள் போடப் பட்டிருந்தன. ஒவ்வொரு பந்தலிலும் மாலைகள் அணிவிக்கப்பட்டன. உள்ளூர் ஷ்வேஸான்டோ பயாக் கோவிலுக்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்தார். பின்னர் கோவிலுக்குச் சமீபத்தில் அமைக்கப்பட்டிருந்த விசேஷப் பந்தலில் டோபமா சங்கத்தாராலும் நகர சபையாராலும் உள்ளூர் வாசிகளாலும் தனித்தனியே பத்திரங்கள் படித்துக் கொடுக்கப்பட்டன. சீக்கியர் கோவிலில் நடந்த தேநீர் விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட பின்னர், ஸீப்ளேனில் ரங்கூனுக்குத் திரும்பினர்.

# செட்டியார்கள் சங்கத்தின் உபசரிப்பு

பிற்பகல் 4 மணிக்கெல்லாம் ஜூபிலி ஹாலிற்கு உள்ளூர் வெளியூர்ச் செட்டியார்கள் வர ஆரம்பித்தனர். இதர இந்தியப் பிரமுகர்கள் பலர், இத் தேநீர் விருந்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். ஹாலின் உட்பக்கம் தேசீயக் கொடிகளால் அலங்கரிக்கப்பெற்றிருந்தது. ஜவஹர் வருகையில் சுமார் அரை மணி நேரம் தாமதமேற்பட்டது. கம்பை தனவைசியக் கல்விக் கழகத்தைச் சேர்ந்த வாலிபச் சாரணர்கள் ஜூபிலிஹாலின் வாசலண்டை இருமருங்கிலும் அணி வகுத்து நின்று ஜவஹருக்கு மரியாதை செலுத்தினர். ஜவஹர் தேநீர் விருந்தில் கலந்து கொண்டார். அப்பால் மேடைக்குத் தலைவர் திரு. ராம. அரு. அரு. ராம. சொக்கலிங்கஞ் செட்டியார் காரியதரிசி திரு, அழ. வீர. பெ. லெட்சுமணன் செட்டியார், திரு. அ. மு. மு. வெள்ளையன் செட்டியார் இவர்களால் அழைத்துச் செல்லப்பட்டார். ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த வரவேற்புப் பத்திரம் திரு. அ. மு. மு. வெள்ளையன் செட்டியாரால் வாசிக்கப்பட்டு, தலைவரால் வெள்ளிப் பேழையில் வைத்து ஜவஹருக்களித்து, மாலையும் சூட்டப் பெற்றது.

பின்னர் ஜவஹர் எழுந்து பேசினர். அதன் சுருக்கம் வருமாறு:—

இளவைசிய இளைஞர் தமிழ் சங்கம்
Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

# முதலாளித்துவத்திற்கு தயை தாட்சண்யம் இல்லை

## முதலாளித்துவம் சைத்தானுக்குச் சமமானது, கொலை பாதகனை ஒத்தது

தற்கால உலகின் பெரும்பாலான ஜனங்களால் விரும்பப்படாத முதலாளி வகுப்பைச் சேர்ந்தவர்கள் நீங்களும். இந்தியாவிலும் பர்மாவிலும் செட்டியார்கள் தங்களுடைய மூலதனத்தைப் போட்டு வைத்திருக்கின்றனர் தங்களுடைய நன்மையையும் தங்களுடைய முன்னேற்றத்தையும்தான் அவர்கள் கவனிப்பதோடு பாதுகாத்துக் கொள்வதாய்க் கூறப்படுகிறது. இதனாலேயே செட்டியார்கள் பலருடைய சந்தேகத்திற்கிலக்காகியுள்ளனர், உலகில் நிகழ்ந்து வரும் மாறுதல்களினால் செட்டியார்களுடைய தொழிலும் பாதிக்கப் படலாம். அப்பொழுது சிறிதாகவோ அதிகமாகவோ பாதிக்கப் படினும் சரியே அல்லது நஷ்டப்படினும் சரியே காலத்தை யனுசரித்து அவர்கள் நடந்து கொள்ளுமாறு விரும்புகிறேன். செட்டியார்கள் தங்களுடைய பிரச்னையைப் பற்றிச் சிந்திக்கும் காலத்தில் உலகத்தின் நிலைமைகளையும் சேர்த்துக்கொண்டு ஆலோசிக்கும்படி விரும்புகிறேன். இம் மாபெரும் உலகத்தில் இப்போது என்ன நடந்து கொண்டிருக்கிறது? ஏதோ ஒன்று ஏற்படப்போவது போலவும் ஏதோ ஒன்று அழிந்துவிடப் போவதுபோலவுமே நாம் காண்கிறோம்.

## இப்போது யுத்தம் ஏற்பட்டால்

விவசாயிகளுடையவும் தொழிலாளிகளுடையவும் மனப்போக்கைச் செட்டியார்களாகிய நீங்களும் நாமும்

அறிந்து கொள்ளாதவர்களா யிருந்து வருகிறோம். அவர்கள் எப்படி வசிக்கிறார்கள்; அவர்கள் எப்படிச் சாப்பிடுகிறார்கள் என்பதைப் பற்றிய சிரத்தையாவது கருணையாவது கொள்ளக்கூடாத சமூகத்தாரைப் போன்று செட்டியார்களாகிய நீங்கள் இருக்கக் கூடாது. விவசாயிகளுடையவும் தொழிலாளிகளுடையவும் உண்மை நிலையைச் செட்டியார்கள் அறிந்து கொள்ளுமாறு விரும்புகிறேன். அவர்களைப் பற்றிச் சரியானபடி அறிந்துகொள்வதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டும்.

தொழிலாளிகளுக்கும் விவசாயிகளுக்கும் கடன் கொடுத்து வாங்குபவர்கள் என்ற தோரணையில் செட்டியார்களாகிய நீங்கள் அவர்களைப் பார்க்கக்கூடாது. உயர்ந்த மனப்பான்மை கொள்ளுங்கள். தங்களுடைய செல்வத்தால் 5 வருடத்தில் இன்னது ஆயிற்றென்றும் 10 வருடத்தில் இன்ன முன்னேற்றம் ஏற்பட்டதென்றும் போன்ற விஷயங்களை நீங்கள் சொல்லிக் கொண்டிராதேயுங்கள். உலகத்தில் இனி என்ன நிகழுமோ தெரியாது. என்ன மாறுதல்கள் ஏற்பட விருக்கின்றனவோ அறிவதற்கில்லை. இப்பொழுது யுத்தம் ஏற்பட்டால் முந்திய யுத்தங்களைவிட அது மிக மோசமானதாயிருக்கும்.

## ஏகபோக பாத்யதை

இந்தியப் பணக்காரர்கள் தங்கள் செல்வத்தால் பர்மாவைச் செழிப்புறச் செய்திருப்பதாய்ச் சொல்வதைக் கேட்டறிந்து கொண்டேன். நாடு முன்னேற்றமடைவது அவசியமா யிருக்கிறது. நீங்கள் எதைச் செய்தாலும் சரியே, இந்தியாவினுடையவும் அதன் மக்களினுடையவும் நன்மையைக் கோரிச் செய்யுமாறு

அபேட்சிக்கிறேன். ஏனெனில் ஒரு சமயம் முடிந் தால் நாம் வெளிநாட்டின் ஆதிக்கத்தை அறவே விட் டொழிப்பதற்கும் தயாரா யிருக்கவேண்டும். சாமான் கள் உற்பத்தி செய்வது மற்றொரு பிரச்னையாகும், செல்வம் திரட்டுவது, 1937 ஆம் ஆண்டின் முதலாளி களுடைய கொள்கையா யிருக்கிறது. அதற்காக ஏக போக பாத்யதை கொள்கின்றனர். ஏகபோக பாத் யதை கொண்டாடுவது அதிகரித்து வரவர பணக்காரர் கள் உடைமையை மேலுமேலும் அபேட்சிக்கத்தான் செய்வார்கள். அச் சமயத்தில் பணக்காரர்கள் பிசாசு களை யொத்திருப்பர்; கொலை பாதகனை யொத்திருப் பர். முதலாளித்துவத்திலே ஈவிரக்கம் என்பதே கிடையாது.

## பணக்காரர் கொள்கை

என்றாலும் நீங்கள் என்னிடம் கேட்கக் கூடியதொன்றிருக்கிறது. பணக்காரர் கொள்கையில் பிரயோஜனகரமான விஷயங்கள் உண்டா இல்லையா என்ற கேள்வியே. பணக்காரர்கள் கொள்கையைக் கொண்டு பார்க்கும் பட்சத்தில், அதில் சாமான் கள் உற்பத்திக்கான நல்ல மார்க்கங்களைக் காண முடி யாது. பர்மாவின் பெரும்பாலான நிலங்கள் தங்கள் வசம் வந்து விட்டதாகச் செட்டியார்களாகிய நீங்கள் வாசித்தளித்த பத்திரத்தில் சொல் லப்பட்டிருப்பதைக் கொண்டு தெரிந்து கொண்டேன். நீங்கள் நில புலன்களை வைத்துக்கொள்ளக் கூடிய வகுப்பினர்களன்று. அந்த நிலங்களை என்றைக்காவ தொரு நாளில் நீங்கள் விட்டுவிட விருப்பம் கொள்வீர் கள். அந்த நிலங்களை நீங்கள் என்ன செய்யப் போகி றீர்கள்? பயிர் சாகுபடி செய்யக் கூடியவர்கள் உங் களுடைய நிலங்களை வாங்கக் கூடிய அல்லது சாகுபடி



(14—5—37) ப. நா. செ. சங்கத்தின் சார்பாக திரு. அ. மு. மு. வெள்ளையன் செட்டியார், M. H. R., பத்திரம் வாசித்தல்.




(14—5—37) ப. நா. செ. சங்கத்தின் பத்திரத்திற்கு ஜவஹர் பதிலளித்தல்.

செய்யக் கூடிய நிலைமையில் இல்லா விட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

உதாரணமாகச் சொல்வோமே. நீங்கள்தான் மில் சொந்தக்காரர்கள் என வைத்துக் கொள்வோம். உங்களுடைய தொழிற்சாலையி லிருந்து செய்யப்படுகிற சாமான்களை விவசாயிகளும் தொழிலாளிகளும் வாங்கக் கூடிய தகுதியுடையவர்களாய் இல்லாமற்போனால் மேற்கொண்டு சாமான்களை உற்பத்தி செய்ய முடியுமா? அப்பொழுது தொழிற்சாலையின் வேலையை நிறுத்தி வைக்க வேண்டியது ஏற்படும் அல்லவா? என்றைக்காவது ஒரு நாளில் ஜனங்களால் வாங்க முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டால் அப்பொழுது போர்டு மோட்டார் கம்பெனி செல்வரும்கூட தமது தொழிற்சாலையைச் சாத்தி விடும்படியான நெருக்கடிக்கு வந்து விடக்கூடுமல்லவா? எனவே தங்களுடைய செல்வத்தைப் பெருக்கிக் கொள்வதற்குப் பலரும் வாங்கக் கூடிய தகுதியுடையவர்களா யிருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். பெரும் செல்வர்கள் நூறு பேர்களிடத்தில் கோடிக் கணக்கான திரவியங்களிருக்கலாம். இருந்தாலும் லட்சம் பேர்கள் வாங்கி உபயோகித்துக் கொள்கிறதைப் போல் பணக்காரரொருவர் செலவு செய்ய மாட்டார்.

## என்ன பிரயோஜனம்

பணக்காரரா யிருப்போ ரெல்லாம் ஆயிரக் கணக்காய் துணிமணிகளைத் தங்களுடைய உபயோகத்துக்காக வைத்துக் கொள்ள முடியாது. தங்களுடைய குடும்பத்தாருக்குத் தேவைப்படுகிற அளவுக்கு மேல் பணக்காரர்கள் செலவு செய்ய மாட்டார்கள். இருக்கப்பட்ட சாமான்களைப் பொது ஜனங்கள் வாங்கக்கூடாத நிலைமையிலிருந்தால் பணக்

காரர்களால் என்ன பிரயோஜன மிருக்கிறது. அமெரிக்காவிலே தொழிலில்லாதவர்கள் 130 லட்சம் பேர்களிருக்கின்றனர். அவர்களுக்கு வருமானம் கிடையாது. அவர்களால் யாதொன்றும் வாங்க முடியவில்லை. அரசாங்கப் பண உதவியாலேயே அவர்கள் சாப்பிட்டு கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சாமான்கள் வாங்கக் கூடிய நிலைமையை அடையும் பொருட்டு பிரசிடென்ட் ரூஸ்வெல்ட் வெகு தூரம் முயற்சிக்கின்றார். அபேதவாதக் கொள்கையின்படி ஆலோசிப்பதாயிருந்தால் வாங்கும் சக்தியை (வருமானத்தை) உயர்த்துதல் வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் வாங்கக் கூடிய சக்தியுடைவர்களாகலாம். இப்பொழுது மேல் நாட்டுப் பணக்காரர்கள் கூட சம்பள விகிதங்களை உயர்த்துவதற்கான ஏற்பாட்டைச் செய்துகொண்டிருக்கின்றனர். பலரும் வாங்கி உபயோகிக்கக் கூடிய சக்தியைப் பெருக்குவதற்காக பர்மாவிலுள்ள பணக்காரர்கள் என்ன செய்யப் போகிறீர்க ளென்பது பிரச்னையாகும்.

## வாங்கக் கூடிய சக்தி

நீங்கள் இப்பொழுது செய்துகொண்டிருப்பதைப் போன்று சதாகாலமும் தொழிலைச் செய்து கொண்டு போவதாயிருந்தால் அது முடியாத காரியமாகும். பிரிட்டிஷார் தங்களுடைய உற்பத்தி சாமான்களை விற்க முடியுமென்ற நினைப்புடன் வாங்கக்கூடிய அளவுக்கு சக்தியை யதிகரிக்கச் சம்மதித்து விட்டனர். குறைந்த வருமானத்தால் வாங்க முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது. இதிலிருந்தே தொழிலாளிகளுடையவும் விவசாயிகளுடையவும் பிரச்னைகள் ஏற்படலாயின. நில சம்பந்தமாய் பிரான்சு நாட்டிலே புரட்சி உண்டாயிற்று. அது விவ

சாயிகளுடைய பிரச்னையினாலேயே ஏற்பட்டது. பணக்காரர்கள் தங்கள் பண வலிமையைக் கொண்டு சாமான்களைப் பெருவாரியாய்ச் செய்ய முடிகிறது. என்றாலும் பெரும்பாலான ஜனங்கள் வாங்க முடியாத நிலைமையிலிருந்தால் பிரயோஜனம் உண்டாக மாட்டாது. இதுவே இப்போதைய நிலைமையாகும்.

## மனப்பான்மையிலும் கொள்கையிலும் மாறுதல் வேண்டும்

பர்மாவிலும் இந்தியாவிலுமுள்ள பணக்கார இந்தியரிடை தேசீய உணர்ச்சி வலுத்து வருகிறது. அது நன்மையே. தங்கள் சொந்த வகுப்பினரின் நன்மைக்காக மட்டும் வேலை செய்து கொண்டிருப்பதால் உயர்ந்த லட்சியம் ஏற்படுவது கடினமாயிருக்கும். எனவே மனப்பான்மையையும் கொள்கையையும் மாற்றிக் கொள்ள வேண்டும். எதற்கும் அஞ்ச வேண்டிய அவசியமே கிடையாது. சிறிதளவு பாதிக்கப்படுவதைப் பொருட்படுத்தாதேயுங்கள்.

## காலத்தை யனுசரியுங்கள்

காலச் சக்கரப் போக்கை எவரும் எதிர்த்து நிற்க முடியாது. காலச் சக்கரத்தின் வேகத்தை எவராலும் தணிக்கை செய்து விட முடியாது. காலத்தை யனுசரித்து வாழவும் தொழில் செய்யவும் முயற்சியுங்கள். உங்களிடமுள்ள லட்சக் கணக்கான ரூபாய்கள் இழக்கப்படினும் கூட, நீங்கள் காலத்தை யனுசரித்துத் தொழில்முறைகள் செய்தால் அத்தகைய சக்தியை-வலிமையை யாராலும் அபகரித்துக் கொள்ள முடியாது. ஆகையால் காலத்தை யனுசரித்து நடந்து கொள்ள வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக்

கொள்கிறேன். செட்டியார்களாகிய உங்களிடத்தில் திரண்ட செல்வமிருப்பதால் கடன் கொடுக்க முடிகிறது. கையொப்ப மிடுவதைக் கொண்டு கடன் வாங்கி விடவும் முடிகிறது. இருப்பினும் கூட சொத்துக் கள் என்பது யாவை. சிலர் தங்கம் வைரம் நகை கட்டு களை மட்டும் சொத்துக்களாக மதிக்கின்றனர். இந்தி யாவில் தங்கத்தையும் பணங்களையும் மண்ணுக்குள் புதைத்து வைக்கும் வழக்கம் இதுபரியந்தம் இருந்து வருகிறது. அவர்கள் அவற்றையே சொத்துக்களாக எண்ணுகின்றனர். அமெரிக்கா, இந்தியாவைப் போலல்ல. அந்நாட்டினுடைய சொத்துக்கள், பங்குக ளாகவும் பெறுமதியுள்ள பத்திரங்களாகவும் இருக் கின்றன.

## கடன் பட்டவரும் கொடுத்தவரும்

ஆகையினாலே செட்டியார்கள் போட்டிருக்கிற மூலதனத்தை மட்டும் திரவியமாகக் கருதாமல் காலத் தையனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். ஜினிவா வுக்குப் போயிருந்த சமயத்தில் ஜர்மானிய புரோபஸர் ஒருவருடைய சொற்பெருக்கைக் கேட்கச் சென்றிருந்தேன். கடன் பட்டவர்களென்றும் கடன் கொடுத்தவர்களென்றும் இரு சாரார் இருப்பதாயும் அவர்களுள் கடன் வாங்கினவர் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பதைப் பற்றிய விசாரம் இல்லாதிருப் பதாயும் கடன் கொடுத்தவர் தான் அதிகமாய் கவலைப் படுவதாயும் அந்த புரோபஸர் குறிப்பிட்டார் (சிரிப்பு)

ஆதலால் காலத்திற்கேற்ற எண்ணங்களைத் தங்க ளுக்குள் வளர்த்துக் கொண்டு வேலை செய்வதாயிருந் தால் உலகத்தையே மோட்ச நாடாகச்செய்துவிடலாம். நாம், நமக்குள்ளேயே சச்சரவுகள் செய்து கொள்கி

ளோம். நாம் அவ்விதம் நமக்குள்ளே போராடாம லிருப்போமாகில் ஏழ்மை இந்தியாவைத் தகுதியான அந்தஸ்திற்குக் கொண்டு வந்துவிட முடியும். ஆனால் சுயநலம் ஒன்றையே பிரதானமாகக் கொண்டு நிதி திரட்டுகிறவர்களுடன் நம்மால் ஒன்றும் செய்ய முடி யாது. எனவே சுயநலத்தை வேருடன் பிடுங்கி எறிந் தாக வேண்டும்.

# மோல்மீனில் ஜவஹர்

## சிறந்த வரவேற்பு

(15-5-37)ந் தேதி காலை 8 மணி சுமாருக்கு, ஜவஹர், தமது குமாரி இந்திரா தேவி, ஊச்சோமி யீன்ட், ரங்கூன் சர்வ கலாசாலை மாணவர்கள் சங்கத் தலைவர் மிஸ்டர் ரஷித் ஆகியோருடன் கரவெய் எனும் ஸீப்ளேனில் மோல்மீனை யடைந்தார். அப்பொழுது நகர சபைத் தலைவர் ராம் நிவாஸ் பாக்லா, ஊட்டோ லொவ்ன், ஊபாச்சி, ஊப்போலொவ்ன், மிஸ்டர் சூஸி ஸெங், சீனர் சங்கத் தலைவர் முதலிய உள்ளூர் பிரமுகர் களும் "ஸன்", "நியூ லைட் ஆப் பர்மா" பத்திரிகைப் பிரதிநிதிகளும் 'அவ்ன்ஸச்சா' எனும் சிறிய லாஞ்சில் ஸால்வின் நதி மத்தியிலே காத்திருந்து ஜவஹரை வர வேற்றனர். பர்மிய சங்கீத கோஷ்டியாரும் இந்தியத் தொண்டர்களும் வரவேற்பில் கலந்து கொண்டனர். துறைமுகத்தில் சுமார் இருபதினாயிரம் பேர்கள் வரை கூடியிருந்தனர். ஜவஹருக்குச் சிறந்த வரவேற்பு நடந்தது. ஜவஹர் ஒரு நாள் முழுதும் தங்கியிருந் தார். நகர சபையால் அளிக்கப்பட்ட தேநீர் விருந்துப சாரத்தில் கலந்து கொண்டார். டோபமா சங்கத்திற் குச் சென்றார். பர்மியப் பிரமுகர் ஊட்டோலொவ் னால் அளிக்கப்பட்ட (பர்மியரால் தயார் செய்த) இராப் போஜன விருந்துபசரிப்பில் கலந்து கொண்டார்.

மறுநாட் காலையில் ரங்கூனுக்கு ஸீப்ளேனில் திரும் பினார்.

# ரங்கூனில் ஜவஹர்

(16-5-37)-ந் தேதி காலையில் சேவா சமாஜத்தாரிடம் ஜவஹர் பண முடிப்பைப் பெற்றுக் கொண்டார்.

முற்பகலில் இன்சீனுக்கு ஜவஹர் சென்றார். நகர சபையாரும் உள்ளூர் வாசிகளும் தனித் தனியாக பத்திரங்கள் வாசித்தளித்தனர்.

பிற்பகலில் ஜவஹர் பர்மா இந்திய வர்த்தக சங்கத்தாரைச் சந்தித்தார்.

பின்னர், காமாட்சி அம்மன் கோவிலுக்கும் கைத்தொழிற் பாடசாலைக்கும் "நியூ லைட் ஆப் பர்மா" காரியாலயத்துக்கும் விஜயம் செய்தார்.

அகில பர்மா ஹிந்தி பிரசார சபையின் மகாநாடு.

இம் மகாநாடு பிற்பகலில் ஜுபிலி ஹாலில் நடைபெற்றது. இதற்கு பெனுவேகோவன் ஸயாடோ (பிக்ஷு) ஊஸண்டோ பாதா தலைமை வகித்தார். அவர் செய்த பிரசங்கத்தில், இந்தியாவும் பர்மாவும் எப்பொழுதும் இணை பிரியாதிருந்து வருகின்றன வென்றும் மத சம்பந்தமாயும் நாகரீகம் சம்பந்தமாயும் பார்க்கும் போது இரண்டு நாடுகளின் தொடர்பும் இலகுவில் பிரிக்கப்பட முடியாதென்றும் பௌத்த மத சாஸ்திரங்கள் அனைத்தும் பாலி பாஷையில் இருந்து வருகின்றன வென்றும் சமஸ்கிருதத்தை யொத்தது பாலி பாஷை யென்றும் பௌத்த கயா க்ஷேத்திரம் இந்

தியாவிலிருப்பதால் யாத்திரை செல்லும் பர்மியர்கள் அந்த நாட்டில் இந்தி பாஷையைப் பேசுகிறார்களென்றும் பர்மாவில் பர்மிய பாஷையும் ஆங்கிலமும் கற்பிக்கப்படுவதுடன் இந்தியும் இப்பொழுது கற்றுக்கொடுக்கப்படுகிற தென்றும் பர்மா மாகாண இந்து மகாசபையின் பிரயாசையால் சம்ஸ்கிருதம், நாகரி முதலிய பாஷைகள் ரங்கூன், லான்மடோ பகுதியிலுள்ள பொங்கி மடங்களிலும் பஹான் பள்ளிக் கூடத்திலும் எளிதில் கற்றுக்கொள்ளலாமென்றும் பர்மிய பௌத்த சந்நியாசிகள் இந்தி பயிலுவது அவசியமென்றும் ஹிந்தி பாடசாலைகளில் பர்மிய பாஷையைச் சொல்லிக் கொடுப்பது நன்மை பயக்குமென்றும் குறிப்பிட்டார்.

3-45 மணிக்கு ஜவஹர் விஜயம் செய்தார். "இந்தியா பர்மா பிரிவினையைப் பற்றிப் பிரஸ்தாபித்தார். அரசியலில் பர்மா பிரிக்கப்பட்டிருப்பினுங் கூட, இரு நாடுகளுக்கும் கலைத் தொடர்பு, மத சம்பந்தம் முதலியவைகளிருப்பதைக் குறிப்பிட்டார். இந்துக்களுடையவும் பர்மியர்களுடையவும் பாஷைகள் ஒன்றுக்கொன்று மிக நெருக்கமுடையவைகளாகும். இந்துக்கள் பர்மிய பாஷையை இழுக்கறக் கற்க வேண்டும். அதைப்போல் பர்மியரும் ஹிந்தியை நன்றாய்ப்படிக்க வேண்டும். வருடாந்திர மகாநாட்டில் இவ்விதம் கலந்து கொள்ள எனக்குத் சந்தர்ப்பம் வாய்த்ததற்காக நான் அளவிலா மகிழ்ச்சி கொள்கிறேன்" எனச் சுமார் பதினைந்து நிமிஷம் வரை ஹிந்தியில் சிறியதோர் பிரசங்கம் செய்தார்.

ரங்கூன் வைர வியாபாரிகள் சங்கத்தின் தேநீர் விருந்து:—அரீப் ஹாலில் மேற்படி சங்கத்தார் ஜவஹருக்கு தேநீர் விருந்துபசாரம் அளித்தனர். சங்கத் தலைவர் ஜவஹருக்கு வரவேற்புப் பத்திரத்தை வாசித்தளித்தார்.

இந்திய ஸ்திரீகளின் உபசாரம்:- மாலை 5 மணிக்கு, டபரின் தோட்டத்தில் இந்திய ஸ்திரீகளின் பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. பல் வேறு சமூகத்தைச் சேர்ந்த ஸ்திரீகள் ஆயிரக் கணக்காய்க் கூடியிருந்தனர். சில பர்தா ஸ்திரீகளும் வந்திருந்தனர். ஆண்கள் அனுமதிக்கப்பட வில்லை. ஜவஹர் தமது குமாரியுடன் விஜயம் செய்தார். திருமதி, மனோரமா தேவியார் அவ் விருவருக்கும் மாலைகளணிவித்து வரவேற்றார். திருமதி. வீர்மதி இந்தியிலும் சௌபாக்கியவதி ஐராவதி நாயுடு பி.ஏ., ஆங்கிலத்திலும் பத்திரங்களை வாசித்தளித்தனர். அவற்றிற்கு இந்தியிலும் பின்னர் ஆங்கிலத்திலும் சிறந்த முறையில் ஜவஹர் பதிலளித்தார். 1500 ரூபாய்கள் அடங்கிய மூன்று பண முடிப்புகளை உள்ளூர் ஸ்திரீகள் சார்பில் ஜவஹரிடம் கொடுத்தார்கள். சாத்தியப்பட்டால் பணம் கொடுக்கும்படி மனோரமா தேவியார் சகோதர ஸ்திரீகளை வேண்டினார். அதே இடத்தில் ரொக்கமும் அணிகளுமாக சுமார் ஆயிரம் ரூபாய்கள் வரை வசூலாயிற்று.

வாழ்க்கையின் ஒவ்வொரு லட்சியத்திற்கும் பெண்களின் கூட்டுறவு அவசியமென்பதையும் வரப்போகும் போராட்டத்தில் இந்தியத் தாய்மார்களின் கடமை என்னவென்பதையும் ஜவஹர் விஸ்தரித்துப் பேசினார்.

பர்மிய சினிமா மண்டபத்தில் ஜவஹர்:—இரவு 7 மணிக்கு, ஜவஹர், இந்திரா தேவி சகிதமாய் பர்மிய சினிமா மண்டபத்திற்குச் சென்றார். பர்மீஸ் பேவரிட் ஏஒன் கம்பெனியாரால் எடுக்கப்பட்ட "சின்-த்தெவே" என்ற பர்மிய படக்காட்சியைப் பார்வை யிட்டார். ஜவஹரின் வருகையால் மங்கமாரி வீதியில் போக்குவரத்தில் சிறிது நேரம் தடையேற்பட்டது. போலீ

ஸாரும் வாலண்டியர்களுமாகச் சேர்ந்து கொண்டு போக்கு வரவை ஒழுங்கு படுத்தினர்கள். மண்டபத்தின் உட்பக்கம் யாவும் தேசீயக் கொடிகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தன. ஜவஹர் வந்திறங்கியபோது ஏஜோ நெருப்பணைக்கும் படையைச் சேர்ந்த கோஷ்டியார் தேசிய உணர்ச்சியை வளர்க்கக் கூடிய விதத்தில் பாண்டு வாத்தியம் முழக்கினர். சினிமாப் படச் சொந்தக்காரர்கள் ஜவஹருக்கும் அவருடைய செல்விக்கும் பூ மாலைகள் அணிவித்து உபசரித்தனர். அப்பொழுது மண்டபம் எங்கும் ஒரே கோஷமாயிருந்தது.

# பேபியன் கட்சியாரும் ஜவஹரும்

"பர்மா தேசம் மிகவும் செழிப்பு வாய்ந்தது. பர்மிய மக்கள் நேசிக்கத் தக்கவர்கள். பர்மாவின் அரசியல் மிகச் சிக்கலானது":-ஜவஹர்.

இரவு 9-30 மணிக்கு அகில பர்மா பேபியன் கட்சித் தலைவரும் "டீட்டொவ்" எனும் பர்மிய வாரப் பத்திரிகையின் ஆசிரியருமாகிய ஊபாச்சோ பி. ஏ., என்பார், தம்முடைய கட்சியின் காரியதரிசியாகிய ஊபாக்கையினையும் அழைத்துக் கொண்டு ஜவஹரின் ஜாகைக்குச் சென்றிருந்தார். அப்பொழுது கட்சியின் காரியக் கமிட்டி அங்கத்தினர்களான ஊபாக்கின், ஊத்தாடீன், ஊ அவ்ன்மியின், ஊக்கின் மாங் முதலானோர் ஜவஹர் சம்பாஷணையின் போது கூட இருந்தனர். மேலும் இதர அரசியல் கட்சியைச் சேர்ந்த சிலரும் அங்கு காணப்பட்டனர்.

## சர்வதேச சங்கத்தில் இந்தியா

கேள்வி:—சர்வதேச சங்கத்தில் இந்தியா இடம் பெற்றதால் அது எத்தகைய நன்மைகளை யடைந்திருக்கிறது ?

பதில்:—சர்வதேச சங்கத்தில் இந்தியா இடம் பெற்றதென்றாலும் அது எவ்வித நன்மைகளையும் பெறவில்லை. வருடந்தோறும் அச் சங்கத்திற்குப் பெருவாரியான தொகையைச் சந்தாவாகச் செலுத்திவருவதால் நஷ்டம்தான் உண்டாகிறது. பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் இஷ்டம்போல் பிரதிநிதிகள் நியமனம் செய்யப்பட்டு அனுப்பப்படுகிறார்கள். இதனால் இந்தியாவுக்கு யாதொரு பிர

யோஜனமும் உண்டாகிறதில்லை. இத்தகைய பிரதிநிதிகள் இருப்பதால் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு ஒரு வோட்டு அதிகமாகக் கிடைத்து வருகிறது. இப்பொழுது சர்வ தேச சங்கத்தை விட்டு, ஜர்மனி, இத்தாலி, ஜப்பான் முதலிய வல்லரசுகள் வெளியே வந்து விட்டன. இதனால் சங்கத்தின் செல்வாக்குக் குறைந்திருக்கிறது. இருந்தாலும் தற்பொழுது ரஷியா தேசம் சங்கத்தில் அங்கம் பெற்றுக் கொண்டிருக்கிறது. இதனால் சங்கத்தின் நிலைமையில் சிறிது மாறுதல் ஏற்பட்டிருப்பதாக எண்ணுவதற்கு இடமுண்டாகிறது. செல்வாக்குள்ள வல்லரசுகள் சங்கத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு வருகின்றன. இதனால் இத்தாலி-அபிஸீனியப் போராட்டத்தில் சங்கத்தால் உருவான நடவடிக்கை யெடுத்துக் கொள்ள முடியாது போயிற்று. பிற நாடுகளுக்குச் சங்கத்தின் மீதிருந்த நம்பிக்கையும் படிப்படியாய்க் குறைய ஆரம்பித்தது. யுத்தம் ஏற்பட்டால், அவ்விதம் யுத்தம் உண்டாவதற்கு யார் மீறி நடந்தது என்பதைக் கண்டறிந்து, அவ் விஷயத்தை உலகறியப் பிரகடனம் செய்விப்பதுதான் சர்வதேச சங்கத்தின் மூலாதாரமான நோக்கமும் கொள்கையுமாகும்.

## தவருகச் சேர்ந்து கொண்டது

சர்வதேச சங்கத்தில் இதர நாடுகளைப் போல் பர்மாவும் சேர்ந்து கொள்ள முடியாது. சுயேச்சை பெற்ற நாடுகள் மட்டும் தான் சங்கத்தில் இடம்பெறக் கூடியவைகளா யிருக்கமுடியும். சர்வதேச சங்கத்தில் இந்தியா எப்படியோ அஜாக்கிரதையாய் நுழைந்து கொண்டது தவறு என்பதை இந்தியா உணர்ந்து கொண்டது. சர்வதேச சங்கத்தைவிட்டு இந்தியா வெளியேற முடியாததால், அதைச் சங்கமாகப்

பாவித்து வருகிறது. சென்ற மகா யுத்தத்தின் கடைசி காலத்தில், நிலைமை மிகவும் மோசமா யிருந்தது. அச் சந்தர்ப்பத்தில் தான் இந்தியா சர்வ தேச சங்கத்தில் பிரவேசித்திருக்கிறது. இல்லாவிட்டால் சர்வதேச சங்கத்தில் இந்தியா இடம் பெற்றிருக்க முடியாது.

## அபேதவாதமும் தேசீயமும்

**கேள்வி;**— தங்களுடைய வகுப்பாரின் முன்னேற்றத்துக்காகவும் அபிவிருத்திக்காகவும் சேவை செய்வதென்ற லட்சியத்துடன் இருந்து வருகிற தேசீயக் கட்சியாருடன் அபேதவாதக் கொள்கையுடையோர் சேர்ந்துகொள்வது சாத்தியப்படுமோ?

பதில்:—எந்தக் காலத்திலும் அவ்விரு கட்சியார் ஒன்று சேர முடியாது. தண்ணீருக்கும் எண்ணெய்க்கும் எவ்வளவு வித்தியாசமுண்டோ அதைப்போலவே அவ்விரு கட்சிகளின் கொள்கைக்கும் வித்தியாசங்களிருக்கின்றன. "National League" நேஷனல் லீக் எனச் சொல்லப்படும் கட்சியின் கொள்கையிலே இரு பிரிவுகளுண்டு. இத்தாலி, ஜர்மனி, ஜப்பான் முதலிய நாடுகளில் தங்களுடைய கட்சிக் கொள்கைகளைப் பரப்புவதற்கு இப்போது கையாண்டு வருகிற முறைகள், தேசீயக் கட்சியின் ஒரு பிரிவாகும். இது தங்களுடைய கொள்கையைப் பொது ஜனங்கள் விரும்பக்கூடிய விதத்தில் நாடுகளைப் பெருக்கிக் கொள்ளச் செய்கிறது. எனவே, இக்கொள்கையானது அபேதவாதத்துக்கு நேர் மாற்றமா யிருக்கிறது. ஐக்கியப்படுவதற்கில்லை. நாட்டுப் பற்றுதலின்றி அடிமை பந்தத்திலிருந்து மீள முடியாது என்ற கொள்கையுடன் அடிமையா யிருந்துவருகிற நாடு

களால் கையாளப்பட்டு தேசீய சேவை செய்யப் படுவது தேசீயக் கட்சியின் கொள்கையிலே மற்ருெரு பிரிவாகும். மக்களிடை ஒற்றுமை நிலவ வேண்டு மென்பது இப் பிரிவினரின் கொள்கை. அபேதவாதக் கொள்கைக்கு ஊறு விளைக்காமல் சேவை செய்ய எண்ணுவதால் இந்த பிரிவினருடன் சேர்ந்துகொள்வது சாத்தியப்படும். முன்னே காங்கிரஸ் மகா சபையைப் பணக்காரர் ஆதரவுடையதென ரஷியா தேசம் குறை சொல்லிற்று. நாளடைவிலே அபேதவாதக் கொள்கையும் தேசீய கொள்கையும் இன்ன இடத்தில் ஒன்று சேரக் கூடுமென்பதை ரஷியாக்காரர்கள் ஒப்புக் கொண்டு காங்கிரஸ் மகா சபையை அங்கீகரித்தார்கள்.

## மத இடையூறு

கேள்வி:—அபேதவாதக் கொள்கையைப் பின்பற்றி நடப்பதில் மத சம்பந்தமான பிரச்னைகள் கிளம்பி இடையூரு யிருந்து தடையை யுண்டுபண்ணுகிற தல்லவா?

பதில்:—வாஸ்தவமே. இந்தியாவில் இதைப் போன்ற சிக்கல்கள் குறுக்கிட்டு வருகின்றன. கத்தோலிக் கிறிஸ்துவ மதக் கொள்கைக்கு அபேதவாதத் துவம் விரோதமானது. போப் அரசரின் ஒருவருடைய வார்த்தையைத்தான் உண்மையென கத்தோலிக் கிறிஸ்துவ மதக்கொள்கையைச் சேர்ந்தவர்கள் நம்பு கிருர்கள். தம்முடைய செல்வாக்கு எங்கே குறைந்து விடுகிறதோ என்ற பீதி போப் அரசருக்கு உண்டு. அதனுல் அவர் எதிர்த்துக்கொண்டு வருகிருர். இக் கொள்கையைப் பரப்புவதற்கு பௌத்த மதக் கோட்பாடு மிகவும் பொருத்தமா யிருப்பதை ரஷியாவில் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இரண்டு வருடங்களுக்கு முன்னே

அந்த நாட்டில் நடைபெற்ற கூட்டமொன்றில் பகிரங்கமாய்ச் சொன்னதாகத் தெரிகிறது. பௌத்தமத பிக்ஷுக்களையும் சாஸ்திர அறிஞர்களையும் ரஷியாவில் பிரசங்கம் செய்வதற்காக அழைப்பு அனுப்பி யிருந்தார்கள். அதற்குப் பலரைச் சிபார்சு செய்து அறிமுகக் கடிதங்கள் எழுதிக் கொடுத்திருக்கிறேன்.

## பிக்ஷுக்களும் அரசியலும்

கேள்வி:—பௌத்தமத பிக்ஷுக்கள் அரசியலில் கலந்து கொண்டு வருவதைப் பற்றித் தாங்கள் எத்தகைய அபிப்பிராயம் கொண்டிருக்கிறீர்கள்?

பதில்:- பர்மாவிலே சந்நியாஸிகளுக்கு அதிக செல்வாக்கு இருந்து வருகிற தென்பதை அறிந்து கொண்டேன். அரசியலில் அவர்கள் கலந்து கொள்வது ஒரு வழியில் நல்லதுதான். உண்மையைப் பின்பற்றி வேலை செய்கிற கட்சியின் சார்பிலிருந்து அவர்கள் ஆதரவு அளிப்பதா யிருந்தால் அதனால் நன்மையுண்டு. பர்மாவின் இப்போதைய கட்சிப் பிரதி கட்சிகளினாலும் அவற்றின் கொள்கைகளினாலும் கருத்து வேற்றுமைகள் அதிகரித்து அதனால் எங்கு விடுதலைக்குத் தடை யேற்பட்டு விடுகிறதோ என்றுதான் கவலை கொள்ள வேண்டியதா யிருக்கிறது. சரியான வழியைப் பிக்ஷுக்களுக்குக் காண்பிக்கும் பட்சத்தில் அரசியலில் அவர்கள் சம்பந்தப்படுவதால் அதிக நன்மைகள் உண்டாவதற் கிடமுண்டு. பர்மாவின் அரசியல் நிலைமையை நான் நன்றாய் அறிந்து கொள்ளாதிருப்பதால் தெளிவாய்ச் சொல்ல முடியாதவனா யிருக்கிறேன்.

கேள்வி:—பர்மாவில் பர்மியரைப் பற்றியும் பர்மாவின் அரசியலைப்பற்றியும் நீங்கள் எவ்வித அபிப்பிராயப்படுகிறீர்கள்?

பதில்:-(சிரித்துக் கொண்டே) பர்மா மிகச் செழிப்பானது. பர்மியர்கள் மிகவும் நேசிக்கத்தக்கவர்கள். பர்மாவின் அரசியல் மிகவும் சிக்கலானது. (எல்லோரும் கொல்லெனச் சிரித்தார்கள்) சம்பாஷணையில் கலந்து கொண்ட யாவருக்கும் ஜவஹர் தமது வந்தனத்தைத் தெரிவித்துக் கொண்டார்.



(16—5—37) ரங்கூன் "நியூ லைட் ஆப் பர்மா" காரியாலயத்தில் பர்மிய ஆசிரியர்களும் ஜவஹரும் சம்பாஷித்தல்.



(15—5—37) மோல்மீன் துறைமுகத்தில் பர்மிய மாதர்களால் வரவேற்கப்படுதல்.

# பர்மிய ஆசிரியர்களும்

# ஜவஹரும்

---

வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களின் எதிர்காலப் பிரச்னை-காங்கிரஸ் தலைவர் பார்மியர்மீது கோண்டுள்ள அபிப்பிராயம்-பர்மாவின் கடன்-டாக்டர் பாமோவும் அரசியலும்.

காங்கிரஸ் தலைவருடன் பர்மியப் பத்திராதிபர்கள் கலந்து பேசியபோது, பல சிக்கலான கேள்விகள் எழுந்தன. அவற்றுக்குப் பண்டித ஜவஹர் தக்க பதிலளித்தார்.

கேள்வி:—காங்கிரஸ் மகாசபைக் கேட்டுக் கொண்டிருக்கும் உறுதி மொழியைப் பார்லிமெண்டு சபை கொடுத்து விடுமென்று நீங்கள் நம்புகிறீர்களா? நம்பிக்கை கொள்வதற்கான காரணங்கள் உண்டா?

பதில்:--என்னுடைய அபிப்பிராயத்தை மட்டும் சொல்வதாயிருந்தால், பார்லிமெண்டு சபையானது உறுதி மொழிகளைக் கொடுக்கலாம் அல்லது கொடுக்காமலிருக்கலாம். இவ்விரண்டு பிரச்னைகளில் உறுதி மொழிகளை வழங்கக்கூடிய தரப்பில் எப்படி பாதி நிச்சயமோ அதைப்போலவே கொடுக்காமலிருக்கக்கூடிய தரப்பிலும் பாதி நிச்சயமாயிருக்கலாமென்றெண்ணுகிறேன். உறுதி மொழி தரும் விஷயத்தில் கஷ்டம் இருப்பதாகச்சொல்லப் பட்டாலும்கூட, அது ஆகக்கூடியதல்லவென்று மட்டும் நினைத்து விடாதேயுங்கள்.

பிரிட்டிஷ் பார்லிமெண்டில் அபாரமாய்ப் பேசப் பட்டது. அவர்கள் என்னதான் பேசட்டும். கால தேசப் போக்கையும் இருக்கப்பட்ட நிலைமைகளையும் அனுசரித்து பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நடந்துகொள் ளக் கூடியவர்கள். காங்கிரஸ் இப்பொழுது கேட்டுக் கொண்டிருக்கிற விஷயத்தில் கவர்ன்மெண்டார் விட்டுக் கொடுக்கமாட்டார்கள் என்பதாக நான் சொல்லிக் கொள்ள விரும்பவில்லை. ஒவ்வொரு நாட்டின் நிலைமை யையும் உள் நாட்டுக் கிளர்ச்சியையும் அனுசரித்து பிரிட்டிஷ் அரசாங்கத்தார் சமரஸம் செய்து கொள் பவர்களாயிருக்கின்றனர். அரசியலில் அவ்வித அபாயங் களைப்பார்க்காதிருந்தால் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத் தார் சமரஸம் செய்து வைக்காமல் வேண்டுமென்றே பிடிவாதம் செய்யக்கூடியவர்கள்தான்.

## காங்கிரஸ் என்ன செய்யப் போகிறது

கேள்வி:—பர்மாவும் இந்தியாவும் பிரிட்டிஷார் ஆதீ னத்திலிருப்பவை. இதனால் இவ்விரு நாடுகளின் நிலைமை யும் அந்தஸ்தும் ஒத்திருக்கின்றன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தி யக் கொள்கையையும் முதலாளித்துவக் கொள்கையையும் தகர்ப்பதற்குக் காங்கிரஸ் மகாசபை எந்த முறையில் வேலை செய்ய உத்தேசித்திருக்கிறது.

பதில்:--முதலில் நீங்கள் விளக்கமாய் அறிந்து கொள்ள வேண்டிய விஷயம் ஒன்றிருக்கிறது. முத லாளித்துவத்துக்கு விரோதமானது காங்கிரஸ் மகா சபை யல்ல வென்பதுவே யாகும். ஏகாதிபத்தியக் கொள்கையை மட்டும் காங்கிரஸ் மகா சபை கண்டித் துக் கொண்டு வரும்.

ஏகாதிபத்தியக் கொள்கை சம்பந்தமாய் பிரிட்டி ஷார் செய்யும் ஏற்பாடுகளைப் பெரும்பாலான இந்திய

மக்களின் உதவியைக் கொண்டு தகர்க்கவும் ஆட்சேபிக்கவும் காங்கிரஸ் மகா சபையானது முயற்சித்துக் கொண்டிருக்கிறது. ஏகாதிபத்தியப் பேராசை வலுக்காம லிருக்கும் பொருட்டு பொருளாதாரம், செல்வ நிலை இவற்றைப் பாதிக்கச் செய்வோம். ஒருபுறத்தில் அபேதவாதக் கொள்கையைக் கிளப்பிவிட ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

காங்கிரஸ் மகா சபையானது இந்திய மகா ஜனங்களின் தேசிய மகாசபையா யிருந்து வருவதால் அபேதவாதக் கொள்கையை இன்றே ஒப்புக்கொண்டுவிடப் போவதில்லை. அபேதவாதக் கொள்கையை இன்றே பெற்று விடவும் முடியாது. இந்தியா முதலில் விடுதலை பெற்ற நாடாகவேண்டும். சுதந்தரம் பெற்ற காலத்தில்தான் அபேதவாதக் கொள்கையின் திட்டப்படி வேலை செய்ய முடியும். காங்கிரஸில் பல திறப்பட்ட கொள்கை யுடையவர்க ளிருக்கின்றனர். அபேதவாதம், பொது உடமை, ஹோம் ரூல் முதலிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் காங்கிரஸில் சேர்ந்திருக்கின்றனர். ஒருவர்க்கொருவர் அபிப்பிராய பேதத்தால் பிளவுபட்டு பிரிந்து போவதைக் காங்கிரஸ் மகா சபை விரும்பவில்லை. ஆனால் சில பணக்காரர்களின் நடத்தையைப் பற்றி குறை சொல்ல காங்கிரஸ் மகா சபை விரும்பினல் அது சொல்லிக்கொள்ள முடியும்.

## பாதுகாப்பது எப்படி

கேள்வி:—இந்தியர்கள் எந்த நாட்டில் குடியேறியிருந்தாலும் சரியே அவர்களுடைய நலன்களுக்கும் உரிமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டியதேற்படும் என்பதாக தாங்கள் செய்துள்ள பிரசங்கங்களில் குறிப்பிட்டுள்ளீர்கள். அதன் கருத்தை விளக்கிச் சொல்லுங்கள்.

பதில்:--இந்தியர்களுக்குப் பாதுகாப்பளிப்பது இந்தியாவின் முதற்கடமையாகும். இருப்பினுங்கூட அவர்களது நியாயமற்ற நலன்களும் உரிமைகளும் பாதுகாக்கப்படும் என்று நான் சொல்லவில்லை. எத்தகைய நலன்கள்-உரிமைகள் நியாயமானவை, எத்தகைய நலன்கள்-உரிமைகள் அநியாயமானவை என்று நீங்கள் கேட்கலாம். உதாரணமாகக் கூறும் பட்சத்தில், சீனாவிலே இரண்டொரு பிரிட்டிஷ் மிஷினரி (பாதிரிமார்) களை அந்நாட்டினர் கொலை செய்து விட்டார்களென வைத்துக்கொள்வோம். இக்காரணத்தை முன்னிட்டுப்பிரிட்டிஷார்ஹாங்காங் தீவுபோன்ற இடங்களை முற்றுகை யிட்டுக்கொண்டால் அது நியாயமான பாதுகாப்பாகு மெனச் சொல்வதற்கில்லை. பிரிட்டிஷ் பாதிரிமார்கள் கொலை செய்யப்பட்டதற்கும் நாட்டை முற்றுகை யிடுவதற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. தென் ஆப்பிரிக்காவிலே கீழ்திசைப் பிரதேசங்களில் ஐரோப்பியர் (பெரும்பாலோர் ஆங்கிலேயர்) களும் இந்தியர்களும் சுதேசிகளும் வசிக்கின்றனர். ஆங்கிலேயர்கள் சரியான இடங்களனைத்தையும் வசப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இந்தியர்கள் வர்த்தகத்தைத் தங்கள் கையில் வைத்துக் கொண்டிருக்கின்றர். சிறிது சிறிதாக இந்தியர்களை அந்த இடங்களிலிருந்து ஆங்கிலேயர்கள் பிரஷ்டம் செய்து வருகின்றனர். சுதேசிகளாகிய ஆப்பிரிக்கருடைய நலன்களைப் பாதிக்கக் கூடிய விதத்தில் இந்தியர்கள் தங்களுக்காக விசேஷப் பாதுகாப்புகள் எதையும் கேட்டுக் கொண்டிருக்கவில்லை. அவர்களைப் போன்று பர்மா இந்தியர்களும் அநீதமான உரிமைகளுக்காகப் பர்மியரிடத்தில் போராடிக் கேட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள். இருந்தாலும் கூட உரிமைகளைப் பற்றிய விஷயத்தில் நியாயம் அநியாயம் என்பதை முடிவு கட்டுவது யாருடைய பொறுப்பு

எனக் கேட்பதற் கிடமுண்டாகிறது. பெரும்பாலான பர்மியர்கள்தான் அவ்விஷயத்தில் முடிவு கட்ட வேண்டியவர்களா யிருக்கின்றனர்.

கேள்வி:—பர்மிய மக்களின் நலன்களையும் உரிமைகளையும் பர்மாவில் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டு அதுபோல் பாதுகாப்பளிக்கும் பட்சத்தில், அதைப் பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறோம்.

பதில்:—பர்மாவில் பர்மியர்களுடைய நலன்களும் உரிமைகளுந்தான் முதலாவது கவனிக்க வேண்டிய முக்கியத்வம் வாய்ந்தவை. பிறருடைய நலன்களுக்கும் உரிமைகளுக்கும் முன்னே தங்களுடைய உரிமைகள் இன்னின்ன வென்பதைப் பர்மியர்கள்தான் வெளியிட்டுச் சொல்ல வேண்டும். இந்தியாவினுடைய நலனுக்காக வென்ற வார்த்தையைத் தங்களிஷ்டம் போல் பிரிட்டிஷார் கையாண்டு வந்திருக்கின்றனர். இந்தியாவின் நலன் என்ற வார்த்தைக்கு வியாக்கியானம் அதாவது விரிவான அர்த்தம் செய்யப்படாததால் இந்தியா பாதிக்கப்பட்டு வருகிறது. வெள்ளைக்கார உத்தியோகஸ்தர்களை இந்தியாவினுடைய நன்மைக்காக வெனச் சொல்லி இப்பொழுது வைத்திருக்கின்றனர். பிரிட்டிஷ் சிப்பாய்களை வைத்திருக்க வேண்டுமெனச் சொல்வதாலும் பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத்தாருடைய தொழில்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டுமெனச் சொல்வதாலும் இந்தியாவிற்கு நன்மைகள் உண்டாகி விட முடியுமா? ஆதலால் பர்மாவில் பர்மியருடைய நலன்கள் எனச் சொல்லப்படும் வார்த்தைக்கும் வியாக்கியானம் செய்து கொண்டு தெளிவு படுத்திக் கூறுவது மிகவும் அவசியமாகும். என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்வதா யிருந்தால்

பிரிட்டிஷார் இந்தியாவில் இந்தியருடைய தொழில்களை ஒழித்துவிட எண்ணிக் கொண்டிருக்கிறார்களென்பதாகும். இந்தியாவில் நிறைந்த தனம் படைத்தவர்கள் அதிகமா யிருப்பதால் அவர்களுடைய தொழில்கள் நசுக்கப்படாதபடி வேரூன்றியிருக்கின்றன. பர்மாவின் முக்கியமான தொழில்கள் யாவும் பிரிட்டிஷ் முதலாளிகளின் ஆபத்தினின்றும் காப்பாற்றப்பட வேண்டும். பிரிட்டிஷாரின் செல்வத்தைக் கொண்டு பர்மாவின் தொழில்களை நடத்திச் செல்வதா யிருந்தால் அது மோசமாகவே இருக்கும்.

## பர்மிய-இந்தியக் கூலிகள்

கேள்வி:—பர்மாவில் குடியேறியுள்ள இந்தியக் கூலிகளால் பர்மியரை யடக்கிக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிற பிரிட்டிஷ் பணக்கார வர்க்கத்தாருக்கு உதவியும் ஆதரவும் அளிக்கப்பட்டு வருவதை யொக்க விருப்பதால் இதைப்பற்றித் தங்களின் அபிப்பிராயம் என்ன வென்பதை அறிய விரும்புகிறோம்.

பதில்:- பர்மாவில் இந்தியக் கூலிகள் குடியேறியிருப்பதால் பர்மிய வகுப்பார் பாதிக்கப்படுகின்றனர் என்பது உண்மையே. என்றாலும் கூட எந்த ஒரு நாடும் தன்னுடைய நாட்டிற்குப் பிற நாட்டுத் தொழிலாளர்களைத் தருவித்துக் கொள்ளத்தான் செய்கிறது. ஆனால், சொந்த நாட்டு மக்களைப் பாதுகாக்கச் செய்யும் நோக்கத்துடன் பிற நாட்டுத் தொழிலாளர்களைத் தருவிப்பதென்றால் அது நேர்மையாக மாட்டாது. இந்தியக் கூலிகளின் அந்தஸ்து பர்மியர்களுடைய அந்தஸ்தை விடக் குறைந்திருப்பதாலும் அவர்களுக்குக் குறைந்த கூலி விகிதம் கிடைப்பதாலும்தான் பர்மியத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். அதனால்

பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத்தார் நன்மையடைகின்றனர் என்பதும் உண்மையே.

## இந்திய பர்மிய கலகத்திற்குக் காரணம்

கேள்வி:—ரங்கூனில் இந்தியர்களுக்கும் பர்மியர்களுக்கும் ஏற்பட்ட கலகத்தைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அக் கலகத்திற்குக் காரணம், இந்திய பர்மியக் கூலிகளின் சச்சரவேயாகும். எனவே பிற்காலத்தைப்பற்றிய விஷயத்தில் தங்களின் அபிப்பிராயம் என்னவென்பதை அறிய விரும்புகிறோம்.

பதில்:- பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத்தார் தங்களுடைய சொந்த நன்மையைக் கருதி பர்மியத்தொழிலாளருக்கும் இந்தியத் தொழிலாளருக்கும் சண்டை மூட்டிவிடக் கூடும். தொழிலாளர்களுக்குள் ஒற்றுமையில்லாவிட்டால் அவர்களுக்கு அதிக நன்மைகள் எவ்விதம் ஏற்பட முடியும்? ஆதலால் ஒற்றுமைப்படுவது மிகவும் அவசியமாகும். சரியான வழியொன்றுதான். தொழிலாளர் சங்கத்தை ஸ்தாபித்து அவர்களுடைய சம்பள விகிதத்தை உயர்த்தச் செய்யும்படி சதாகாலமும் போராடிக் கொண்டிருக்க வேண்டும். அவ்விதம் செய்தால் எந்த முதலாளியும் குறைந்த சம்பளத்திற்கு வெளி நாட்டிலிருந்து தொழிலாளர்களைத் தருவித்துக் கொண்டிருக்க முடியாது.

## என்றைக்காவது ஒரு நாளில் குடியேற்றக் கட்டுப்பாடு செய்துதானாக வேண்டும்

கேள்வி:—பிற நாடுகளிலிருந்து பர்மாவில் குடியேறுபவர்கள் விஷயத்தில் பர்மியர்கள் நீண்ட காலமாய் நிம்மதியில்லாமலிருந்து வருகின்றனர். என்றைக்காவது ஒரு நாளில் பர்மாவில் குடியேறுவதை அப்படியே தடை செய்ய முடியா

விட்டாலும் கூட நிபந்தனைக ளேற்படுத்தி யாவது கட்டுப் படுத்தும் ஏற்பாட்டை நிச்சயமாய் செய்ய வேண்டிய தேற் படும். அவ்விதம் கட்டுப்படுத்தினால் அதைப்பற்றி நீங்களும் உங்களுடைய காங்கிரஸ் மகா சபையும் ஆட்சேபிப்பீர்களா அல்லது பேசாதிருந்து விடுவீர்களா. தெளிவாய் அறிய விரும்புகிறோம்.

[இக் கேள்வி கேட்கப்பட்டவுடன் பண்டிதரவர்கள் தனது தலையை மேலே உயர்த்திக் கொண்டு சிறிது நேரம் வரை ஆழ்ந்து சிந்தித்தார். பின்னர் தலையை அசைத்துக் கொண்டு கீழ்வரும் பதிலை யளித்தார்.]

பதில்:—என்னுடைய சொந்த அபிப்பிராயத்தை மட்டும் சொல்வதாயிருந்தால், பர்மாவில் குடியேறு வதைக் கட்டுப்படுத்துவது தான் நலமாயிருக்கும். இந் தியர்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் சிலோனிலும் கூட குடியேற்றத் தடை விதிப்பதைப்பற்றிப் பேசிக் கொண்டு வருகிறார்கள். தானொரு சிங்களவனாயிருக்கும் பட்சத்தில் இந்தியர் ஒருவர் கூட குடியேறுதல் கூடாதெனச் சொல்லத்தான் செய்வேனென்று ஒரு சமயத்தில் நானே கூறியிருக்கிறேன். பர்மாவில் வெளி நாட்டார் குடியேறுவது சம்பந்தமான பிரச்னையில் முடிவு காண்பது பர்மியர்களுடைய தனிப் பொறுப் பாகும். அவர்களுடைய நன்மைக்குத் தகுந்தாற்போல குடியேற்றத் தடை விதிப்பை அமைத்துக் கொள்வது தான் பொருத்தமாயிருக்கும். எனினும் குடியேற்றத் தடை விதிப்பை யேற்படுத்தும் போது ஒருவர்மீதொரு வர் கொண்டுள்ள நல்லெண்ணத்தைக் கெடுத்துவிடாத முறையில் பார்த்துக் கொள்வார்களென நம்புகிறேன்.

## பர்மாவின் 60 கோடி ரூபாய்க் கடன்

கேள்வி:— பர்மாவானது இந்தியாவுக்கு 60 கோடி ரூபாய்கள் கடன் தர வேண்டுமெனச் சொல்லப்பட்டிருக் கிறது. இதைப்பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன.

பதில்:—கடனைப்பற்றி எனக்கொன்றும் சரியாய் தெரியாது என்பதை ஒத்துக்கொள்கிறேன். இருந்தாலும் கூட பர்மாவின் கடன் தொகை 60 கோடி என்றால் மிகக் குறைவு தான். (மத்தியில் ஆசிரியர்கள் பண்டிதரைப் பார்த்து பர்மாவின் கடன் தொகை அதிகமென்றும் அநீதமென்றும் தெரிவித்துக் கொண்டனர்) அந்தக் கடனை இந்தியா பர்மா மீது சுமத்தப் படுவது சரியாக மாட்டாது. ஆட்சேபித்தல் நலம். இந்தியா மீதும் நேர்மையற்ற கடன்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன. இவ் விஷயங்களைப்பற்றி நான் சரியாய் கவனிக்கவில்லை.

## டாக்டர் பாமோவும் நேருவும்

பர்மாவின் தலைமை மந்திரி டாக்டர் பாமோவைப் பற்றிய பிரஸ்தாபம் வந்தது. அவர் மன்னரின் மகுடாபிஷேக வைபவத்திற்குச் சென்றதை யொட்டிய பேச்சுக்கள் கிளம்பின. அப்பொழுது டாக்டர் பாமோவைப் பற்றிய தமது அபிப்பிராயத்தை ஜவஹர் கீழ் வருமாறு கூறினார்.

“இந்தியக் காங்கிரஸ் தலைவர்கள் மகுடபிஷேக வைபவத்திற்கு அழைக்கப்பட்டனர். எனினும் எவரும் அழைப்பை யேற்றுக்கொள்ள வில்லை. மறுத்து விட்டார்கள். இந்தியாவில் காங்கிரஸ் தலைவர்களாயிருக்கப் பட்டவர்கள் சகல விஷயத்திலும் மிகவும் ஜாக்கிரதை யாயும் வழி தவறிவிடாதபடியும் இருப்பதில் சிரத்தை கொண்டு கூட்டுறவு வைத்துக் கொள்கின்றனர். எவ்வளவு தூரம் அரசாங்கத்தை விட்டு விலகி நிற்க சாத்தியப்படுமோ அவ்வளவு தூரத்திற்கு விலகிக் கொண்டு வருகின்றனர். அரசாங்கத்தாரிடத்தில் நெருக்கம்

வைத்துக் கொள்பவர்களிடத்தில் எவருமே நெருங்கிக் கூட்டுறவு வைத்துக் கொள்வதில்லை. டாக்டர் பாமோவைப் போன்றவர்களிடத்தில் இந்தியா சம்பந்தப்பட்ட வரையில் சொல்வதாயிருந்தால் யாருமே சம்பந்தம் வைத்துக்கொள்ள மாட்டார்கள். எல்லோரும் ஒதுக்கி வைத்து விடுவார்கள். அரசாங்கத் தொடர்பு வைத்துக் கொள்வதில் காங்கிரஸ் சபையானது மிகவும் எச்சரிக்கையோடு நடந்து கொள்கிறது. இன்று தான் காங்கிரஸின் மாஜி தலைவரான பாபு ராஜேந்திர பிரசாத்திடமிருந்து தந்திச் செய்தியொன்று கிடைத்தது. பல வருடங்களுக்கு முன்னே பீகார் மாகாணத்தில் கடுமையான பூகம்பம் ஏற்பட்டது. அதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தார்கள். அப்பொழுது காங்கிரசும் வைசிராயும் போட்டி போட்டுக் கொண்டு பூகம்பத்தில் அவதியுற்ற மக்களிடை நிவாரண வேலை செய்வதற்காக நிதிகள் திரட்டினர். நிவாரண வேலையில் மிகச் சமர்த்துடைய (Expert) ஒருவரை அதிக சம்பளத்தில் காங்கிரஸ் சபையானது ஸ்வீஜர்லாந்திலிருந்து தருவித்துக்கொண்டது. அந்த நிபுணர் தமது நாட்டிற்குத் திரும்பிச் செல்லவிருக்கிறார். அதை முன்னிட்டு அவருக்கு உபசாரம் நடத்த எண்ணியுள்ளனர். அவ்வுபசார வைபவத்திற்கு அரசாங்க உத்தியோகஸ்தர்களில் சிலரை அழைப்பதா வேண்டாமா என்பதைப்பற்றிய எனது அபிப்பிராயம் தந்திமூலம் கேட்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களிடத்தில் உறவு வைத்துக் கொள்ளும் விஷயத்தில் இவ்வளவுதூரம் ஜாக்கிரதையாயிருக்கின்றனர்.

# ஏனுன்ஜவ்னில் ஜவஹர்

ஜவஹரின் வருகையைப்பற்றி ஏனுன்ஜவ்ன் வரவேற்புக் கமிட்டியார் துண்டுப் பிரசுரங்கள் வழங்கியிருந்தனர். அதில் மே 17ந் தேதி மாலை 3 மணியெனக் குறிப்பிடப் பட்டிருந்தது. எனினும் அன்று பகல் 11 மணி சுமாருக்கெல்லாம் ஸீப்ளேனில் ஜவஹர் வந்திறங்கிவிட்டார். இதனுல் ஜவஹர் வருகை குறித்து ஏனுன்ஜவ்ன் வாசிகள் யாதும் அறியாதிருந்தனர். ஒத்துழையாமைக் கட்சித் தலைவர் ஊஸோத்தெய்ன், பி. எஸ்ஸி, அவர்களுடைய ஜாகைக்கு ஜவஹர் அழைத்துச் செல்லப்பட்டார். பின்னர் ஜவஹரின் வருகையைக் குறித்த செய்தி சிறிது நேரத்தில் ஊரெங்கும் பரவிற்று. பிற்பகல் 3-15 மணி சுமாருக்கு ஜவஹர் மண்ணெண்ணெய்ப் பிரதேசங்களைச் சுற்றிப் பார்வையிட்டார். பின்னர் இந்தியத் தொழிலாளிகள் சார்பில் அவருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப் பட்டது. பத்திரம் படிக்கப் படுவதை மிகக் கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார். அது கீழ் வருமாறு:—

## வரவேற்புப் பத்திரம்

பர்மா மண்ணெண்ணெய்ப் பிரதேசங்களுக்குத் சிறந்த தாயகமாய் விளங்குகிற ஏனுன்ஜவ்ன் வாசிகளும் இந்தியத் தொழிலாளர்களுமாகிய நாங்கள், காங்கிரஸ் தலைவராகிய தங்களை இவ்வித ஆனந்தத்துடன் வரவேற்றுபசரிக்க சந்தர்ப்பம் கிடைத்தமைக்காக எல்லையற்ற மகிழ்ச்சியடைகின்ருேம். அமெரிக்கா மண்ணெண்ணெய்ப் பிரதேசத் தொழிலாளிகளைப் போன்றும் இதா மேல் நாட்டுத்

தொழிலாளர்களைப் போன்றும் நாங்கள் உரிமைகள் பெற்றிருக்க வில்லை. நாங்கள் மிகவும் கீழ்மையான அந்தஸ்திலிருந்து வருகிறோம். எங்களுடைய குறைகளைத் திறந்து சொல்லவும் முடியாதவர்களாயிருந்து வருகிறோம். வேலை பார்ப்பதில் கூட நிம்மதியில்லை. எந்த சமயத்திலும் வேலையிலிருந்து நீக்கப்படலாம் என்ற கவலையும் அதிர்ச்சியும் எங்களை வாட்டி வருகின்றன. ஆரோக்கியம் பாதிக்கப் பட்டால் வேலை போய் விடுமே என்ற விசாரத்தால் நாங்கள் சதா திகில் கொண்டவர்களாயிருந்து வருகிறோம். விடுமுறை காலத்தில் நாங்கள் என்ன செய்கிறோம். என்பதை வேவு பார்க்கும் பொருட்டு கம்பெனியின் ரகசிய துப்பறிவாளர்கள் பின் தொடருகிறார்கள். அவர்களுடைய தவறான ரிப்போர்ட்டின் பேரில் அடிக்கடி நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டவர்களா யிருந்துவருகிறோம். பெரும்பாலான தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப் பட்டார்கள். அவர்களுடைய எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வருகிறது. தாய் நாட்டிற்குப் புறப்பட்டுச் செல்வதற்குக் கூட அவர்கள் வழிச் செலவுக்குப் பணம் பெறக் கூடாத நிலைமையிலிருந்து வருகின்றனர். மிகக் குறைந்த தொகையினர் தான் போனஸ், பென்ஷன், நஷ்ட ஈடு முதலிய சாதகங்களைப் பெறுகின்றனர். பெரும்பாலான தொழிலாளிகளுக்கு இச் சாதகங்கள் கிடையா. எல்லா எண்ணெய்க் கம்பெனிகளும் தொழிலாளிகள் சம்பந்தப்பட்ட வரையில் 3 வருடத்திற்கு 4 மாத ரஜா வீதம் அளிக்க வேண்டுமென சுற்றறிக்கைகள் வெளியிட்டிருக்கின்றன. ஒரு சில தொழிலாளிகள் விஷயத்தில் மட்டும் தான் ரஜா அளிக்கப்பட்டு வருகின்றன. வாரத்தில் ஞாயிற்றுக்கிழமை ஓய்வு அளிக்கப்படுவதால் அதிக சந்தோஷமடைகிறோம். ஆனல் அந்த நாளைக்குரிய சம்பள விகிதம் எங்களுக்குத் தரப்படுவதில்லை. இதற்காக நாங்கள் மிகவும் வருந்துகிறோம். மண்ணெண்ணெய்ப் பிரதேசத்தில் வேலை செய்வதால், மண்ணெண்ணெய்ப் புகையினுலும் மண்ணெண்ணெய் ஆவியினுலும் தொழிலாளர்கள் சுகாதாரத்தை யிழக்கின்றனர். காசம், இருமல் முதலிய வியாதிகள் தொழிலாளர்களிடத்தில் வியாபிக்கின்றன. அவ்வித வியாதிகள்

ஏற்படின், அந்தத் தொழிலாளியைக் கம்பெனியார் வேலையிலிருந்து நீக்கி விடும் சுபாவமுடையவர்களாயிருக்கின்றனர். இதனால் அந்தத் தொழிலாளியின் குடும்பமே சாப்பாட்டிற்குத் திண்டாட வேண்டியதாகி விடுகிறது. மருந்து வகைகளால் குணப்படுத்திக் கொள்ளக்கூடிய வியாதிகளேற்பட்டு அவ்வித நோயாளிகள் ரஜா கேட்கும் பட்சத்தில் அவர்களுக்கு ரஜா அளித்துதவுவதில்லை. ஒரேயடியாய் வேலையிலிருந்து நீக்கி விடுகின்றனர். எங்களுக்குக் கிடைக்கும் குறைந்த சம்பளத்திலிருந்து அரசாங்கத்தாருக்கு தத்தாமேடா என்ற வரியும் செலுத்த வேண்டியதாயிருக்கிறது. பர்மாவின் இதர பாகங்களுக்கும் இந்த வரி உண்டு, எனினும் மண்ணெண்ணெய்ப் பிரதேசத்தைச் சேர்ந்த எங்களுக்கு மிகவும் பளுவான சுமையாயிருக்கிறது. மண்ணெண்ணெய்ப் பிரதேசத்தில் அரசாங்க உத்தியோகஸ்தரொருவரை நியமித்து, தொழிலாளர்களுடையவும் கம்பெனியாருடையவும் நலன்களைப் பெருக்கி வரச் செய்து தரும்படி கோருகிறோம். எங்களுடைய குறைகளுக்குப் பரிகாரம் தேடிக் கொடுத்து தகுந்த சாதகங்களை யடையச் செய்வதில் அதிக பிரயாசை யெடுத்துக் கொள்ளுமாறு ஏழைத் தொழிலாளர்களாகிய நாங்கள், காங்கிரஸின் தலைவராகிய தங்களிடத்திலும் காங்கிரஸ் மகாசபையிடத்திலும் விண்ணப்பித்துக் கொள்கின்றோம்.

## ஜவஹரின் பதில்

தொழிலாளிகள் பிரச்னையில் தாம் அதிக சிரத்தையெடுத்துக் கொண்டு வேலை செய்வதாக ஜவஹர் பதிலளித்து விட்டு தொழிலாளர்கள் கூட்டத்திலிருந்து வெளியேறினார். அபோலோ சினிமா மண்டபத்திலிருந்து ஊஸோத்தெய்ன் வாசஸ்தல வரையிலும் பொது ஜனங்களால் ஜவஹர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். உள்ளூர் நகர சபையாலும் லேபர் காங்கிரஸாலும் ஜவஹருக்குப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன. அவற்றுக்குப் பதிலளிக்கும்போது

சுமார் 2 மணி நேரம் வரை இந்துஸ்தானியில் பேசினார். அதன் சாரம் வருமாறு:—

இந்தியரையும் பர்மியரையும் பிரித்து வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் பிரிந்துபோகவில்லை. இந்தியாவும் பர்மாவும் அடிமைப்பட்டிருக்கும் நாடுகளாகும். இவ்விரண்டு நாடுகளும் ஏகோபித்து விடுதலைக்காகப் பாடுபடுவது நலமாகும். "டோபமா" கொள்கையை நான் விரும்புகிறேன். காங்கிரஸின் கொள்கைக்கும் "டோபமா" கட்சியின் கொள்கைக்கும் வித்தியாசம் கிடையாது. இருந்தாலும் கூட பர்மாவின் சுதந்தரத்துக்காக பர்மியர் தான் பாடுபடவேண்டும். இந்தியாவை விடுவிக்க இந்தியர்களால் தான் முடியும்.

## ஊ வேஸாத் தெய்ன் பேச்சு

இவர் சிறிது நேரம் தான் பேசினார். நான் பிரிவினையை வெறுக்கிறவன். பர்மாவை இந்தியாவிலிருந்து பிரிவினை செய்வதை இந்தியரும் பர்மியரும் ஆதரிக்கவில்லை. ஆனால் பிரிட்டிஷ் சர்க்கார் பொது ஜன சம்மதத்திற்கு விரோதமாகவே பிரிவினை செய்திருக்கின்றனர். நில, நீர் தொடர்புள்ள இரு நாடுகளையும் பிரித்திருப்பது உண்மையில் பெயரளவிலேயே தான். இவ்விரு நாடுகளையும் பிரிப்பதற்குக் காரணம் கிடையாது. எனன்ஜவ்னில் மண்ணெண்ணெய் பெருவாரியாய் கிடைக்கிறது. மண்ணெண்ணெயானது மனித ரத்தத்துக்குச் சமமானதாகக் கருதப்படுகிறது. யுத்த காலத்தில் மிகவும் அவசியமானதாயிருக்கிறது. ஜவஹர் பர்மாவுக்கு விஜயம் செய்யும்போது மண்ணெண்ணெய்க் கிணறுகளைப் பார்க்காமல் திரும்பிச் செல்வது உசிதமல்லவென்று நினைத்துத் தான் நான் அவருக்குக் கடிதமெழுதி அழைப்பித்தேன்.

# ஜவஹர்-ஊஸ்லோ சந்திப்பு

## முக்கியமாய் விசாரித்த விஷயமாம்

"ஸன்" பத்திரிகையின் அரசியல் நிருபர்" எனப் படுபவர் ஒருவரால் சமீபத்தில் எழுதப்பட்டிருந்தது வருமாறு:—

இந்தியத் தலைவர் பண்டித ஜவஹர் பர்மாவை யடைந்தவுடன் மிகத் தெளிவாய் அறிந்து கொள்ள விரும்பிய விஷயம் ஒன்றே யொன்று. அதுதான் தபால் தந்திக் கட்டண உயர்வு. தபால் தந்திக் கட்டண உயர்வைப் பர்மியர்கள் எந்தக் காரணத்தை முன்னிட்டு ஆதரித்தார்களென்பதையும் பர்மியர்கள் இந்தியர்கள் மீது கொண்டுள்ள கருத்து வேற்றுமை அதிகரிப்பினால் அவ்விதம் ஆதரித்தார்களா என்பதையும் ஜவஹர் தெளிவாய் அறிந்து கொள்ள முற்பட்டார். ஜவஹர் "கல்கத்தா" கலொவ்ன் ஊஸ்ஸோவுடன் அரசியலைப் பற்றிப் பேசினார். அப்பொழுது மேலே கண்ட கேள்வியைக் கேட்பதன் மூலம் ஜவஹர் ஊஸ்ஸோவின் அபிப்பிராயத்தை யறிய பிரியப்பட்டார். அதன் பேரில் ஊஸ்ஸோ தெரிவித்ததாவது.--

1 இந்தியா பர்மா பிரிவினைக்குப் பின்னால் தபால் தந்தி இலாகாவிற்குப் பணத் தேவை யேற்படுகிறது. அதற்காக தபால் தந்திக் கட்டணம் உயர்த்தப் படுவதில் பர்மியர்கள் தங்கள் சம்மதத்தை யளிக்க வேண்டியவர்களானார்கள்.

2 மந்திரி சபை அமைப்பதில் பர்மியர்கள் தங்

களுக்குள்ளேயே பிரதிநிதி சபையில் போராடிக் கொண்டிருந்தனர். இதில் மிஸ்டர் ஹாஜியைத் தலைவராகக் கொண்ட இந்திய அங்கத்தினர்கள் பேசாது பார்த்துக் கொண்டிராமல் கூட்டுக்கட்சி (Coalition Party) யாருடன் சேர்ந்துகொண்டு ஆதரவளித்தார்கள். மந்திரி சபை அமைப்பதில் தோல்வியுற்ற கட்சியார் வஞ்சம் தீர்க்கும் நோக்கத்துடன் மிஸ்டர் ஹாஜியால் கொண்டு வரப்பட்ட அவசரத் தீர்மானத்தை ஆட்சேபித்தனர். இதனால் தபால் தந்திக் கட்டண உயர்வு மசோதா அங்கீகாரம் பெற்று நிறைவேறியது அதற்கு அதுவும் ஓர் காரணமாகும்.

எதிர் காலத்தில் பர்மியர்கள் இப்போதையதைப் போன்று அதிருப்தி கொள்ள இடமுண்டாவென ஜவஹர் கவலை கொண்டவர்போல் ஊஸ்ஸோவைப் பார்த்துக் கேட்டார். அதற்கு அவர், பர்மியர்கள் சம்பந்தப்பட்ட தனி விஷயங்களிலாவது பர்மியரைப் பாதிக்கக்கூடிய பிரச்னைகளிலாவது இந்தியர்கள் தலையிடாமல் ஒதுங்கி நிற்கும் பட்சத்தில் அவர்கள் மீது பர்மியர்கள் மேற்கொண்டு அதிருப்தி கொள்வதற்கு இடமில்லையெனத் தெரிவித்தார்.



பார்மா சுற்றுப் பிரயாணத்தில் கலந்து கொண்ட பாரிஸ்டர்
ஊச்சோமிபின்ட் ஜவஹர் வலது பக்கத்தில்
நிற்கிருர்.

டாக்டர் ராஜப்பாவின் பண முடிப்பு:—பிகாண் டெட் வீதியிலுள்ள டாக்டர் ராஜப்பாவின் மெடிகல் ஹாலுக்கு ஜவஹர் விஜயம் செய்து இரண்டு பணமுடிப் புகளைப் பெற்றுக்கொண்டார். ஜவஹர் விஜயத்தை யொட்டி ஹால், கொடிகளால் அலங்கரிக்கப் பட்டிருந் தது.

ரங்கூன் வங்காளிகள் சமூகத்தார்:—இச் சமூகத் தாரால் ஜவஹர் வரவேற்கப்பட்டார். அவர்களால் "தேஷ் பிராண்" (தேசத்தின் உயிர்) என்ற கௌரவப் பட்டம் ஜவஹருக்கு நல்கப்பட்டது.

# ரங்கூனில் ஜவஹர்

(18-5-37)-ந் தேதி பிற்பகல் 3-30 மணிக்கு, ஜவ ஹர் ஏனான்ஜவ்னி லிருந்து வந்து சேர்ந்தார்.

4 முதல் 5 மணி வரை, பர்மா இந்தியர் வர்த்தக சங்கத்தலைவர் திரு, எஸ். என். ஹாஜி ஜாகையில் ஜவஹ ருக்குத் தேநீர் விருந்து நடந்தது.

மாலை 6 மணிக்கு, ஜவஹர், மானேஜிங் உபசர ணைக் கமிட்டியாரைச் சந்தித்தார். இரவு 9 மணிக்கு திரு. மோகன்லால் காளிதாஸ் இல்லத்தில் கூடிய பர்மா மாகாண காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

## கீமந்தானில் பர்மியரின் வரவேற்பு

இரவு 8 மணிக்குக் கீமந்தான் ஸான்ஜவ்ன் பகுதி யைச் சேர்ந்த டோபமா சங்கத்தி னாதரவில் சுமார் இரு

பதினாயிரம் பேர்களடங்கிய பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இதற்கு அச்சங்கத்தின் தலைவர் தக்கீன் கோடோமையின் என்ற பர்மியப் பேராசிரியர் ஸயா லூன் தலைமை வகித்தார்.

கூட்ட ஆரம்பத்தில், தக்கீன் தெய்ன்அவ்ங், முதலாளித்வ கொள்கையையும் அபேதவாதக் கொள்கையையும் விளக்கிப் பர்மிய பாஷையில் பேசினார். மேலும் அவர் ஏகாதிபத்திய விஸ்தரிப்புக் கொள்கையை அடியோடு தொலைக்க வேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிட்டார். தக்கீன்கள் சிலர் சிறைச்சாலையில் பட்டினி கிடந்து வருவதைப் பற்றிய விபரங்களை தக்கீன் தெய்ன் மாங், தக்கின் லேமாங் இவர்கள் தெளிவாய்ப் பேசினார்கள்.

## தலைவர் பிரசங்கம்

பர்மியருக்குப் பூர்வமான இடம் டகவ்ங் (Taga--ung) என்றும் அதை நிருமாணித்தவர் அபிராஜனென்றும் அவர் இந்தியாவைச் சேர்ந்த இந்திய அரசனென்றும் முகவுரையில் பீடிகை போட்டுக்கொண்டு தலைவர் கீழ்க்கண்ட விதமாய்ப் பேசலானார்:—

புத்த பிரான் இந்தியாவில் பிறந்தார். அதற்காக நாம் இந்தியாவுக்கு நன்றி பாராட்டுகின்றோம். மகாத்மா காந்திஜீயவர்கள் அரசாங்கத்தாரோடு போராடிக் கொண்டு கடற் கரையிலே பொது ஜனங்களை உப்புக் காய்ச்சும்படி தூண்டினார். அதனால் பலர் கைது செய்யப்பட்டார்கள். உலகம் போற்றும் அவ் உத்தமப் பெரியாரைக் கைது செய்த அதே தினத்தில்தான் பர்மாவில் கடுமையான பூகம்பம் ஏற்பட்டது. இப் பூகம்பத்தால் பெகு (பக்கோ) என்ற ஊர் அதிகமாய்ப்

பாதிக்கப்பட்டது. அவ்வித சம்பவத்தை ஓர் நற்சகுன மென்றே கூறவேண்டும். பர்மாவைப் பிரிப்பதா இல்லையா என்ற பிரச்னையை யொட்டிப் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் பிரிவினையை யெதிர்த்து 5 லட்சத்துக்கும் அதிகமான வாக்காளர்கள் தங்களுடைய வோட்டுகளைக் கொடுத்தார்கள். அரசாங்கத்தார் பர்மாவை இந்தியாவி லிருந்து பிரித்து விட்டார்கள். அவ்விதம் இரு நாடுகள் பிரிக்கப்பட்டாலும்கூட சகோதர வாஞ்சையுடன் அன்யோன்யமாய் ஒருவர்க்கொருவர் சம்பந்தம் வைத்துக்கொண்டு அவ்விரு நாட்டின் மக்களாகிய நாம் வேலை செய்து வரவேண்டும்.

9-15 மணிக்கு, ஜவஹர் கூட்டத்திற்கு வந்து சேர்ந்தார். தக்கின் கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் அவரை வரவேற்று மேடைக்கு அழைத்துச் சென்றனர். ஜவஹருக்குத் தலைவர் ஸயாஜூனே அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. பின்னர், தலைவர் எழுந்து ஜவஹரைப்பற்றிச் சில வார்த்தைகள் கூறினார்.

பெரிய நண்பர் ஜவஹர் இப்பொழுது நம்மிடை வந்து விட்டார். அவருடைய வருகையால் அளவு கடந்த சந்தோஷ மடைகிறேன். அவருடன் கை குலுக்கிக் கொள்ளுவதை, மந்திரியாவதில் கொள்ளும் சந்தோஷத்தைவிட எவ்வளவோ அதிகமானது என நினைக்கிறேன். நான் இதற்கு முன்னே எந்த அரசியல் கட்சியிலும் சேரவில்லை. இந்தியாவைப் போன்று பர்மாவில் உண்மையான தலைவர்கள் கிடையாது. ஆனால் இப்பொழுது நாட்டிலே உயிரைத் தியாகம் செய்து உண்மையிலே தேசத்தொண்டு செய்ய ஆவல் கொண்டுள்ள இளைஞர்கள் கிளம்பி விட்டார்கள். எனவே நானும் அவர்களோடு சேர்ந்துகொண்டு நாட்டிற்குத்

தொண்டு செய்வதில் ஈடுபட்டிருக்கிறேன் எனச் சொல்லி ஆசனத்தில் அமர்ந்தார்.

## வரவேற்புப் பத்திரங்கள்

தக்கின் தெய்ன் மாங் என்பார், ஆங்கிலத்திலும் பர்மிய பாஷையிலும் முறையே வரவேற்புப் பத்திரங்களை வாசித்தார்.

ஜவஹர் எழுந்து அவற்றிற்கு ஆங்கிலத்தில் மிக அழகாக பதிலளித்தார். ஊபாஊ என்பவரால் அஃது பர்மிய பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டது.

## ஜவஹரின் பதில்

என்னை இந்தியாவின் தூதுவராகப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நாட்டிற்கு நான் புதியவனல்ல. இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் நீண்ட காலமாக நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. நல்லெண்ண மென்ற வெகுமதியை நான் பர்மாவுக்குக் கொண்டு வந்திருப்பதாகச் சொல்லுகிறீர்கள். புதிதாய் வரும் அந்நியன் எவனோ அவன்தான் இந்நாட்டிற்குவெகுமதியைக்கொண்டு வருவான். இந்தப் பன்னிரண்டு நாட்களில் ஆகாய விமானத்திலும் ரயில், கப்பல், மோட்டார் வண்டிகளிலும் பிரயாணம் செய்து பர்மாவின் பல பாகங்களையும் சுற்றிப் பார்த்தேன். சென்ற இடங்களிலெல்லாம் பர்மியர்கள் சிறந்த வரவேற்பை யளித்தார்கள். நேற்று மாலையில்த்தான் எனன்ஜவ்னிலிருந்து திரும்பி வந்தேன். பர்மா மண்ணெண்ணெய்க் கம்பெனியாரின் லாபமும் பங்குதார்களுக்குக் கொடுக்கப்பட்ட பங்கு வீதமும் பத்திரிகை

யில் வெளி வந்தன. அதைப் படித்துப் பார்த்தேன் பர்மாவின் மண்ணெண்ணெயால் பிரிட்டிஷ் முதலாளி கள் கொழுத்த லாபம் அடைகின்றனர். பணம் இருக் கப்பட விடத்திற்குத்தான் கொள்ளைக்காரர்கள் வரு வார்கள். மூலப் பொருள்களைக் கொண்டிருப்பது பர்மா நாடு. இன்று நமக்கு மண்ணெண்ணெயும் பெட் ரோலும் அவசியமா யிருக்கின்றன. பர்மாவில் இவை கிடைத்தும் கூட மலிவான விலைக்கு இங்கு விற் கப்படுவதில்லை. இங்கிலாந்தில் குறைந்த விலைக்கு விற் கப்படுகிறது. வரப்போகும் யுத்தத்திற்கு மிக அவசிய மாயிருப்பது மண்ணெண்ணெயாகும். பிரிட்டிஷ் முத லாளி வர்க்கத்தாருக்கு அதிக செல்வாக்குண்டு. அவர் கள் அரசாங்கத்தாருடன் போராடுவார்கள். ஆதலால், அவர்களுக்கு விரோதமாய் அரசாங்கத்தார் ஒன்றையும் செய்யத் துணியார்கள். நாட்டின் மூலாதாரமான பிரச்னைகளை நாம் விட்டு விட்டு சில்லரை விஷயங்களில் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

பம்பாய் கிளப்பில் உபசாரம்:—அதன் தலைவரும் அங்கத்தினர்களும் ஜவஹருக்கு விருந்துபசாரம் அளித் தார்கள். தேசீயக் கொடிகளால் கிளப்பின் மண்டபம் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது.

கோரக்-புரி சேவா சங்கம்:—இச் சங்கத்தாரை ஜவஹர் சந்தித்தார்.

19-5-37-ந் தேதி காலை 8-மணிக்கு, பவ்டோ வாசிகளின் வரவேற்பைப் பெற்றுக் கொள்வதற்காக அங்கு சென்றிருந்தார்.

9-10 மணிக்கு, கீமந்தான் தாடு ஆச்ரமத்திற்குச் சென்று, தாடு ஸயாடோ (Thadu Sayadaw) தலைமை பிக்ஷுவைப் பூஜித்தார்.

# சீரியத்தில் உபசாரம்

## புள்ளி விபரங்கள் நிறைந்த பத்திரம்

10-30 மணிக்கு, சீரியம் வாசிகளின் உபசரிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக ஜவஹர், துறைமுகத்தையடைந்தார். அவரை அழைத்துச் செல்வதற்கென தனிக் கப்பல் ஒன்று, யூனியன் ஜாக் கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இதைப் பார்த்தவுடன் ஜவஹர் மனம் சோர்வுற்றது. உடனே அவற்றை அப்புறப்படுத்த வேண்டுமெனச் சொன்னார். அவை யாவும் அப்புறப்படுத்தப் பட்டன. அப்பால் கப்பலில் ஏறிக் கொண்டார். சீரியம் வாசிகளின் வரவேற்புக் கமிட்டியின் தலைவரும் மாஜீ ஜீ. ஸி. பி. ஏ. பர்மிய மகா சபையின் தலைவருமான ஊஸா என்பவரால் அடியிற்கண்ட வரவேற்புப் பத்திரம் ஜவஹருக்கு வாசித்தளிக்கப்பட்டது.

### வரவேற்புப் பத்திரம்

தோழரே,

செல்வி இந்திரா தேவியோடு பெரியதோர் தொழிற்சாலைக்கு உறைவிடமாகிய சீரியத்திற்கு விஜயம் செய்திருக்கும் தங்களை மகிழ்ச்சிப் பெருக்குடன் வரவேற்கின்றோம்.

1927-ஆம் ஆண்டிலே பெல்ஜியம் தேசத்து பிரஸல்ஸ் நகரிலே முதலாவதாக

நடைபெற்ற, ஏகாதிபத்தியக் கொள்கையை விரும்பாதவர்களின் சர்வதேச மகாநாட்டிற்கு இந்தியாவின் பிரதிநிதியாக தாங்கள் விஜயம் செய்தீர்கள். அம் மகாநாட்டுக்குச் சென்று இந்தியாவுக்குத் தாங்கள் திரும்பி வந்தது முதல், அபேதவாதக் கொள்கையைப் பரப்புவதற்காகவும் இந்தியாவின் பூரண விடுதலைக்காகவும் சிறிதும் பொருட்படுத்தாமல் கஷ்டங்களை அனுபவித்தீர்கள். தாங்கள் தேசத்துக்காகச் செய்துவரும் இம் மகத்தான சேவையை நாங்கள் மிகவும் பாராட்டுகிறோமென்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். அவ்வித சேவையைத் தாங்கள் செய்ய ஆரம்பித்தது முதல் தேசியப் பிரசாரத்தில் புதியதோர் கொள்கையை ஸ்பஷ்டமாக வெளிப்படுத்திவிட்டீர்கள்.

பர்மாவை மண்ணெண்ணெய் முதலாளிகள் ஆட்சி புரிவதாக தாங்கள் சமீபத்தில் சொல்லியிருப்பதை நாங்களும் ஒத்துக்கொள்கிறோம். இதன் கீழே காட்டியுள்ள வர்த்தக சம்பந்தமான புள்ளி விபரங்களே அதற்குத் தக்க ஆதாரமாகும். 1932-33ஆம் வருடத்தில்பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதியான சரக்குகளின்பெறுமதி குறித்த புள்ளி விபரக் கணக்குப்படி 23 கோடியே 59 லட்சம் ரூபாய்கள் ஆகின்றன. அதில் பெட்ரோல், மண்ணெண்ணெய், மெஷின் ஆயில், மெழுகுவர்த்தி முதலியவைகளினால் மட்டும் 14 கோடியே 50 லட்சம் ரூபாய்கள்வரை கிடைத்திருக்கின்றன. இது 100-க்கு 61.6 விழுக்காடு வீதமாகிறது. அதே வருஷத்தில் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அரிசி, நெற்தானியங்களால் 6 கோடியே 92 லட்ச ரூபாய்கள் கிடைத்திருக்கின்றன. விகிதாசாரப்படி பார்த்தால் 29.3 விழுக்காடு ஆகிறது.

நம்மை ஆளும் பிரிட்டிஷார் தங்களுடைய மூல தனத்தால் மண்ணெண்ணெய்த் தொழிலை ஸ்தாபித்துக் கொண்டிருப்பதால் பர்மிய மக்கள் அடைய வேண்டிய அளவுக்கு நலன்களை யடையக் கூடாதிருக்கின்றனர்.

தாங்கள் அறிந்திருப்பது போலவே சாகுபடியி னால் கிடைக்கும் நெற் தானியங்கள் போன்ற விளை பொருள்களின் பெறுமதி சில சமயங்களில் சாகுபடி அறுவடைக்கான செலவுக்குங் கூடக் கட்டாமல் குறைச் சலாய்க் கிடைக்கிறது. இதனால் நெல், முதலிய தானியங் களை விற்பதால் விவசாயிகள் நன்மை யடையக்கூடாத வர்களாயிருக்கின்றனர்.

மேற்கண்ட புள்ளி விபரங்களைக்கொண்டு அரிசி வியாபாரம் செய்பவர்களுடன் மண்ணெண்ணெய்த் தொழில் செய்பவர்களுடைய நிலைமையை யொப்பிட்டுப் பார்க்கும் பட்சத்தில் வேறுபாடிருப்பதைக் கண்டறிய லாம். மண்ணெண்ணெய்த் தொழில் செய்பவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு ஒன்று வீதம் கூட இருக்க வில்லை. நூற்றுக்கு 3 விழுக்காடு வீதம் தானிருக்கிறது. பயிர்ச் சாகுபடி செய்பவர்களின் தொகையானது, நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது வீதம் இருந்து வரு கிறது. மிகக் குறைந்த எண்ணிக்கையுடைய வர்க்கத் தாருக்குச் சொந்தமான மண்ணெண்ணெய்த் தொழிலா னது, பர்மாவின் அரசியல் திட்டத்தைக் கட்டுப்படுத் திக் கொண்டிருப்பது பர்மாவின் துரதிருஷ்டமாகும். தாங்களும் வரிவாசிகள் கொடுத்து வருவதாக மண் ணெண்ணெய் முதலாளிகள் சொல்வார்கள். வர்த்தகத் துறையில் அந்த வர்க்கத்தாரை இதர வியாபாரிக ளுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, அந்த வர்க்கத்தார் அனுபவித்துவரும் அனுகூலங்களுக்குத் தகுந்தவாறு

அரசாங்கத்திற்கு வரி வாசிகள் செலுத்தி வருவதா யிருந்தால் மிக மிகப் பொருத்தமாயிருக்கும்.

ஏராளமான வருமானத்திற்குத் தகுந்தவாறு வரிகள் வாங்கப்படாமல் அந்த ஆதாயம் பூராவும் அப்படியே அயல் நாடு போய்ச் சேர்வதை ஏகாதிபத் தியக் கொள்கையுடைய சர்க்காரால்த் தான் பார்த்துக் கொண்டிருக்க முடியும். பெர்ஷியா அரசாங்கத்தார் அவ்விதம் எடுத்துச் செல்வதை ஆதரிக்க வில்லை. மண்ணெண்ணெய்த் தொழில் செய்யும் வர்க்கத்தார் சுலபமாய் வரி செலுத்த முடிகிறது. விவசாயிகள் வரி வாசிகள் செலுத்தி சந்தோஷகரமாய் வாழ முடியவில்லை. பர்மாவில் வெளிநாட்டுப் பணக்காரர்களும் ஏகாதிபத் தியக் கொள்கையுடையவர்களும் தங்கள் தங்கள் நன் மைக்காக உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள முயன்று வருவதைப் பார்த்துத் தாங்கள் ஆச்சரியப்படு வீர்கள். சீரியத்திலே தொழிலாளிகளுக்கென சங்கங்கள் இல்லாதிருப்பது மிகவும் வருந்தத் தக்கது. பணக்காரர் களால் தொழிலாளர்கள் சங்கம் என்பதாக பெயரள வில் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அதனல் பணக் காரர்களுக்கு மட்டும் சாதகம் உண்டு; தொழிலாளர்க ளுக்கு அதனல் குறிப்பிடத் தகுந்த நன்மைகள் கிடையா. தாங்கள் எங்கள் மத்தியில் வந்திருப்ப தால் தேசீய உணர்ச்சி அதிகரித்து அதனுல் தொழி லாளிகளாகிய எங்களுடைய உரிமைகளையும் நலன்களை யும் பாதுகாத்துக் கொள்ள முடியுமென நாங்கள் பெரி தும் நம்புகின்ருேம்.

மண்ணெண்ணெய், உலோகங்கள் முதலிய மூலப் பொருள்கள் மிகுந்த இந்த நாட்டில் தாங்கள் சிறிது நாட்கள் தங்கியிருப்பினும் கூட சந்தோஷகரமானவற்

ரைச் சதா காலமும் ஞாபகத்தில் கொண்டிருப்பீர்க ளென எதிர் பார்க்கின்றோம்.

[ குறிப்பு:—ஜவஹருக்குப் பத்திரம் வாசித்துக் கொடுத்தவர், முன்னே பிரிவினையைக் கண்டித்தவர், ஜி. ஸி. பி. ஏ. பர்மிய மகாசபைக்குத் தலைவராயிருந் தவர். பர்மா வட்டமேஜை மகாநாட்டிற்குப் பிரிவினை வேண்டாத கட்சியின் சார்பாகச் சென்று திரும்பிய வர். பிரிவினையை ஆட்சேபித்து இந்தியர்கள் தங்களுக் குப் பண உதவி செய்தார்களெனவும் பர்மாவின் அரசியல் வாதிகளிடை ஒற்றுமை கிடையாதெ்தன வும் பத்திரிகைகளில் அறிக்கை யொன்றை வெளியிட்டு விட்டு அரசியலிலிருந்து விலகிக் கொண்டவர். இப்பொ ழுது பி. ஒ. ஸி. கம்பெனியில் என்ஜினியர் உத்தியோ கம் பார்த்து வருகிறார். வயதில் மிக இளைஞர். ]

3-30 மணிக்கு, தமது ஜாகையில் ஜவஹர் நன் கொடைகளையும் பண முடிப்புகளையும் பெற்றுக்கொண் டார்.

உள்ளூர் குஜராத்தி சமூகத்தாரின் உபசரிப்பு:— ஜுபிலி ஹாலில் குஜராத்தி சமூகத்தார் ஜவஹ ரைச் சிறந்த முறையில் வரவேற்றார்கள். ஜவஹர் பண முடிப்பு நிதிக் கமிட்டியின் தலைவர், மெஸர்ஸ் நான்ஜீ ஷாம்ஜீ அண்டு கம்பெனியைச்சேர்ந்த திரு. ஷம்ஜீபாய் வரவேற்புக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். பர்மா இந்திய வர்த்தக சங்கக் காரியதரிசி திரு. கே. எம். தேசாய் குஜராத்தியில் வரவேற்புப் பத்திரத்தை வாசித்தார். காங்கிரஸ் நிதிக்குப் பணம் கொடுத்தவர் களின் பெயர்கள் அவரால் படிக்கப்பட்டன. ஜவஹர் பண முடிப்பு நிதிக்கு மொத்தம் 39,081 ரூபாய்கள் சேர்ந்திருந்தன. சில தங்க மோதிரங்களும் வளையல்

களும் ஏலத்தில் விடப்பட்டு அவற்றால் 267 ரூபாய்கள் கிடைத்தன. மீஞ்சான் வாசிகளின் சார்பாக 50 ரூபாய்களடங்கிய பண முடிப்பொன்று ஜவஹரிடம் அளிக்கப்பட்டது. ஜவஹர் அளித்த பதிலில், பர்மாவிலுள்ள இந்தியர்கள் காங்கிரஸிற்குப் பொருளுதவி செய்யும்படி கேட்டுக்கொண்டு ஒத்துழையாமை இயக்கத்தில் குஜராத்தி சமூகத்தார் பங்கெடுத்துக் கொண்டதை உதாரணமாகச் சொன்னார். இந் நாட்டு மக்களுடன் நேசப்பான்மையுடன் அமைதியாயும் சேர்ந்து வாழ்க்கை நடத்த வேண்டுமென்று கூட்டத்திலிருந்தவர்களுக்கு உபதேசித்தார்.

பர்மா சுற்றுப்பிரயாணத்தின் போது பல இடங்களிலும் ஜவஹரையும் அவருடைய குமாரியையும் சேர்த்து ஜாஸு ஸ்டுடியோக்காரரால் எடுத்த புகைப்படங்களின் ஆல்பம் ஒன்று, ஜவஹருக்கு அந்த ஸ்டுடியோ சொந்தக்காரரால் வெகுமதியாகக் கொடுக்கப்பட்டது. அதுவும் ஏலத்தில் விடப்பட்டது. அதற்கு நல்ல கிராக்கி. இறுதியில் அதை சேத் விரஜலால் நாரண்தாஸும் சேத் ஷாம்ஜீபாயுமாக 982 ரூபாய்களுக்கு ஏலத்தில் எடுத்தனர். நாற்பதினாயிரத்துக்கு அந்தத் தொகை தான் தேவையாயிருந்தது.

மாஜீ சக்கிரவர்த்தி பகதூர் ஷாவின் தர்காவுக்கு விஜயம்—தியேட்டர் ரோட்டுக்குச் சமீபத்தில் மாஜீ டெல்லி சக்கிரவர்த்தி பகதூர் ஷாவை அடக்கம் செய்துள்ள தர்காவுக்கு ஜவஹர் விஜயம் செய்தார். அங்கே தர்கா டிரஸ்டிகள் நன்கு அவரை வரவேற்றனர். தர்காவைச் சுற்றிப் பார்வையிட்டுவிட்டு டிரஸ்டியாரோடு வெகு நேரம் வரை சம்பாஷித்தார். தனிப்பட்டவர்களின் உரிமையிலிருந்து அப் புனித

இடத்தைத் திரும்பப்பெறுவதில் உள்ளூர் முஸ்லீம்கள் காட்டிய விடா முயற்சியை அவர் பாராட்டினார்.

செட்டியார் சமூகத்தார்களின் பண முடிப்பு:-பர்மா பிரதிநிதிசபையின் அங்கத்தினர் திரு. அ.மு.மு. வெள்ளையன்செட்டியார் தலைமையில் செட்டியார் சமூகத்தார், ஜவஹருடைய ஜாகைக்குச் சென்று அவரைச் சந்தித்தார்கள். ஜவஹருக்கு மாலையிட்டு 3001 ரூபாய் களடங்கிய பண முடிப்பொன்றை அளித்தார்கள்.

# அரசியல் தலைவர்

## "நியூ பர்மா"வின் அபிப்பிராயம்

மே மாதம் பதின் மூன்றும் தேதியன்று உவாக்கமா வாசிகள் அளித்த வரவேற்பின் போது, பர்மாவின் அரசியல் தலைவர்களைப்பற்றிய தமது அபிப்பிராயத்தை ஜவஹர் வெளியிட்டுச் சொல்லியுள்ளார். ஜவஹருடைய பதிலில், "என்பொருட்டுப் பத்திரங்கள் வாசித்தளித்ததற்காக நான் உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். படித்தளிக்கப்பட்ட பத்திரங்களில் என்னைப் பல விதமாய் சிறப்பித்தும் புகழ்ந்தும் இருக்கின்றீர்கள். நீங்கள் போற்றி அவ்விதம் எழுதியிருப்பதால் அவை உண்மையா யிருக்க முடியுமா? எனச் சந்தேகப்படும்படி செய்து விட்டது. பல வித கஷ்டங்களுக்கு நான் ஆளாகியிருப்பதாகப் பாராட்டுகிறீர்கள். பலரால் கஷ்டமென்று நினைக்கப் படுவது எதுவோ அதை விடுதலைப் போராட்டப் பிரியர்களாகிய நாங்கள் அபேட்சிப்பதில் சந்தோஷமடைகின்றோம்." என்ற வார்த்தைகள் காணப்படுகின்றன. சுதந்தரப் போரில் ஏற்படக் கூடிய துக்கங்களனைத்தையும் சுகமாகப் பாவிக்கிறேன் என ஜவஹர் கூறியிருப்பதை பர்மாவிலுள்ள அரசியல் வாதிகள் ஆழ்ந்து கவனிப்பது அவசியமாகும். சொல்லற்கரிய கஷ்டங்களை யனுபவித்து அபாரமான தியாகங்களைச் செய்து நாட்டிற்குத் தொண்டாற்றியுள்ள அரசியல் வாதிகளின் எண்ணிக்கை நமது நாட்டில் இன்னும் குறைவாகவே இருந்து வருகிறது. இரண்டொரு தடவைகள் சிறைப்பட்ட மாத்திரத்தில் மனம் ஒடிந்து தேச சேவை புரிவதிலிருந்து விலகி நிற்கும் அரசியல்

வாதிகளின் எண்ணிக்கையில் மட்டும் குறைவில்லை தங்களுடைய உத்தேசம் கோரிக்கை கைகூடாததால் "கூதோ டபேஙய்யே டபெய்தா" (ကုသိုလ်တော် ရဲ့ ဘဝိသာ) தேசீய சேவையில் ஒரு அணு தர்மமும் ஒரு வீசை பாபமும் நிறைந்திருப்பதாகச் சொல்லி அரசியலைத் துறந்து விட்டிருப்பவர்கள் ஜவஹர் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டு வெட்கப்பட வேண்டியவர்களா யிருக்கின்றனர்.

பர்மாவில் அதன் லட்சியம் மறைந்து கொண்டிருப்பதாயும் அதிலும் தலைவர்களைத் தம்மால் பார்க்க முடியவில்லை யென்பதாயும் அதற்காகத் தாம் விசனிப்பதாயும் ஜவஹர் மொழிந்துள்ளார். பர்மாவின் இப்போதைய நிலைமையை நன்கறிந்தவர்கள் ஜவஹரின் வார்த்தைகளை ஒப்புக் கொள்ளவே செய்வார்கள் என்பதில் சந்தேகமே கிடையாது. பர்மாவில் அரசியல் வாதிகள் எவ்வளவோ அவ்வளவுக்கு அரசியல் கட்சிகளின் எண்ணிக்கைக்கும் பஞ்சமில்லை. ஆனால், எந்த ஒரு கட்சிக்கும் நாட்டில் நல்ல செல்வாக்குண்டு எனச் சொல்லிவிடுவதற்கில்லை. தலைவராயிருக்கப் பிரியங் கொள்பவர்களின் எண்ணிக்கைக்குக் குறைச்சலில்லை. அப்பதவிக்கு வேண்டிய உயர்குணங்கள் நிறைந்த சீலர்கள் தான் கிடையாது. நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்ற தலைவர்கள் இன்னின்னார் எனச் சுட்டிக் காட்டவும் வகையில்லாதவர்களா யிருக்கிறோம். தலைவர்களைக் காணேனென ஜவஹர் சொல்லியிருப்பது இவ் விஷயத்தில் உண்மையாகவே இருக்கிறது. பர்மாவில் அதன் லட்சியம் காணப்படவில்லையென ஜவஹர் கூறியுள்ளார். அதை மறுக்கக் கூடியவர்கள் இருக்க முடியாது. சுயேச்சை பெறுவது தங்களின் லட்சியமென ஒவ்வொரு அரசியல்வாதியும் ஒவ்வொரு கட்சி

யாரும் சொல்லிக்கொள்கின்றனர். ஆனால் அவர்களுடைய செய்கையைப் பார்க்கும்பொழுது, நாட்டின் விடுதலையைவிட தங்களின் சொந்த நன்மைக்காகப் பாடுபடக் கூடியவர்கள் அதிகமாயிருப்பதைக் காண்கிறோம். கட்சிகளுக்குள் ஒற்றுமையில்லாமல் ஒருவர்க்கொருவர் வசை பாணம் தொடுத்துக்கொள்கின்றனர். ஒருவரையொருவர் திட்டிக் கொள்கின்றனர். சுய நலம் கருதுபவர்கள் தான் இம்மாதிரி நடந்துகொள்வார்கள். ஒவ்வொரு அரசியல்வாதியும் ஒவ்வொரு கட்சியாரும் நாட்டின் விடுதலை யொன்றையே தங்களுடைய லட்சியமெனக் கொண்டு உண்மையில் சேவை செய்யும் பட்சத்தில் தேசீயக் கட்சிகளிடை ஒற்றுமை கண்டிப்பாய் ஏற்படத்தான் செய்யும். அவ்விதம் ஏற்பட்டால் நாட்டின் முன்னேற்றத்துக்காக உருவான வேலைகளை அவர்கள் சரியாய்ச் செய்வார்கள். தலைமைப் பதவிக்குப் போராடிக் கொண்டிருப்பது பர்மாவின் அரசியல் வேலையைத் தடைப்படுத்திவிடக் கூடியதோர் பிரச்னையாயிருந்து வருகிறது.

தலைவராவதை விரும்புபவர்கள் தலைவருக்கு வேண்டிய ஒழுக்கம் யோக்யதை முதலியவை தங்களிடத்தில் நிறைந்திருக்கிறதா வென்பதைக் கவனிப்பதில்லை. ஒவ்வொரு கட்சியிலும் தலைவர் பதவியை அபேட்சிப்பவர்கள் நாலைந்து பேர்கள் வீதம் இருந்து வருகின்றனர். இக்காரணத்தால் கட்சிப் பிளவுகள் ஏற்பட்டு, பல கட்சிகள் தோன்றியிருக்கின்றன. இதைப்பற்றி அரசியல்வாதிகள் கவனிக்க வேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது. ஒரு வருடத்துக்கு முன்னே தலைவருக்கு இருக்க வேண்டிய யோக்யதையைப்பற்றி ஜவஹர் சொல்லியுள்ளவைகள் இன்னும் நமது ஞாபகத்திலிருந்து வருகின்றன. தலைவர் பதவிக்கு யோக்யதையுடைய ஒருவர், தம்மைத் தலைவராகத் தெரிந்

தெடுக்கும்படி சொல்ல முற்படார். பலருடைய அபி மானத்தால் அவர் தலைவராகத் தெரிந்தெடுக்கப்படு வார். பிறரைத் தூண்டியும் வற்புறுத்தியும் தலைவர் பதவியைப் பெறுமல் பலரால் தேர்ந்தெடுக்கப்பெற்ற தலைவரா யிருக்கும் பட்சத்தில், அவரைப் பின்பற்று பவர்கள் அதிகமாயிருந்து வருவார்கள். தலைவருக்கும் அவர்களிடத்தில் செல்வாக்கு இருக்கும். இவற்றை பர்மாவிலுள்ள அரசியல்வாதிகள் கவனிக்கும்பட்சத் தில், சமீபத்தில் சிறந்த அரசியல் தலைவர்கள் ஏற் படலா மென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேம்.



(17—5—37) ஏஞன்ஜவ்னில் ஜீ. வி. பி. ஏ. பர்மிய மகா சபையின் மாஜி தலைவரான ஊலோத்தெய்ஞேடு, ஜவஹர், இந்திரா உட்கார்ந்திருத்தல்.



மலேயா செல்லு முன்பு ரங்கூன் துறைமுகத்தில் ஜவஹர் விடை பெற்றுக் கொள்ளுதல்.

# அன்பார்ந்த பர்மியர்களுக்கு எனது செய்தி

(20-5-37)ந் தேதியன்று ரங்கூனிலிருந்து பினங்குக்குப் புறப்படுமுன் ஜவஹர் விட்ட அறிக்கை யாவது:—

பர்மா ஆடவரும் பெண்டிரும், பர்மியர்களும் இந்தியர்களும் என்னை எவ்வளவு நேர்த்தியாக உபசரித்தீர்கள்! இந்திய தேசீய காங்கிரஸிலிருந்து நல்லெண்ணத்தைக் கொண்டு வரும் தூதனாக நான் உங்களிடம் வந்தேன். திரும்ப எங்களுடைய ஜனங்களும் அதே சிநேக பாவத்தையும் நல்லெண்ணத்தையும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் நீங்கள் எனக்குக் காட்டிய அபரிமிதமான அன்பு என்னை மயக்கி விட்டது. உங்களை விட்டுப் பிரியும் காலம் இப்பொழுது வந்து விட்டதால் உங்களை விட்டுப் பிரிய எனக்கு மிகவும் வருத்தமா யிருக்கிறது. இந்த அழகான தேசம் நேர்த்தியாகவும் இன்பமாகவுமிருக்கிறது; ஆனால் இத்தேசத்தின் மக்கள் இன்னும் அதிக இன்பகரமாகவும் மனோரஞ்சித முள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களுடைய பிரகாசமுள்ள இளமுகங்களும் புன்னகை தவழும் அவர்களுடைய ஸ்திரீகளின் முகங்களும் கண்களுக்கு வெகு இன்பமாக விருக்கின்றன.

## எங்கள் பொறுப்பு

இந்தியாவிலுள்ள எங்கள் பேரில் ஒரு பெரிய பொறுப்பு சுமத்தப் பட்டிருக்கிறது. ஏனெனில் எதிர்காலத்தில் சந்தோஷமில்லாத எங்களது லக்ஷக்கணக்கான மக்கள் ஒரு பெரிய பாரத்தை வகிக்க வேண்டியவர்களாகிருர்கள். தைர்யமான புன்சிரிப்பைக் கொள்வது எப்பொழுதும் சுலபமல்ல; ஏனெனில் அத்தனை கஷ்டமும் துன்பமும் நம்மைச் சூழ்ந்திருக்கின்றன. நான் அதிகம் களைத்து ஆர்வம் சோர்ந்தவனாய் உங்களிடம் வந்தேன்; ஆனால் உங்களுடைய சந்தோஷகரமான உத்சாகம் அக்களைப்பைப் போக்கி விட்டது. நான் சுமக்க வேண்டிய சுமையின் பாரத்தை இலேசாகச் செய்து விட்டது. உங்களின் வாய்மொழியான உறுதிமொழியைக் காட்டிலும் உங்களுடைய கண்களே உங்களுடைய சிநேக பாவத்தை நன்ருக அறிவித்து விட்டது. அந்த ஒற்றுமையை யாரால் முறிக்க முடியும்? நாம் ஒருவருக்கொருவர் பிரிந்திருக்கிருேமென்று யார் தைரியமாகச் சொல்லுவார்கள்.

## பர்மா பிரிவினை

பர்மா பிரிக்கப் பட்டுவிட்டது. அதனுலென்ன? ஒரு அன்னிய நாடு செய்த இச்சிறிய காரியமானது நமக்குள் என்ன வித்தியாசத்தை ஏற்படுத்தி விடப் போகிறது? வெகு காலமாக நமக்குள் உள்ள பந்தங்களை

யும் தற்போதைய பந்தங்களாகிய பரஸ்பர நன்மைக்காக நடத்தும் பொது விடுதலைப் போராட்டத்தையும் எதிர் காலத்தில் ஏற் படப்போகும் பிரகாசமுள்ள பந்தங்களையும் இது என்ன செய்துவிடப் போகிறது. இந் தியா அடிமைத் தனத்தில் ஆழ்ந்திருந்தும் அதற்குத் தாழ்வான நிலைமை ஏற்பட்டிருந் தும் எவ்வளவோ உத்கிருஷ்டமான புத்திரர் களையும் புத்திரிகளையும் அது சிருஷ்டித்திருக் கிறது. இந்த வயதடைந்த தாயார் தன்னு டைய குழந்தைகளிடம் வெகு அன்பாக விருக்கிறாள். தன்னுடைய சகோதரனாகிய பர்மாவுக்கு அவள் விலையுயர்ந்த சன்மானத் தைச் செய்திருக்கிறாள். 2000 வருஷங்க ளுக்கு முன்னிருந்தும் அதற்குப் பிறகு வெகு காலமாகவும் அதே அடிமைத் தன மாகிய கதிக்கு நாமும் ஆளாகிவிட்டோம். துன்பமும் கஷ்டமும் நம்மை நன்றாகப் பிணைத்துவிட்டது; துக்கமாகிய இந்தப் பள் ளத்தாக்கிலிருந்து நாம் ஒன்று சேர்ந்து வெளி வருவோம்.

## பர்மாவில் இந்தியர்கள்

ஏராளமாக இந்தியர்கள் பர்மாவுக்கு வந்து குடியேறிவிட்டார்கள்; சிலர் செழிப் புள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனால் பெரும்பான்மையோர் ஏழைகள், சுரண்டப் படும் தொழிலாளரும், குடியானவருமாவார். அவர்களது நிலைமையும் பர்மியத் தொழி லாளர், குடியானவனது நிலைமை போன் றதேயாகும். பல இந்தியர்கள் இந் நாட்

டைத் தங்களுடைய சொந்த நாடாகக் கொண்டு விட்டனர். மற்றுமுள்ளவர்களுக்கு இது சுவீகார பூமியாகும். பர்மா செழிப்படைந்தால்தான் மேற்கண்ட இருவருக்கும் இன்பம். பர்மாவின் துன்பம் அவர்களுக்கும் துன்பமும், வருத்தமுமாகும். இந்நாட்டு மக்களின் நலன்களும், மேற்கண்டவர்களின் நலன்களும் அதிகமாக ஒன்றுக்கொன்று பிணைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இருவருக்குள்ளும் வேற்றுமை எவ்விதம் ஏற்படும்?

எங்களுக்குச் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களிலும் இந்திய ஜனங்களின் நலன்களே முக்கியமாக விருக்கவேண்டுமென்று இந்தியாவிலுள்ள நாங்கள் பாத்யதை கொண்டாடுகிறோம். இந்த நலன்கள் இன்னவென்பதை அவர்கள் தான் முடிவாகத் தீர்மானிக்க வேண்டும். அதே போன்று பர்மாவிலும் பர்மிய பாமர மக்களின் நலன்களே பிரதானமாக விருக்க வேண்டும். அவர்களுடைய நலன்கள் சம்பந்தமாக அவர்களே முடிவான தீர்மானங்களைச் செய்ய வேண்டும்.

## உலக நிலை

உலகம் இப்பொழுது கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. ஏராளமான பிரச்னைகள் நம்மை எதிர்த்து நிற்கின்றன. எங்கு பார்த்தாலும் ஒரே நெருக்கடி. விக்கினங்கள் அபரிமிதமாக விருக்கின்றன. இப்பிரச்னை

களை நாம் எப்படித் தீர்ப்பது? நமக்கு ஆபத்து வருமென்பதைக்கூட கவனியாமல் நாம் இவற்றை திரஸ்கரிக்கிறோம். சிறிய மனிதர்களும், சிறிய தேசங்களும் வாழ்வின் அல்ப விஷயங்களில் ஈடுபட்டு, பெரிய விஷயங்கள் வரும்போது அமிழ்ந்து விடுகின்றன. ஆனால் விவேகியும், தைரியசாலியும் விஷயங்களைத் தீர்க்கமாக ஆழ்ந்து யோசித்து ஒரு பெரிய நியமத்திற்குத் தங்களுடைய தேசத்தைத் தயார் செய்கிறார்கள். இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் அந்த நியமம்தான் வழிகாட்டும் குறியாகவிருக்கும். எவ்வளவு கஷ்டங்கள் நேர்ந்தாலும், நாம் ஒன்றுபட்டு அக்குறியைப் பின்பற்ற வேண்டாமா? நமது பாமர மக்கள் விடுதலை யடைவதற்கு நாம் ஒற்றுமையுடன் ஒருவருக்கொருவர் உற்சாகத்தை மூட்டிக் கொண்டு வேலை செய்ய வேண்டாமா? ஆகவே தோழர்களே உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்ளுகிறேன். உங்களுக்கு நல்லதிர்ஷ்டம் உண்டாகுமாக! நம்முடைய தேசங்கள் நம்மிடமிருந்து எதிர்பார்க்கும் ஊக்கமும், விவேகமும், விடா முயற்சியும் நமக்கு ஏற்படுமாக!

464

The Chettiars' Press, Rangoon.